THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, the 5th September 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

"The Hindu"

* 1 *S.N. Q.*—SRI P. G. KARUTHIRUMAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government are aware of the charge made by the newspaper "The Hindu" that the Police did not give protection to their employees when they needed it and that they were obliged to suspend publication;

(*b*) whether it is a fact that the Police failed to discharge their duties in the matter of the incidents relating to the strike by certain employees of "The Hindu";

(*c*) whether the Government are aware of a pamphlet issued by "The Hindu" explaining the circumstances under which "The Hindu" had to suspend publication; and

(*d*) if so, what the Government have to say with reference to the comments contained in the pamphlet?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir.

(*b*) No, Sir.

(*c*) Yes, Sir.

(*d*) In their pamphlet entitled "Why 'The Hindu' suspended publication", the management of "The Hindu" have made several comments in respect of the strike by some of its employees. I take it that the Member is referring to the main criticism contained therein that the Police failed to give protection to the large section of the willing employees of "The Hindu". The Government consider this criticism incorrect. In this case, as in other similar cases, the Government have strictly adhered to their policy in regard to maintenance of law and order, where picketing by labour is involved. and which has been established for a long time. The Government have always had and continue to have the primary responsibility in regard to the maintenance of law and order. This responsibility includes not only the protection of life and property against violence of any kind, but also the maintenance of traffic and the normal life of the community. At the same time, the

[5th September 1958

forces of law and order at the disposal of the Government are not to be utilized for the suppression of strikes or picketing, provided they are peaceful and in strict consonance with the law and regulations. This policy has been laid down as early as 1946, when Government issued a press communique in regard to the limits of peaceful picketing by workers. There has been no deviation from this policy in the present case.

I wish particularly to point out that the insinuation made against the Labour Minister regarding the incidents in the pamphlet published by "The Hindu", is to say the least, mischievous and without any foundation. With regard to the actual events and their sequence, a statement[a] is placed on the table of the House.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, is it not a fact that quite a large number of complaints were made to the Police by the staff but the Hon. Minister for Finance yesterday told us in this House that there were only two complaints made to the Police?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that whatever complaints had been made to the Police, the Police has taken all of them for investigation and necessary action.

THE HON. SRI C. SUBRAMANIAM : I may also tell the hon. Member that there were only two complaints made to the Police. I am correct.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, ஹிந்து பத்திரிகையாளர்களுக்கும் கனம் தொழில் அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் அவர்களுக்கும் ஏற்பட்ட தனிப்பட்ட கருத்து வேற்றுமை காரணமாகவே இந்த வேலை நிறுத்தம் வந்ததாகவும், அதனால் ஹிந்து பத்திரிகை தொழிலாளர்கள்பழி வாங்கப்பட்டார்கள் என்று சொல்லப்படுவதும் உண்மைதானா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் சொல்வது முற்றிலும் தவறு.

SRI M. KALYANASUNDARAM : தொழிற் சங்கத்திலிருந்து சர்க்காருக்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா ? தொழிலாளர்களை போலீசார் தடியால் அடித்தார்கள் என்று புகார் வந்துள்ளதா ? எவ்வளவு தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள் ? எவ்வளவு தொழிலாளர்கள் மீது கோர்ட்டுகளில் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : போலீசார்கள் அத்து மீறி தொழில் சங்கத்தின் மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டதாக புகார் வந்திருக்கிறது. அதையும் பரிசீலனை செய்யவேண்டும். இப்பொழுது சமர்ப்பிக்கப்பட்ட பேபரில் நடந்த விவரங்களைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதற்கு மேல் என்னிடம் ஒன்றும் இல்லை. எவ்வளவு பேர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்பதற்கு இதை விட விசேஷமான தகவல் ஒன்றும் என்னிடம் இல்லை.

---

[a] Printed as Appendix I on pages 295–297 infra.

5th September 1958]

SRI K. VINAYAKAM : Sir, whereas the Government are aware of the pamphlet issued by the proprietors of " The Hindu " which paints a picture of their own, are they also aware of the fact that the striking workers have also issued a pamphlet on the actual facts of the strike and is it in possession of the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not know whether it is the report of the actual facts but the Government have also received a copy of the statement that has been issued by the workers on behalf of the workers.

SRI A. GOVINDASAMY : இந்த சம்பவங்களைப்பற்றி முழு விசாரணை செய்வதற்கு ஒரு ஜுடிஷியல் என்கொயரி கமிட்டியை இந்த அரசாங்கம் நியமிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த சம்பவங்களைப் பற்றி விசாரணை செய்வதற்கு ஒன்றுமில்லை. நடந்த விவரங்களைப்பற்றி அரசாங்கத்தின் தகவல்படி இப்பொழுது இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அதை கனம் அங்கத்தினர்கள் கவனித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதற்குமேல் விசாரணை செய்வதற்கு ஒன்றும் இல்லை என்பதை கனம் அங்கத்தினர்கள் அவர்களே இந்தப் பேபரிலிருந்து ஒத்துக்கொள்ளுவார்கள்.

SRI T. SAMPATH : Will the Government be pleased to place the report of the Police about the incidents and other matters concerned with the strike on the table of the House?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think that it is right to place all such reports on the table of the House.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Government define their attitude on picketing during a strike when it takes a violent form?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Police does not permit and the Government would not permit any violence even in the case of picketing. Only non-violent picketing is permitted but if violence is caused, there are so many ways of dealing with it by the police. One party might expect the police to take particular action but it is for the Police to take note of the circumstances of the case and the exigencies of the situation and then decide how to deal with the situation. There had been a good lot of misapprehension and ill-informed criticism about the attitude and action of the police, for instance, with regard to the incidents relating to the firing in Valparai. A commission of enquiry went into the whole case and they found the Sub-Inspector of Police at fault for having arrested the leader of the Workers' Union there. There is nothing wrong in arresting him but the finding of the commission of enquiry was that the Sub-Inspector should not have arrested him at that spot and at that time. He should have waited and should not have taken that indiscreet action. I think we have taken suitable action against the Sub-Inspector for that indiscreet act of his. These are the limits under which the police has to act.

[5th September 1958

SRI S. LAZAR : ஸார் மானேஜ்மெண்டார் தங்களுடைய கட்சியையும், தொழிலாளர் தங்களுடைய கட்சியையும் எடுத்துச் சொல்லக்கூடிய நேரத்தில் சர்க்காரை குறை கூறிக்கொண்டும், அதிலும் குறிப்பாக தொழில் அமைச்சரை குறை சொல்வதுமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை மறுத்து கனம் அமைச்சர் அவர்களுடைய நிலைமையை விளக்கி ஒரு ஸ்டேட்மெண்டை கொடுக்க அரசாங்கம் முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது சமர்ப்பிககப்பட்ட ஸ்டேட்மெண்டையும், இதுவரையிலும் நான் கொடுத்த பதிலையும் கனம் அங்கத்தினர்கள் கவனித்திருப்பார்கள் அதை விட வேறு ஒன்றும் சொல்வதற்கு இல்லை, சொல்லவேண்டிய அவசியமும் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

SRI K. RAMACHANDRAN : தொழில் சங்கம் கொடுத்த ஸ்டேட்மெண்டும் மானேஜ்மெண்டார் கொடுத்த ஸ்டேட்மெண்டும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்திருக்கும் என்று நினைக்கிறேன். அவைகளில் மானேஜ்மெண்டாருக்கு போலீஸ் உதவியாக இருந்தார்கள் என்று தொழிற் சங்கமும், தொழிற்சங்கத்திற்கு போலீஸ் உதவியாக இருந்ததாக மானேஜ்மெண்டும் குற்றம் சாட்டுவதாக தெரியவருகிறது. அதே சமயத்தில் மானேஜ்மெண்டுககு உதவியாக போலீஸ் வரவில்லை என்று சொல்லப்படுகிறத. இவற்றில் எது உண்மை என்பது தெரியவில்லை. அதனால் போலீஸார் நடவடிக்கையைப்பற்றி தனிப்பட்ட முறையில் விசாரிகக அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : என்ன நடந்தது என்பதைப்பற்றிய விவரங்கள் இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அதை கனம் அங்கத்தினர்கள் கவனித்திருப்பார்கள் என்றே நினைக்கிறேன். அதற்கு மேல் விசாரணை நடததுவதறகு ஒன்றும் இல்லை என்பதை மீண்டும் சொல்ல விரும்புகிறேன்.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, சட்டத்திற்கு விரோதமாக யார் நடவடிக்கை எடுத்தாலும் அதைத் தடுக்க போலீஸ் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்று நேற்றையதினம் சர்க்கார் தரப்பில் கனம் சுப்பிரமணியம் அவர்களும், இன்றையதினம் அதே அமைச்சரும், போலீஸ் அமைச்சரும் குறிப்பிட்டார்கள். ஆனால் ஆகஸ்ட் மாதம் 5-ம் தேதி யன்று நடந்த ரோட்டரி கிளப் கூட்டத்தில் தொழில் அமைச்சர் ஆர். வெங்கட்ராமன் அவர்கள் ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் இரு சாராருககும் தகராறு ஏற்படுகிறபோது . . . .

MR. SPEAKER : The hon. Member should not refer to anything happening outside the House, viz., in the club. He must confine his remarks to what is happening inside this House. Therefore, I rule this question out of order.

SRI V. SANKARAN : Is it a fact that some written instructions were issued to Police at the end of the first day, consequent on which the attitude of the Police and the method of tackling the situation changed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is totally incorrect to say that either written or oral instructions like that had been issued to the Police.

SRI M. KALYANASUNDARAM : இந்தத் தகராறு சுமுகமாகத் தீர்ந்த பிறகும் கூட, சில அடி ஆட்களை வைத்துக்கொண்டு தொழிலாளர்களை நிர்வாகஸ்தர்கள் பயமுறுத்துகிறதாக போலீசாருக்குப் புகார்

5th September 1958]

வந்தது உண்டா? அது சம்பந்தமாக கையும் மெய்யுமாக பிடித்துக் கொடுத்து சில ஆட்கள் கைது செய்யப்பட்டிருப்பதும் உண்மையா? அப்படிப் பட்டவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுத்தது உண்டா?

THE HON SRI M. BHAKTAVATSALAM: அதைப்பற்றி தகவல் என்னிடம் ஒன்றும் இல்லை.

SRI M. KALYANASUNDARAM: Sir, I request that a half an hour debate may be allowed on this as this is an important matter.

MR. SPEAKER: I thought that sufficient information was elicited by means of supplementaries.

SRI M. KALYANASUNDARAM: In spite of these, hon. Members are not satisfied, Sir.

MR. SPEAKER: I shall give more minutes for supplementaries.

SRI M. KALYANASUNDARAM: அமைதியாக மறியல் (பிக்கெட்டிங்) நடக்கும் வரையில் போலீஸ் தலையிடக்கூடாது என்று 1946-ம் வருஷத்திலேயே உத்தரவு போட்டிருப்பதாக மந்திரி அவர்கள் சொன்னார்கள். ஆனால், அப்படியிருக்கும் கொள்கை ஹிந்து காரியாலயத்தின் முன்பு நடந்த மறியலில் மட்டும் தான் அமுல் நடத்தப்பட்டிருப்பதன் காரணம் என்ன? மற்ற மறியல்களில் அப்படிப்பட்ட கொள்கை அனுசரிக்காமலிருந்ததற்குக் காரணம், அங்கெல்லாம் மறியல் பலாத்காரத்தின் அடிப்படையிலா இருந்தது? இதுமாதிரி கொள்கை மற்ற தொழில் தகராறுகளில் ஏன் அமுல் நடத்தப்படவில்லை? இனியாவது இதே கொள்கை அனுசரிக்கப்படும் என்று மந்திரி அவர்கள் உறுதி கொடுப்பார்களா? வால்பாறை சம்பவம் பற்றி மந்திரி அவர்கள் குறிப்பிட்டார்கள். மேட்டுப்பாளையத்தில் தகராறு நடந்துகொண்டிருக்கிறது. அங்கே மறியல் அமைதியாக நடந்துகொண்டிருக்கும்போது 144-வது பிரிவின் கீழ் தடையுத்தரவு போடவேண்டிய அவசியம் என்ன? 84 தொழிலாளர்கள் கைது செய்யப்படவேண்டியதன் அவசியம் என்ன? ஹிந்து சம்பந்தமாக அனுசரிக்கப்பட்ட கொள்கை ஏன் மேட்டுப்பாளையத்தைச் பொருத்தவரையில் அமுல் நடத்தப்படவில்லை என்று அறிய விரும்புகிறேன்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அவ்வாறு உறுதியளிக்க வேண்டிய அவசியம் ஒன்றும் இல்லை. ஏனென்றால், இதுவரை எந்தச் சம்பவமாயிருந்தாலும், எந்தத் தொழிலாளர்கள் பிக்கெட்டிங் செய்வதாயிருந்தாலும் அரசாங்கம் இதே கொள்கையைத்தான் தவறாமல் அனுஷ்டித்துக்கொண்டு வருகிறார்கள். இந்தக் கொள்கைக்கு மாறுதலாக மேட்டுப்பாளையத்திலோ அல்லது வேறு எங்காவதோ அரசாங்கம் அனுசரித்ததாகச் சொல்வது முற்றிலும் தவறு.

SRI K. PONNIAN: தலைவர் அவர்களே, முதலாளிகள் சங்கம் என்றும், தொழிலாளர்கள் சங்கம் என்றும் இரண்டு சங்கங்கள் இருப்பது சர்க்காருக்குத் தெரியுமா?

* THE HON. SRI M. BHAKTAVATSALAM: அப்படி வித்தியாசங்கள் இருப்பதாக எனக்கு ஒன்றும் தெரியாது.

SRI T. L. SASIVARNA THEVAR: இது சம்பந்தமாக சிந்தாதிரிப்பேட்டை சப்-இன்ஸ்பெக்டர் அவர்கள் ஏதோ அரசாங்கத்தாருடைய உத்தரவைத் தவறி நடந்ததாகவும், அவர் திடீரென்று மாற்றப்பட்டதும் வாஸ்தவம்தானா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அப்படி ஒன்றும் எனக்குத் தெரியவில்லை.

---

* Vide correction in the Assembly Debates, dated 8th September 1958.

[5th September 1958

SRI S. PAKKIRISAMI PILLAI : வேலை நிறுத்தம் நடந்தவுடனே, போலீஸ் கமிஷனர் தன்னுடைய டியர்காஸ் படையினருடனும் துப்பாக்கிப் படையினருடனும் ஆயத்தமாக அங்கே செல்வதற்குத் தயாராக இருந்தாரா ? அப்படி முதலாளிகளுக்குப் பாதுகாப்பு கொடுப்ப தற்குத் தயாராக இருந்தது உண்மையா ? ஆனால், மேல் இடத்திலிருந்து வந்த ஒரு தகவலினால், அது தவிர்க்கப்பட்டது என்பது உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது முற்றிலும் உண்மை அல்ல.

SRI M. JAGANNATHAN : May I know, Sir, whether the Government have taken any action so far to establish cordial relationship between the management and the workers' union after all these ugly incidents?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : That has always been the effort of the Government.

SRI K. B. S. MANI : இந்த வேலை நிறுத்தம் சம்பந்தமாக சர்க்காரும் போலீசாரும் சட்டப்படி தக்க நடவடிக்கை எடுத்திருந்தாலும், அதை முன்கூட்டியே எடுத்திருந்தால், இந்தக் கலவரம் நடந்திராமலும் பேப்பர் நிறுத்தப்படாமலும் இருக்க ஏதுவாக இருந்திருக்கும் என்று சொல்லிக் கொள்ளுகிறார்களே, அது உண்மையா அல்லது சில தனிப்பட்ட அரசியல் கட்சிகள் தங்களுடைய சுயநலத்திற்காக இதைச் செய்திருக் கிறார்கள் என்று சொல்வது உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பே குறி பிட்டேன். நடவடிக்கை எடுத்துக்கொள்வது என்பது அந்தந்த சந்தர்ப்பம், சூழ்நிலை முதலியவைகளைப் பொறுத்தது. அங்கிருக்கும் போலீசார்தான் அதை முடிவு செய்ய வேண்டும். கூடியவரையிலே விபரீதங்களைத் தவிர்க்கக் கூடிய வகையிலே தான் போலீசார் நடந்து கொள்ளுகிறார்கள்.

SRI T. T. DANIEL : May I know from the Hon. Minister whether there arose a situation in which the proprietor could not run his business and therefore stopped publication of "The Hindu"? Was the fact that only a small number of workers worked in the office the reason for suspending the publication of "the Hindu"?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I cannot say, Sir, in what circumstances "The Hindu" had to suspend publication. Certain particulars which were in the possession of the Government have been placed on the table of the House. I can certainly say that it is not right to adduce as a ground for the suspension of publication that the police failed to give protection to the workers.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, will the Government kindly place on the table of the House copies of the report of the police?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : As I have already stated, it is not desirable to place copies of the report of the police on the table of the House.

5th September 1958]

Sri P. U. SHANMUGAM : சபைத் தலைவர் அவர்களே, மானேஜ்மெண்டார்களும், சர்க்கார் மீது குறை சொல்லுகிறார்கள் ; தொழிலாளிகளும் சர்க்கார் மீது குறை சொல்லுகிறார்கள். அதற்குக் காரணம், இந்தச் சர்க்காரின் கொள்கை "பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்" என்று இருப்பது தானா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : சர்க்கார் பாரபட்சமற்ற முறையிலே நடந்துகொள்ளுகிறார்கள் என்பதுதான் இதிலேயிருந்து விளங்குகிறது.

Sri M. KALYANASUNDARAM : ஹிந்து பத்திரிகை அதிபர் இது சம்பந்தமாக மத்திய சர்க்கார் ஹோம் மினிஸ்டருக்கு ஏதாவது புகார் செய்து, மத்திய சர்க்கார் ஹோம் மினிஸ்டர் இதிலே தலையிட்டிருப்பது உண்மையா ? அப்படியானால், விவரங்கள் தெரிவிக்க முடியுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : மத்திய சர்க்காருக்குப் புகார் செய்யவுமில்லை ; ஹோம் மினிஸ்டர் தலையிடவும் இல்லை.

Statues of National Leaders

* 51 *Q*—**Sri V. K. KOTHANDARAMAN :** கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) எந்தெந்த இடங்களில் தேசியத் தலைவர்களின் சிலைகளை வைக்க சர்க்கார் பண உதவி அளித்துள்ளது ?

(ஆ) எவ்வளவு அளித்துள்ளது ?

(இ) யாருடைய சிலைகள் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : The Government have sanctioned an expenditure of Rs. 50,000 for the purchase of the statue of Gandhi executed by Sri D. P. Roy Choudhury and installation of the same on the Beach at the junction of the Pycrofts Road, Triplicane, in the Marina.

I may also add that in connection with the 100th Anniversary of the Freedom Struggle in India in August 1957, the Government have sanctioned Rs. 6,100 for the construction of a Mantapam at Papanasam near the Kalyanathirtham Waterfalls in memory of late Sri V. V. S. Ayyar; Rs. 5,000 for the purchase of the House of V O. Chidambaram Pillai at Ottapidaram for constructing a memorial at the site; Rs. 9,040 for the erection of memorial for late Sri Tiruppur Kumaran at Tiruppur, near the railway station; and Rs. 5,000 for the installation of the bust of late Sri Tiru-vi-Ka with the pedastal at the Sembium Colony.

Sri K. VINAYAKAM : Sir, whereas the existence of statues of foreign rulers like the statue of King George V opposite to the Assembly Chamber, is nauseating to our national temperament, will the Government think about the feasibility of replacing it by either one of our State leaders like Sri Kamaraja Nadar and Sri Rajagopalachari, whoever it may be?

The Hon. Sri C. SUBRAMANIAM : Nowadays propaganda is being made for the retention of English, saying that its retention is not degrading. I do not see any reason why we should object to this.

[5th September 1958

MR. SPEAKER : I would like to know when the hon. Member saw the statue opposite to the Fort St. George. He has not been looking at what has been existing in this hall (Laughter).

SRI A. GOVINDASAMY : திருப்பூரிலே குமரனுடைய சிலை வைக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது அவருக்கு ஒரு ஞாபகார்த்த ஸ்தூபி அமைக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : 'மெமோரியல் என்று நான் படித்தேன். அவருடைய சிலை வைக்கப்படவில்லை.

SRI V. K. KOTHANDARAMAN : வேறு எந்தெந்த தேசியத் தலைவர்களிடைய சிலைகளை வைக்கவேண்டுமென்று கோரியும், அதற்காக பணம் கொடுக்கவேண்டுமென்றும் அரசாங்கத்திற்கு மனுக்கள் வந்தனவா ? அப்படி வந்த மனுக்கள் எத்தனை மறுக்கப்பட்டன என்பதைச் சொல்ல முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது என்னிடம் அந்தத் தகவல் இல்லை.

Ashe Memorial Hall

* 52 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Ashe Memorial Hall in the Tuticorin Municipal limits was renamed as Vanchi Memorial Hall on the 15th August 1957;

(*b*) whether this decision was taken by the Municipal Council;

(*c*) whether this proposal was turned down by the Government; and

(*d*) if so, the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The Ashe Memorial Hall was not renamed as " Vanchi Memorial Hall " on the 15th August 1957, but the tablet containing the name " Ashe Memorial Hall " was removed under orders of Government on the 13th August 1957.

(*b*) The Tuticorin Municipal Council passed a resolution on 26th July 1957 for changing the name of " Ashe Memorial Hall " into " Vanchinathan Memorial Hall " and addressed the State Government for orders.

(*c*) & (*d*) Yes, Sir. The proposal, if given effect to, would constitute a breach of the terms of the Trust Deed under which the custody of the property is vested in the Treasurer for Charitable Endowments.

SRI M. KALYANASUNDARAM : யார் யார் அதனுடைய தர்மகர்த்தாக்கள் ? அவர்களுடைய அபிப்பிராயம் இதில் அறியப்பட்டதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் தர்மகர்த்தர்களுடைய அபிப்பிராயத்தை அறிந்து செய்வது இல்லை. முதலிலேயே இதற்காக சாசனம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த சாசனத்தை அனுசரித்துத்தான் இது செய்யப்பட்டிருக்கிறது.

5th September 1958]

SRI V. K. KOTHANDARAMAN : தூத்துக்குடி முனிசிபாலிட்டியில் தீர்மானம் செய்யப்பட்டு, அதுவும் சர்க்காருக்கு அனுப்பப்பட்டு, அதன் பேரில் சர்க்காரிடத்தில் இருந்தும் கலெக்டருக்கு பதில் அளிக்கப்பட்டு, 1958-ம் வருஷம் ஜனவரி மாதம் 26-ந்தேதி ஸ்ரீ எ.பி.ஸி. வீரபாகு பிள்ளை அவர்களும் . . .

MR. SPEAKER : The hon. Member is only giving information. He must put a question.

SRI. V. K. KOTHANDARAMAN : கேள்வியைப் போடுவதற்கு. முன்னால் விஷயத்தை விளக்காமல் எப்படிக் கேள்வியைக் . . .

MR. SPEAKER : Next question. Question No. 53. If hon. Members would not listen to me, I am not going to allow supplementary questions.

Milk Factory

* 53 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) (i) the cost price and (ii) the selling price of each Madras measure of toned milk produced by the Government Milk Factory at Teynampet;

(*b*) whether the demand for toned milk from the public is elastic or inelastic; and

(*c*) the various measures taken by the Government to increase the consumption of toned milk in the Madras City?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The cost price and selling price of each Madras measure of toned milk produced by the Government Milk Factory are 88 nP. and Re. 1 respectively

(*b*) The demand for toned milk from the public is elastic.

(*c*) One kiosk for selling toned milk and its products has already been functioning at Luz. The question of opening two more kiosks, one at the Moore Market and the other at Law College is under consideration. The Government Milk Factory is participating in exhibits and shows. Toned milk, Ice cream and Rose milk are sold to the public in these places. There is also a Mobile Milk Bar Van which visits busy parts of the City in the evenings for effecting quick sales and to popularise toned milk and its products. One distributive brochure illustrating the value of toned milk has been published and distributed free of cost.

SRI M. JAGANNATHAN : Sir, may I know whether the Government Milk Factory at Teynampet is being run as a commercial concern or run on ' no profit, no loss ' basis?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the idea is that it should be run on a commercial basis. But there is also this idea that we should popularise this in order that poor people may take advantage of it. Therefore, there have been losses after this pasteurised milk was converted into toned milk. But in this year, it appears we will make a small profit.

[5th September 1958

SRI K. ANBAZHAGAN : கொழுப்பு சத்து குறைக்கப்பட்ட பாலைக் குறித்து மக்கள் அதில் சத்துப் பொருள் இல்லை என்ற தவறான அபிப்பிராயம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அந்த எண்ணத்தை மாற்ற அதில் சத்துள்ளது என்ற உண்மையை பொதுமக்களுக்குச் எடுத்து சொல்ல அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல ப்ரோஷர் வெளியிட்டிருக்கிறோம். அதில் இந்தப்பாலின் மேன்மையைப் பற்றி தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

SRI S. PAKKIRISAMI PILLAI : டோண்டு மில்க்கில் எவ்வளவு தண்ணீர் இருக்கிறது ? எவ்வளவு பால் இருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Toned milk is prepared by mixing pure buffalo's milk, water, and skimmed milk powder and the produce pasteurised. அதில் எவ்வளவு தண்ணீர் இருக்கிறதென்று தெரியவில்லை. (சிரிப்பு.)

SRI K. RAMACHANDRAN : May I know, Sir, what quantity of toned milk is produced everyday?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : In 1957–58, 6,664 lb. were produced.

Non-Gazetted Officers

* 54 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Cabinet Sub-Committee constituted during 1956 has submitted proposals regarding the N.G.Os; and

(*b*) if so, what the recommendations are?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No Cabinet Sub-Commitee was constituted during 1956 to consider the requests of the N.G.Os.

(*b*) Does not arise.

* 55 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state the main grievances stated in the memorandum submitted by the Non-Gazetted Government Officers and the steps taken by the Government to ameliorate their grievances?

THE HON. SRI C. SUBRAMANIAM : It is presumed that the hon. Member is referring to the memorandum presented by the deputationists of the Tamilnad N.G.G.Os. Union to the Chief Minister and the Finance Minister on the 13th February 1958. If so, the requests contained in that memorandum were—

(i) that a Pay Commission might be appointed by the State Government similar to that set up by the Central Government; and

5th September 1958]

(ii) that dearness allowance on a par with the rates applicable to Central Government servants might be granted with effect from 1st April 1957.

The requests were examined and the Association was informed that it was not possible to comply with their request immediately.

*56. *Q*—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1957–58-ல் சென்னை அரசாங்கத்தில் வேலை செய்துவரும் கெஜெட் பதிவு இல்லாத ஊழியர்களுக்கும், கடைநிலை ஊழியர்களுக்கும் மோட்டார் வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் நீங்கலாக இதர வண்டிகள் வாங்குவதற்காக, கடனுகக் கொடுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு (ஜில்லாவாரியாக)?

(ஆ) என்னென்ன விதமான வண்டிகள் வாங்கப்பட்டன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Total advances disbursed during 1957–58 are—

	RS.
Chingleput district	1,768
North Arcot	960
Tanjore	392
Tiruchirappalli	4,576
Madurai	1,512
Ramanathapuram	1,120
Salem	580
Madras	61,242
Total ...	72,150

(*b*) Mostly bicycles and in some cases rickshaws.

SRI N. K. PALANISAMI : இரண்டாவது பே கமிஷனுடைய சிபார்சு வெளிவருவதற்கு முன்பாக காபினெட் சப் கமிட்டியாவது போட்டு பரிசீலனை செய்து உடனடியாக ஐந்து ரூபாயாவது கொடுப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஐந்து ரூபாய் கொடுப்பதற்கு காபினெண்ட் சப் கமிட்டிபோட்டு பரிசீலனை செய்யவேண்டிய அவசியம் இல்லை. அது கொடுக்க முடியுமா என்பது தான் பிரச்னை. இரண்டாவது பே கமிஷனுடைய சிபார்சும் சீக்கிரத்தில் வரும் என்று எதிர்பார்ப்பதால் அவ்வளவு அவசரமாக ஒன்றும் செய்யவேண்டிய அவசியமில்லையென்று கருதுகிறேன்.

SRI T. T. DANIEL : Sir, now that Kanyakumari district is added to Madras State, all the non-gazetted officers appointed subsequent to the date of integration are entitled to get only the Madras scales of pay. While that is so, how is it that the graduate trained teachers who are appointed after 1st November 1956 are paid the Travancore-Cochin State scale of pay which is Rs. 55 and how is it they are not getting the Madras scale of pay which is Rs. 85?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, this is a question relating to Graduate trained teachers. A separate question may be put.

Sri P. G. MANICKAM : கடைநிலை ஊழியர்களாக கிராமங்களில் வேலை புரிந்துவரும் வெட்டியான் போன்ற சிப்பந்திகள் கந்தாயம் வசூலிப்பதற்கு கிராமம் கிராமமாகச் செல்லவேண்டிய அவசியம் இருப்பதால் அவர்களுக்கும் சைக்கிள் வாங்கிக்கொள்வதற்கு கடனுகத் தொகை கொடுக்கப்படுகிறதா ? அப்படி இல்லையென்றால் இனிமேலாவது கடனுகக் கொடுத்து உதவ சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : ஒவ்வொரு கிராமத்திற்கும் தனித் தனியாக தலையாரி போன்றவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்திற்குப் போக வேண்டிய அவசியம் இல்லை.

Sri M. KALYANASUNDARAM : மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்குக் கொடுப்பதுபோல உடனடியாகப் பஞ்சப்படி இங்கும் வழங்குவது சாத்தியம் இல்லையென்று சொன்னார்கள். எப்பொழுது சாத்தியமாகும் ? அதற்காக எவ்வளவு தொகை செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : கணக்கு பார்த்தால், இப்போது 12 ரூபாய் கொடுத்தோம். அதன் காரணமாக $4\frac{3}{4}$ கோடி செலவாகிறது. அதிலிருந்து கணக்குப் போட்டுக்கொள்ளலாம். இப்போது இருக்கிற அளவை உயர்த்தி மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்குக் கொடுப்பது போல கொடுக்கவேண்டுமென்றால் இன்னும் $5\frac{1}{2}$ கோடிக்கு மேல் செலவாகும்.

Sri K. ANBAZHAGAN : கெஜெட் பதிவு இல்லாத கடைநிலைப் பட்ட சிப்பந்திகள் இன்னும் வேலை உறுதி செய்யப்படாமல், காயம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். பலமுறை அரசாங்கத்தாரிடம் விண்ணப்பித்துக்கொண்டும் இருக்கிறார்கள். அவர்கள் குறை கவனிக்கப்பட்டதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : A separate question may be put.

Sri M. R. KANDASWAMI MUDALIYAR : கனம் தலைவர் அவர்களே, இப்போது சம்பள உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிற பட்டியலில் கிராம அதிகாரிகள்—கர்ணம், தலையாரி, தோட்டிகள்—முதற்கொண்டு சேர்க்கப்பட்டிருக்கிறார்களா ? அவர்களுடைய பிரச்னையும் பரிசீலிக்கப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அவர்களுக்குத் தனியாகச் சம்பள உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த 12 ரூபாய் கொடுக்கவில்லை. கர்ணத்திற்கு 7 ரூபாயும், இதர வில்லேஜ் ஆபீசர்களுக்கு 5 ரூபாய் உயர்வு கொடுக்கப்பட்டிருப்பதாக நான் நினைக்கிறேன்.

Sri A. GOVINDASAMI : இரண்டாவது பே கமிஷனுடைய அறிக்கையை எதிர்பார்ப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த அறிக்கை வெளிவந்தவுடனே உடனடியாக அது அமூலாக்கப்படுமா ? அல்லது மீண்டும் அது பரிசீலனை செய்யப்பட்ட பிறகு தான் அமூலாக்கப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதில் என்ன சொல்லப் போகிறார்கள் என்பது தெரியாமல் அப்படியே அமூல் செய்யப்படும் என்று எவ்வாறு சொல்லமுடியும் ? அந்த அறிக்கையைப் பரிசீலனை செய்த பிறகு தான் முடிவு எடுக்கப்படும்.

Drinking water

* 57· *Q*—**Sri M. C. MUTHUKUMARASWAMY :** கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயதுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவிலுள்ள தானுக இயங்கும் **(automatic)** குடி தண்ணீர் பம்பு செட்டுகள் எத்தனை ?

(ஆ) அவைகளுக்காகச் செலவிட்ட தொகை எவ்வளவு ?

5th September 1958]

(இ) அவைகளில் எத்தனை—

(1) முனிசிபாலிடிகளிலும்,

(2) முதல் தர பஞ்சாயத்துக்களிலும் இயங்குகின்றன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) 50 (fifty).
(*b*) Rs. 2,86,580.
(*c*) (1) 2 (two) in municipalities.
(2) 25 (twenty-five) in major panchayats.

SRI M. C. MUTHUKUMARASWAMY : சார், தனியாக இயங்கும் பம்பு செட்டுகள் உள்ள இடங்களில் எல்லாம் நல்ல வசதி உள்ளவர்கள் இருக்கிறார்கள். குடிதண்ணீருக்கு வேண்டிய கிணறுகளும் அங்கே கட்டப் பட்டிருக்கின்றன. இதற்காகப் பத்துப் பதினைந்தாயிரம் ரூபாய்க்கு மேலும் செலவாகிறது. அநேகம் கிராமங்களில் உள்ள சேரி மக்கள் குடிப்பதற்கு கூடத் தண்ணீர் இல்லாமல்—கிணறுகள் கூட இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே முதலில் குடிப்பதற்குக் கிணறுகளாவது இந்தப் பகுதிகளில் வெட்டிக் கொடுத்து உதவி செய்யும் வரையில் தானாக இயங்கும் பம்பு செட்டுகளை வசதி உள்ள இடங்களில் வைப்பதைக் கொஞ்சம் தள்ளி வைப்பார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது குடிதண்ணீர் வசதி இல்லாத இடங்களுக்குக் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கப் படுகிறது. எல்லா இடங்களுக்கும் ஒரே சமயத்தில் கொடுக்க முடியாது. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் எல்லா இடங்களுக்கும் வசதி செய்து கொடுக்கப்படும்.

SRI K. B. S. MANI : தானாக இயங்கும் குடி தண்ணீர் பம்பு செட்டுகள் முனிசிபாலிடிகளில் வாங்கி வைக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சை ஜில்லாவில் உள்ள தானாக இயங்கும் குடிதண்ணீர் பம்பு செட்டுகள் மொத்தம் 50 என்று கனம் அமைச்சர் தமது பதிலில் கூறினார். அவைகளில் கிட்டத் தட்ட 40-க்கு மேற்பட்டவை பெரும்பாலும் வேலை செய்யாமல் இருக் கின்றன. அவைகள் பி. எஸ். ஜி. பம்பு செட்கள். ரீடா பம்பு செட்டு கள் என்ற பம்பு செட்டுகள் நல்ல பம்பு செட்டுகளாக இருக்கின்றன. அவைகள் குறைந்த விலைக்குக் கிடைக்கின்றன. அவைகளை உபயோகித் தால் மின்சாரமும் மிச்சமாகிறது. அவைகள் தஞ்சாவூரிலேயே கிடைக் கின்றன. அவைகளை உபயோகிக்க அனுமதித்தால் தஞ்சாவூரிலுள்ளவர் கள் உள்ளூரிலேயிருந்து பம்பு செட்டுகளை வாங்கிக் கொள்ளும் சௌகரி யத்தை அடைவார்கள். ஆகவே சர்க்கார் ரீடா பம்பு செட்டுகளை பரிட்சார் த்தமாக உபயோகித்து, பலன்களை அறிந்து அந்த பம்பு செட்டுகளை உபயோகிப்பதற்கு உத்தரவு போடுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த அரிய யோசனையை கனம் அங்கத்தினர் எழுத்து மூலம் தெரிவித்தால் அதை கவனிக்கிறோம்.

Spinning mills

*58 *Q.*—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of spinning mills in the State ;

(*b*) the quantity of yarn produced from these mills in 1957–58;

(*c*) the quantity consumed by handlooms and powerlooms in 1957–58 ;

[5th September 1958

(*d*) the quantity, if any, exported; and

(*e*) whether there is any proposal to control the price of mill-made yarn?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 106.

(*b*) 162·9 million lb.

(*c*) No figures are available separately for handlooms. The total quantity offered for civil consumption was 223·72 million lb.

(*d*) 7·87 million lb.

(*e*) No, Sir.

SRI K. RAMACHANDRAN : சில சமயங்களில் இங்குள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு சரிவர நூல் கிடைக்காததால் அவர்கள் அதிக விலை கொடுத்து நூல் வாங்க வேண்டியிருக்கிறது. அப்படியிருக்கும்போது, ஏற்றுமதி செய்யவேண்டிய அவசியம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் குறிப்பிடும் நிலைமை சரியானது அல்ல. நிலைமை அப்படி இல்லை. கைத்தறி நெசவாளர்களுக்கு இப்போது நூல் போதுமான அளவு கிடைக்கிறது : அவர்களுடைய தேவைக்கு அதிகமாகவே நூல் இருக்கிறது என்றுகூடச் சொல்லலாம். நூல் விற்பனையாகாமல் தேக்கமாயிருக்கிறது என்பதுதான் இப்போதைய புகார்.

SRI M. KALYANASUNDARAM : நூலை ஏற்றுமதி செய்வதற்கு அனுமதித்த பிறகு கைத்தறிக்குக் கிடைக்கும் நூலின் விலை உயர்ந்திருக்கிறது என்பதை கனம் மந்திரி அறிவாரா? நூல் விலை உயர்வைத் தடுப்பதற்கு என்ன நடவக்கை எடுக்கப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்கு கனம் அங்கத்தினர் ஒரு தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

SRI A. GOVINDASAMY : கைத்தறி நெசவாளர்களின் நூல் பிரச்னையைத் தீர்ப்பதன் பொருட்டு, கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருக்கும் காஞ்சிபுரம் போன்ற பிரதேசங்களில் நூல் உற்பத்தி மில்லைத் துவக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : டெக்ஸ்டைல் விசாரணைக் கமிட்டியார், இனிமேல் புதிதாக நூல் மில்கள் வைக்கக்கூடாது என்று கூறியிருக்கிறார்கள்.

SRI M. JAGANNATHAN : What is the position with regard to the foreign demand for the cloth produced by the handlooms in our State?

THE HON. SRI R. VENKATARAMAN : We are trying to expand the foreign market and in places where sufficient propaganda has been done, there is a good demand for our handloom cloth.

5th September 1958]

Dr. (Srimathi) SATYAVANIMUTHU : நமது மாநிலத்திலுள்ள நூற்பு ஆலைகள் எத்தனை என்று கனம் அமைச்சர் கூறுவாரா ?

The Hon. Sri R. VENKATARAMAN : There are 106 spinning mills and 22 composite mills.

Sri S. NAGARAJA MONIGAR : நூல் விற்பனையாகாமல் எராளமாகத் தேங்கியிருக்கிறது என்று கனம் அமைச்சர் கூறினார். நம் ராஜ்யத்திலுள்ள 106 நூற்பு ஆலைகளில் எத்தனை ஆலைகள் நஷ்டத்தில் வேலை செய்கின்றன என்று கனம் அமைச்சர் கூற முடியுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இதற்கு, கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் சொல்லுகிறேன்.

Sri K. S. G. HAJA SHERIFF : May I know the amount of foreign exchange earned by the export of this yarn?

The Hon. Sri R. VENKATARAMAN : That information is available only with the Central Government.

Sri V. SANKARAN : நமது ராஜ்ய நூற்பு ஆலைகளில் நூற்கப்படும் மொத்த நூலில், நெசவிற்காக நம்முடைய ராஜ்யத்திலேயே உபயோகிக்கப்படும் நூல் எவ்வளவு, நெசவிற்காக வேறு ராஜ்யங்களுக்குக் கொடுக்கப்படும் நூல் எவ்வளவு, கைத்தறிகளுக்குக் கொடுக்கப்படும் நூல் எவ்வளவு என்பனவற்றை விகிதாசாரப்படி கனம் அமைச்சர் கூற முடியுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : The hon. Member must give me notice for answering this question.

Sri M. R. KANDASWAMI MUDALIYAR : நூல் அதிகம் தேங்கிக் கிடக்கிறது என்று கனம் அமைச்சர் கூறினார். நூலின்விலை சற்றுக் குறைந்தவுடன் ஏற்றுமதிக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டு விடுகிறது. ஏற்றுமதிக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டவுடன் நூலின் விலை ஏறிவிடுகிறது. நூல் விலை உயர்வால் நெசவாளர்கள் கஷ்டப்படுவதால், நெசவாளர்களின் தேவைக்குப்போக மீதியை ஏற்றுமதியாகும்படி பார்த்துக்கொள்ள கனம் அமைச்சர் முயற்சி செய்வாரா ?

The Hon. Sri R. VENKATARAMAN : The hon. Member may give notice of a separate question. Because, I do not accept the position that there has been a rise in prices.

Sri M. D. RAMASAMY : தென் பிராந்தியங்களில் பருத்தி நூலை விட செயற்கைப் பட்டு நூல்தான் அதிகம் தேவைப்படுகிறது. இங்குள்ள கைத்தறி நெசவாளர்கள் செயற்கைப் பட்டு நூல் கிடைக்காமல் கஷ்டப்படுவதால், அவர்களுக்கு தேவையான அளவு செயற்கை பட்டு நூல் கிடைக்கச் செய்வதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

The Hon. Sri R. VENKATARAMAN : இந்த ராஜ்யத்திற்கு செயற்கைப் பட்டு நூல் அதிகம் கொடுக்கவேண்டுமென்று மத்திய சர்க்காருக்கு கடிதங்கள் எழுதியிருக்கிறோம்.

Sri A. MARIAPPAN : பஞ்சு இறக்குமதிக் குறைவினால் நூலின் விலை ஏறியது சர்க்காருக்குத் தெரியுமா?

The Hon. Sri R. VENKATARAMAN : இதற்கு கனம் அங்கத்தினர் ஒரு தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன். நூலின் விலை ஏறியிருக்கிறது என்று சொல்வதை நான் ஒத்துக்கொள்ளவில்லை என்று நான் ஏற்கனவேயே சொன்னேன்.

Sainik Course

* 59 *Q.*—Sri M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the number of Scheduled Castes and Scheduled Tribes who had applied for special scholarships to undergo training in the Sainik Course, Dehra Dun, during the years 1956–57 and 1957–58; and

(*b*) the number of students who were awarded such scholarships in each year?

The Hon. Sri P. KAKKAN : (*a*) Nil.

(*b*) Nil.

Sri M. JAGANNATHAN : சைனிக் பயிற்சி முறையில் பயிற்சி பெறுபவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுவதாக சர்க்கார் அறிக்கை கூறுகிறது. ஆனால் சென்னை ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் இந்தப் பயிற்சிக்காக எந்த மாணவருக்கும் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்று கனம் அமைச்சர் கூறினார். இந்த ராஜ்யத்தைச் சேர்ந்த யாரும் அந்தப் பயிற்சி பெறவில்லை என்றால், அப் பயிற்சிக்காக சர்க்கார் உபகாரச் சம்பளம் கொடுப்பது இந்த ராஜ்ய மக்களுக்குத் தெரியாதா? அப்படியானால், பெரும்பாலான மக்களுக்கு அது தெரியாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? இந்தப் பயிற்சிக்காக விசேஷ உபகாரச்சம்பளங்களுக்காக, இந்த ராஜ்யத்தைச் சேர்ந்த மாணவர்கள் விண்ணப்பித்துக்கொண்டிருக்கிறார்களா? அவர்கள் விண்ணப்பித்துக் கொண்டிருந்தால், அவர்கள் அப் பயிற்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்களா? அப்படி இல்லை என்றால், அவர்கள் என் பயிற்சிக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதையும், அவர்கள் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தால் என் உபகார சம்பளம் கொடுக்கப்பட வில்லை என்பதையும் கனம் அமைச்சர் தெரிவிப்பாரா?

The Hon. Sri P. KAKKAN : டேராடூனுக்கு இந்தப் பயிற்சி பெறச் சென்ற இந்த ராஜ்ய மாணவர்கள் யாரும் ஹரிஜன நல டைரக்டரிடம் உபகாரச் சம்பளங்களுக்காக விண்ணப்பித்துக் கொள்ளவில்லை. அதனால் தான் யாருக்கும் உபகாரச் சம்பளங்கள் கொடுக்கப்படவில்லை.

Rent Control Court, Madurai

* 60 *Q.*—Sri N. R. THIAGARAJAN : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) மதுரை: ரெண்ட் கண்ட்ரோல் **(Rent Control)** கோர்ட்டில் 1957–ல் பதிவான வழக்குகள் எத்தனை?

(ஆ) பைசலானவை எத்தனை?

(இ) சராசரி நாளொன்றுக்கு எத்தனை வழக்குகள் வருகின்றன? எத்தனை பைசலாகின்றன?

(ஈ) தற்போது பைசாலாகாமல் உள்ளவை எத்தனை?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) Total number of cases under the Madras Buildings (Lease and Rent Control) Act, 1949 received in the Court of the Rent Controller, Madurai, during 1957 is 801.

(*b*) Total number of cases disposed of during 1957 is 686.

5th September 1958]

(c) Average number of cases—

(1) received daily is 3

(2) disposed of daily is 3

(d) number of cases pending disposal as on 15th May 1958 is 250.

SRI N. R. THIAGARAJAN : வழக்குகள் மிகவும் அதிகரிக்கும் போது அவை துரிதமாகப் பைசல் செய்யப்படுவதன் பொருட்டு, ஸ்பெஷல் ரெண்ட் கண்ட்ரோலர் நியமிக்கப்படுவாரா?

THE HON. SRI V. RAMAIAH : மதுரையைப் பொறுத்தவரையில் அங்கே வழக்குகள் அதிகம் உண்டு. அவைகளை பைசல் செய்யும் விஷயத்தில், இப்போது செய்யப்பட்டிருக்கும் புதிய ஏற்பாடே விசேஷ ஏற்பாடுதான்.

SRI K. VINAYAKAM : Whereas the object of this Rent Control Court is to give relief to the tenants or landlords as summary courts, are the Government aware of the fact that a large number of cases are still pending in the Rent Control Courts?

THE HON. SRI V. RAMAIAH : I require notice, Sir.

Andhra-Madras border

* 61 Q.—SRI K. VINAYAKAM, SRI N. K. PALANISAMI AND SRI A. VEDARATNAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any Ministers of this State had a talk with the Revenue Minister of Andhra Pradesh on the Pataskar's award regarding Andhra-Madras border dispute on 1st and 2nd May 1958;

(b) if so, with what results; and

(c) when the Pataskar's award will be implemented?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) It was agreed that the award of Sri Pataskar should be implemented without any modification.

(c) It was proposed to have the award implemented with effect from 1st October 1958. But I am afraid it may not be possible to give effect to it by that date.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that the Minister in the Ministry of Home Affairs of the Government of India, Sri Datar, while answering a question on the floor of the Parliament observed that this question was pending due to the delay in getting information and data that they wanted to get from both the Governments, viz., Madras as well as Andhra Pradesh Governments? If so, may I know whether the Madras Government have supplied the necessary information and data required by the Central Government to implement the award?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir. All the information required for the purpose of drafting the Bill and putting it through the Legislature has already been supplied.

[5th September 1958

Sri N. K. PALANISAMI : ஸ்ரீ படாஸ்கரின் தீர்ப்பை அக்டோபர் முதல் தேதியிலிருந்து அமலுக்குக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டிருப்பதாக கனம் அமைச்சர் கூறினர். அந்தத் தேதியில் அமலுக்குக் கொண்டுவருவதற்குக் காரணம் என்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : முதலில் மசோதா தாயாராக வேண்டும். மசோதா தாயாரானவுடன், அது இந்த ராஜ்ய சட்டசபையிலும் ஆந்திர ராஜ்ய சட்டசபையிலும் விவாதிக்கப்பட்ட பிறகுதான் பார்லிமெண்டில் அது சட்டமாக நிறைவேற்றப்பட்ட முடியும். இதிலெல்லாம் காலதாமதம் ஆகிறது. மேலும், இப்போது செப்டம்பர் மாதம் நடக்கிறது. ஆகவேதான் அக்டோபர் முதல் தேதியிலிருந்து தீர்ப்பு அமலுக்குக் கொண்டுவருவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன்.

Sri A. VEDARATHNAM : படாஸ்கரின் தீர்ப்பை விரைவில் அமலுக்குக் கொண்டுவருவதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன? அது எப்போது அமலுக்கு வரும் என்பதையாவது கனம் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து தெரிவிப்பாரா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : நான் முன்பு சொன்னது போல், அக்டோபர் முதல் தேதியிலிருந்து அதை அமலுக்குக் கொண்டு வர வேண்டுமென்று நாங்களும் விரும்பினேம், ஆந்திர அரசாங்கத்தாரும் விரும்பினார்கள். ஆனால், அதற்கு முன்பு, படாஸ்கர் தீர்ப்பில், இரண்டு பகுதியினருக்கும் சாதகமான முறையில் ஏதாவது மாறுதல் செய்ய முடிந்தால் அம்மாறுதலைச் செய்வதற்கு ஆந்திர சர்க்கார் விரும்பியது. அதன் காரணமாகவும் காலதாமதம் ஏற்பட்டது. ஆந்திர சர்க்கார் அதில் மாறுதல் செய்ய விரும்பியதால், இரண்டு சர்க்கார்களும் கூடிப்பேசினார்கள். அவ்வாறு கூடிப் பேசியதில், இரு சர்க்கார்களும், தீர்ப்பில் ஏதாவது மாறுதல் செய்தால், அது இன்னும் அதிகமான பிரச்னைகளைக் கிளப்பும் என்ற முடிவுக்கு வந்தனர். அதன் காரணமாக, அந்தத் தீர்ப்பை அப்படியே சட்டமாக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்து, அம்முடிவை மத்திய சர்க்காருக்கு அனுப்பி யிருக்கிறார்கள். இனிமேல் மசோதா தயாரிக்கப்பட்டு, அது சட்டமாக்கப்பட வேண்டும். அதற்கான சடங்குகளில் கால தாமதம் ஆகும். ஆகையால், பாடாஸ்கரின் தீர்ப்பு 1959-ம் வருஷம் ஏப்ரல் மாதம் அமலுக்கு வரும் என்று எதிர்பார்க்கலாம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : Are the Government aware of the fact that some of the areas which are to be merged in Madras State and which are now in the Andhra State have been completely neglected with the result that the people there have been denied even fundamental amenities? Will the Government take this matter up with the Andhra Government and see that these amenities are provided to the people immediately?

The Hon. Sri C. SUBRAMANIAM : Till the areas are merged, the responsibility for the provision of amenities is that of the Andhra Government. I do not think I am competent to give an answer to this question.

9-40 p.m. Srimathi KAMALAMBUJAMMAL : இரு அரசாங்கங்களும் சேர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்தியபோது நெல்லூர் ஜில்லாவிலுள்ள நான்கு தமிழ் பகுதிகளும் இதில் சேர்க்கப்பட்டனவா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : முன்பு சொன்னதைப்போல் படாஸ்கார் என்ன தீர்ப்பு கொடுத்தார்களோ அதன் அடிப்படையில்தான் இப்பொழுது சட்டம் வரப்போகிறது. எந்த விதமான மாறுதல்களும் செய்யவில்லே.

5th September 1958]

Sri A. GOVINDASAMY : ஆரணியாறு திட்டம் நம்மை விட்டுப் போய் விட்டதா? அல்லது அது தமிழ் நாட்டிற்கும் ஆந்திராவிற்கும் பொதுவாக இருக்குமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : ஆரணியாறு இருக்கிற இடத்திலேதான் இருக்கிறது. அதிலுள்ள தண்ணீர் தமிழ் நாட்டிற்கும் ஆந்திராவிற்கும், இரண்டிற்கும் உபயோகப்படும்.

Sri K. VINAYAKAM : While conceding the point that it has been found practically impossible to implement this award by the 1st of October, may I know what is the glamour attached to the date 1st April 1959, which is far away—by six months? Will the Government consider the desirability of writing to the Central Government to draw up the Bill as early as December so that it may come into force by the 1st January 1959?

The Hon. Sri C. SUBRAMANIAM : சில கணக்குகள் எல்லாம் வைப்பதற்கு கஷ்டமாயிருக்கும், வருட மத்தியில் ஒரு பிரதேசத்தை இன்னொரு ராஜ்யத்திற்கு மாற்றுவதாயிருந்தால். ஆகவே ஆறு மாதமுடிவில், "பர்ஸ்ட் அக்டோபரில்", வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தோம். அது முடியாதிருக்கும்போது ஜனவரி, பெப்ரவரியில் எடுத்துக் கொள்வதில் எந்தவித அனுகூலமும் இருக்க முடியாது. இதுவரை பொறுத்தவர்கள் ஏப்ரல் 1-ம் தேதி வரை பொறுத்திருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Sri K. VINAYAKAM : Is the Hon. the Minister aware of the fact that the people living in these disputed areas are undergoing inhuman and indescribable miseries due to the tangle between the two States? Cannot this problem be solved, if both States make up their minds to wait in deputation on the Central Government with a view to the implementation of the award, even by the end of this month—that is by the 1st October 1958?

The Hon. Sri C. SUBRAMANIAM : I have no objection, if the hon. Member goes on deputation. That is his own concern. As far as we are concerned, I really do not know the conditions existing in the border areas. As it is, they are the responsibility of the Andhra Government and I am sure they would discharge their responsibility to the best of their ability.

Sri V. K. KOTHANDARAMAN : எல்லைப் பிரதேசத்தில் இருக்கக்கூடிய கிராமங்களில் எந்தவிதமான அபிவிருத்திகளும் செய்யப்படாமல் அப்படியே நிறுத்திவைக்கப் பட்டிருக்கிறது என்ற காரணத்தினால் அங்குள்ள மக்கள் பலவிதமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அதை முன்னிட்டாவது விரைவிலேயே அதை அமல் நடத்துவதற்கு இந்த சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்துவார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அங்கு எந்த விதமான அபிவிருத்தித் திட்டங்களும் நடக்கவில்லை என்று சொன்னார்கள். அது உண்மையா அல்லது தவரு என்று இப்பொழுது நான் இங்கு சொல்ல முடியாது. அவ்விதம் அபிவிருத்திகள் ஏற்படாதிருந்தால் அது நமக்கு ஒரு படிப்பினையாக இருக்கவேண்டும். ஆகவே இந்தப் பிரதேசத்தையொட்டிய கிளர்ச்சியால் இவ்விதம் பலவிதமான பிரச்னைகள் தோன்றுமே தவிர அதனால் சாதகம் ஒன்றும் ஏற்படுவதற்கில்லை.

SRI K. VINAYAKAM : On a point of personal explanation, arising out of the answer given by the Hon. the Leader of the House, I presume that the deputation to be headed by me will be sponsored by the Government of Madras. Is that correct or am I to go by myself? (Laughter.)

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think he should be bound by the restrictions of the Government. He should be a free man to go. (Laughter.)

District Munsifs

* 62 Q.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the total number of persons selected for appointment as District Munsifs in the recent selection; and

(*b*) the number of persons selected from—

(i) the Bar,

(ii) the Scheduled Castes, and

(iii) Backward Communities?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Thirty-two candidates were selected by the Madras Public Service Commission for appointment as District Munsifs in 1957.

(*b*) (i) 18.

(ii) Nil.

(iii) 11.

SRI M. JAGANNATHAN : Is it a fact that even though there were few reserved vacancies for Harijans, no Harijan was appointed in spite of the fact that there were applications from qualified Harijan candidates?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It may be so. The selection was made by the Public Service Commission and it would depend on the availability of qualified candidates.

SRI M. JAGANNATHAN : Even though qualified candidates from the Harijan community applied for the reserved vacancies, none of them were selected?

MR. SPEAKER : The Hon. Minister gave the reply that selection was made by the Public Service Commission.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Selection for the post of District Munsifs was made by the Public Service Commission. That is all I can say.

5th September 1958]

Introduction of Tamil in Government Departments

***63 Q.**—**Sri A. VEDARATHNAM :** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தற்பொழுது தமிழில் நடவடிக்கைகள் நடைபெற்றுவரும் இலாகாக்களை தவிர்த்து இன்னும் எந்த இலாகாக்களில் தமிழில் நடவடிக்கைகளை நடத்த அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது ?

(ஆ) பாக்கி இருக்கும் எல்லா இலாகாக்களிலும் தமிழ் மொழி அமுலுக்கு வர எவ்வளவு காலமாகும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The Government's intention is to introduce Tamil for official correspondence in all the departments of Government but for administrative reasons, this is being done in stages. The Revenue, Public Works and Agriculture Departments have been taken up first, and the scheme will be introduced for the present up to the district level, i.e., only in offices below the level of heads of departments.

(*b*) It is hoped that it may be possible to introduce Tamil in all the departments excepting courts other than village and panchapat courts, before the end of the Second Plan Period.

SRI A. VEDARATHNAM : இப்பொழுது தமிழ் அமலுக்கு வந்திருக்கிற இலாகாக்களில்கூட கடிதப் போக்குவரத்துக்கள் எல்லாம் ஆங்கிலத்தில்தான் நடைபெறுகின்றன. அவற்றை தமிழில் நடைபெறும் படிச் செய்ய அரசாங்கம் முன்வருமா ? அதோடு இன்னும் பல இலாகாக் களில் போதிய தமிழ் டைப் மெஷின்கள் சப்ளையாகவில்லை. அவைகளை எப்பொழுது சப்ளை செய்ய முடியும் என்ற விஷயத்தையும் தயவுசெய்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : டைப்ரைட்டர்கள் எந்தவிதத்தில் அமையவேண்டுமென்று ஒரு முடிவு எடுத்த பிறகு போதிய அளவு டைப்ரைட்டர்கள் தயார் செய்ய ஆர்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கூடிய சீக்கிரத்தில் எந்தெந்த இலாகாக்களுக்கு டைப்ரைட்டர்கள் தேவையோ அவைகள் கொடுக்கப்படுமென்று நான் எதிர்பார்க்கிறேன். இன்னொரு விஷயத்தைப் பற்றி மெம்பர் அவர்கள் குறிப்பிட்டார்கள் அதாவது, சில காரியாலயங்களில் இன்னும் ஆங்கிலத்திலேயே கடிதங்கள் எழுதி வருகிறார்கள் என்று. எந்தெந்த அதிகாரிகளுக்குத் தமிழில் எழுத முடியவில்லையோ அவர்களை, தமிழில் எழுத வேண்டுமென்று நாம் நிர்பந்தப்படுத்தினால் அதன்மூலம் இன்னும் அனர்த்தம்தான் விளையுமேயொழிய நன்மை விளையாது. ஆகவே சட்டம் போட்டிருந்தாலும் கூட ஓரளவு விதிவிலக்கு கொடுத்து படிப்படியாக, இன்று தமிழில் கடிதப் போக்குவரத்து செய்ய முடியாதவர்களும் பழக்கப் படுத்திக் கொண்டு தமிழில் எழுத முன்வரவேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக் கிறது. ஆகவே இடைக்காலத்தில் இதுமாதிரி கஷ்டங்கள் இருக்கத்தான் செய்யும்.

SRI R. CHIDAMBARA BHARATHI : இப்பொழுதுள்ள இலாகாக்களைத்தவிர இதர இலாகாக்களிலும் நிர்வாகம் தமிழில் நடக்கவேண்டுமென்ற சம்பிரதாயம் சிறுகச் சிறுக வந்தாலும்கூட டைப்ரைட்டர்களின் தேவையில்லாமலேயே, தமிழ் பேசத் தெரிந்தவர் களாக இருக்கும் அங்கத்தினர்கள் கொண்ட இந்த சட்டமன்றத்தில் பூரா நடவடிக்கைகளும் தமிழில் எப்பொழுது வரும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அது சபாநாயகரின் கையில் இருக்கிறது. வேண்டுமானால் அவரது அறைக்குச் சென்று அக்கேள்வியைக் கேட்கலாம்.

MR. SPEAKER : சபா நாயகரிடம் சபையில் கேள்வி கேட்க முடியாது. என் அறைக்கு வந்து கேட்டால் பதில் சொல்கிறேன்.

Sri K. SATTANATHA KARAYALAR : கன்னியாகுமரி ஜில்லாவிலும், செங்கோட்டைத் தாலுகாவிலும், இன்னும் ரெவின்யூ டிப்பார்ட்மெண்ட்டிலிருந்து அனுப்பக் கூடிய நோட்டீஸ்கள், ரசீது முதலிய வைகள் அத்தனையும் மலையாளத்திலேயே இருக்கிறது. அதையாவது உடனடியாக மாற்றி தமிழில் கொண்டு வர உத்தரவு பிறப்பிக்கப் படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இவைகள் சமீபத்தில் கேரளத்தில் இருந்து வந்த பகுதிகளாதலால் இதுமாதிரியான கஷ்டங்கள் இருக்கலாம். சிறுகச் சிறுக அங்குள்ள அதிகாரிகள் கூடிய சீக்கிரத்திலேயே இப்பொழுள்ளதை மாற்றிக்கொண்டு தமிழில் கடிதப் போக்குவரத்து செய்வார்கள் என்று நம்புகிறேன். சில இடங்களில் மலையாளம் இருக்கலாம் ; எல்லாம் மலையாளத்தில்தான் இருக்கிறது என்று சொல்ல முடியாது. இன்னொன்று, மற்ற மொழி பேசக் கூடிய வர்கள் சில பகுதிகளில் ஓரளவு இருந்தால்கூட மற்ற மொழிகளிலும் நோட்டீஸ்கள் பிரசுரிக்க வேண்டுமென்ற தத்துவத்தை ஒப்புக்கொண்டிருக் கிறோம். ஆகவே மலையாளம் பேசக் கூடியவர்கள் அதிகமாக சில பகுதிகளில் இருப்பார்களேயானால் அங்கு தமிழ் அறிக்கையோடு மலையாள அறிக்கையும் கொடுக்கவேண்டுமென்று வைக்கப்பட்டிருக்கிறது.

Sri V. K. KOTHANDARAMAN : ஆங்கிலத்திலேயே வந்து கொண்டிருந்த கேள்விகள் இப்பொழுது தமிழிலும் வந்து கொண் டிருக்கிறது. ஆனால் பதில்கள் இன்னும் ஆங்கிலத்தில்தான் கொடுக்கப் படுகின்றன. அதற்கு காரணம் என்ன ? ஆகவே, இனி உடனடியாக பதில்களும் தமிழில் வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : வெகு சுலபமாகச் சொல்லி விடலாம், தமிழிலே செய்ய வேண்டுமென்று. உப கேள்விகளுக்கு பதில் சொல்லும்போதே தட்டுத்தடுமாறித்தான் பதில் சொல்ல வேண்டியிருக் கிறது. ஏனெனில் தமிழில் சரியான பதங்கள் உடனடியாக வருவது கஷ்டமாயிருக்கிறது. அதோடு இன்னொரு முக்கிய விஷயம் இருக்கிறது. அதாவது, ஒரு பகுதியில் இருந்து மட்டும் தமிழை அபிவிருத்தி செய்து விடலாம் என்று நினைப்பது தவறு. நிர்வாகத்தில் தமிழை உபயோகிக்க வேண்டுமென்று சொன்னால், போதனைமுறை தமிழில் இருந்தாலொழிய நிர்வாகத்தில் அதை உடனடியாகக் கொண்டு வருவது சிரமம். அதோடு தமிழ் எல்லாத் துறைகளிலும் வளர ஒரு முயற்சி எடுக்கவேண்டியது அவசியம். அதுபற்றி சர்க்கார் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் தமிழ் வளர்ச்சி எல்லாத் துறைகளிலும் ஏற்படுத்துவதற்கான முறையில் ஒரு திட்டத்தை வெளியிட முடியுமென்று நினைக்கிறேன்.

Sreepadam lands

* 64 *Q.*—Sri T. T. DANIEL : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Kerala Government have sent to this Government a Bill regarding the Sreepadam lands in the Kanyakumari district and the Shencottah taluk ; and

(*b*) whether the Madras Government have expressed their opinion on the Bill to the Kerala Government?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) The Government of Kerala have not sent any Bill for the opinion of this Government.

(*b*) Does not arise.

5th September 1958]

SRI T. T. DANIEL : Sreepadam lands are lands in which the ex-Raj Pramukh, the erstwhile Ruler of the Travancore-Cochin State has some rights, although the patta stands in the name of the landholders and they have almost all the other rights. Will the Government think of the desirability of studying that problem and bring in some measure so that the rights of the ex-Raj Prumukh on those lands may be extinguished?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir, the matter is being looked into. Now a major part of that income is spent on the temple. How best the amount of Rs. 30,000 required for the management of the temple could be found, whether the whole amount should be given by the Travancore-Cochin Devosum and the management looked after or a proportionate share given to the Madras Endowment Board and the management looked after, is under consideration.

Handloom cloth

* 65 *Q*.—SRI N. R. THIYAGARAJAN : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

கையால் நெசவுசெய்த துணிதான் கட்டவேண்டுமென்று சட்ட திட்டங்கள் செய்ய சர்க்காருக்கு ஏதேனும் உத்தேசம் இருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இல்லை, ஐயா

SRI N. R. THIYAGARAJAN : ஸார், கைத்தறி நெசவுத் தொழிலை ஆதரிக்கவேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில் கைத்தறித்துணி உற்பத்தி செய்பவர்கள் கண்டிப்பாக கைத்தறி துணிகளைத்தான் கட்ட வேண்டும் என்று ஏதாவது ஒரு உத்தரவு போட முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கைத்தறி நெசவு ஆடைகளை அதிகமாக விற்பனை செய்வதற்கு பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். ஆனால் சட்டபூர்வமாக, மில் ஆடைகளை அணியக் கூடாது என்று சொல்லுவது நியாயமாக இருக்காது, நாட்டுக்கும் உகந்தது அல்ல.

* 66 *Q*.—SRI N. K. PALANISAMI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கைத்தறித் துணிகளை விற்பனை செய்யும் பொருட்டு ராஜ்ய வர்த்தக கார்ப்பொரேஷன் ஒன்றை (**State Trading Corporation**) அமைக்க 1958-ம் வருடம் ஏப்ரல் மீ 18-ம் தேதியன்று நடந்த முக்கூட்டு மாநாட்டின் போது ஆலைத் தொழிலாளிகள், ஆலை நிர்வாகஸ்தர்கள் இவர்களின் பிரதிநிதிகள் அரசாங்கத்தாருக்கு சிபாரிசு செய்தார்களா ?

(ஆ) அப்படியானால், அதன் விவரங்கள் யாவை ?

(இ) மேற்சொன்ன சிபாரிசை அமுலுக்குக் கொண்டுவருவதற்காக அரசாங்கத்தார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) A suggestion to this effect was made.

(*b*) No details were discussed at the Conference.

(*c*) The matter is under consideration.

[5th September 1958

Sri N. K. PALANISAMI : இம்மாதிரி ஒரு தொழில் கான்பரன்ஸ் கூட்டி அதில் வெளிநாட்டுக்கு நமது கைத்தறித் துணிகளை அனுப்புவதற்கு ஒரு கார்ப்பரேஷன் ஏற்படுத்தலாம் என்று முடிவு செய்திருப்பதாக தெரிகிறது. அதற்கு வேண்டிய பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா ? அவ்விதம் துணிகளை அனுப்பும்போது கார்ப்பரேஷனுக்கு வெளியே உள்ள துணிகளையும் அனுப்ப முயற்சி எடுக்கப்படுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : **Counting the chickens before they are hatched** என்று சொல்வார்கள். இதைப்பற்றியுள்ள யோசனை பரிசீலனையில் இருந்து வருகிறது. கார்ப்பரேஷன் அமைத்த பிறகு இதைப்பற்றி யோசனை செய்யலாம்.

Textile industry

* 67 *Q.*—Sri N. K. PALANISAMI and Sri P. S. CHINNADURAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there was a conference on 18th April 1958 to discuss various matters relating to the crisis in textile industry in Madras State;

(*b*) what the main points discussed at the conference are;

(*c*) whether any decisions have been taken; and

(*d*) whether they have been implemented?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*), (*b*), (*c*) & (*d*) Yes, Sir ; an informal exchange of views with the representatives of the mills, representatives of labour and representatives of handloom industry was held on 18th April 1958. All aspects of the textile industry were discussed and suitable steps have been taken to mitigate the present difficulties of the different sectors of the industry. It is not in the public interest to disclose more details of the discussions of the conference at this stage.

Sri N. K. PALANISAMI: இந்த மகாநாட்டில் 'ப்ரொடக்ஷன் ஸ்டாட்டஸ்கோ மெயின்டைன்', பண்ணவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டதாக தெரிகிறது. அதன்பின் அது ஒப்புக்கொள்ளப்பட்டபிறகு கனம் மந்திரி அவர்கள் மதுரைக்கு சென்று ஹார்வி மில்லில் கொடுக்கப்பட்டு வரும் டியர்னஸ் அலவன்ஸில் 25 பர்ஸெண்டு குறைக்கவேண்டும் என்று சொல்லுவது முறையாகுமா? இப்போது பல இடங்களிலும் ஷிப்டுகள் எல்லாம் குறைக்கப்பட்டும், பல இடங்களில் மில்கள் மூடப்பட்டும் வருகின்றன. இந்த சமயத்தில், இதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

The Hon. Sri R. VENKATARAMAN : இதில் பல கேள்விகள் இருக்கின்றன. முதலாவதாக வெளிநாட்டுக்கு நூல் ஏற்றுமதி செய்ய அனுமதித்தால் நெருக்கடி தீரும் என்று மில் முதலாளிகள் சார்பில் கூறப்பட்டது. அந்த யோசனையை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக இப்போது ஏற்பட்டிருக்கும் நிலைமைக்கு தெளிவு காண்கின்ற வரையிலும் மில்களை மூடக்கூடாது, அப்போது உற்பத்தி பாதிக்கப்படாமல் இருக்கும் என்று சொல்லப்பட்டது. இது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. திட்டவட்டமாக அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்று சொல்லுவதற்கில்லை. ஆகவே அந்த கூட்டத்தில் இதைப்பற்றி திட்டவட்டமாக எடுக்கப்பட்ட முடிவு என்று இதை சொல்வதற்கில்லை.

5th September 1958]

Old Assembly Buildings

* 68 *Q*.—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

மவுண்ட் ரோடு கவர்ன்மெண்டு எஸ்டேட்டிலிருக்கும் பழைய அசெம்பிளி கட்டிடத்தை என்னென்ன காரியங்களுக்காக உபயோகப்படுத்திக் கொள்வதற்காக கவர்ன்மெண்டார் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI P. KAKKAN : The Assembly Hall attached to the Old Assembly Building in the Government Estate has been converted into a children's theatre. The remaining rooms in the building will be utilised to accommodate some of the Government Offices which require accommodation or which have rented accommodation elsewhere.

SRI M. KALYANASUNDARAM : ஸார், இதுவரை குழந்தைகளுக்காக அங்கு எத்தனை படங்கள் காண்பிக்கப்பட்டன ? அதன் மூலம் கிடைத்த வருமானம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : இதற்கு தனி கேள்வி போட வேண்டும்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : What is tne amount spent so far by the Government for the improvement of this building?

THE HON. SRI P. KAKKAN : I require separate notice for the question.

SRI D. S. AUTHIMOOLAM : இந்த அசெம்பிளி ஹாலை விட அந்த அசெம்பிளி ஹால் பொதுமக்களுக்கு கூடுதல் வசதியாக இருக்கிறது என்பதை இந்த சர்க்கார் நம்புகிறதா ? இல்லையா ?

THE HON. SRI P. KAKKAN : இப்போது நம்பவில்லை.

SRI K. VINAYAKAM : இந்த கட்டிடம் நம்முடைய நாட்டின் தலைவராக இருக்கும் ஸ்ரீ நேரு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதன் பின்னால் இது வரையிலும் ஒரு படம்கூட போட்டு காண்பிக்கப்படவில்லை என்று சொல்வது சரிதானா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : படம் காண்பிப்பதற்கு அந்த கட்டிடத்தில் சில மாறுதல்கள் செய்யவேண்டியிருக்கிறது. சர்க்கார் கட்டிடமாயிருந்தாலும் சில விதிகளின்படி சில மாறுதல்கள் செய்ய வேண்டியிருக்கிறது. அவ்விதம் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த மாத மத்தியில் தொடர்ந்து காட்சிகள் ஆரம்பிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI A. GOVINDASAMY : இங்கு காண்பிப்பதற்கான சினிமாப் படம் எடுத்தாய் விட்டதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : படம் எடுக்கின்றவர்களை கேட்டால் அது தெரியும்.

SRI V. SANKARAN : இப்போது கோட்டையில் குறட்டை விட்டு தூங்கிக்கொண்டிருக்கும் மியூஸியத்தை அங்கு கொண்டு போனால், இந்த கட்டிடத்தை இங்கு சர்க்கார் ஆபீஸ்களுக்கு உபயோகப்படுத்துவதற்கு வசதியாக இருக்கும். இந்த யோசனையை சர்க்கார் ஏற்றுக்கொள்வார்களா?

THE HON. SRI P. KAKKAN : நோட்டீஸ் வேண்டும்.

[5th September 1958

Courtesy Week

* 69 *Q.*—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Electricity be pleased to state the significance of celebrating 'Courtesy Week' with respect to buses during the second week of April, each year?

THE HON. SRI V. RAMAIAH: The 'Courtesy Week' is celebrated to inculcate in the minds of the employees engaged in bus transport that they should behave politely towards the travelling public and also should make themselves helpful and agreeable to public.

No significance is attached to the period, viz., second week of April. It will be celebrated during the week, following the 'Tamil New Years Day' in the coming years.

Community Development Projects

* 70 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Chief Minister be pleased to state whether the recommendations of the Estimates Committee regarding Community Development Projects made in their First Report presented to the Assembly in March 1958 will be implemented in this State?

THE HON. SRI C. SUBRAMANIAM: Yes, Sir, to the extent feasible. The report is currently under examination by Government.

Artificial Insemination Centres

***71** *Q.*—SRI **P. S. SANTHANAM:** கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) செயற்கை முறையில் கருத்தரிக்கும் (**Artificial Insemination Centres**) நிலையங்கள் வட ஆற்காடு ஜில்லாவில் நிறுவுவதற்கு அரசாங்கத்தாருக்கு உத்தேசம் இருக்கிறதா ?

(ஆ) அப்படியானால் எத்தனை தாலூகாக்களில் ?

(இ) எந்த வருஷத்தில் நிறுவ அரசாங்கத்திற்கு உத்தேசம் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir.

(*b*) One Artificial Insemination Centre will be started at Mallavadi in Tiruvannamalai taluk.

(*c*) The Centre will be started during the current year (1958–59).

***75-I** *Q.*—SRI **A. VEDARATHNAM:** கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) இந்த மாநிலத்தில் எத்தனை மாடுகள் செயற்கை முறை கருத்தரிக்கும் நிலையங்கள் இருக்கின்றன ?

(ஆ) அவை எங்கெங்கே இருக்கின்றன ?

(இ) புதிய மேற்படி நிலையங்கள் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

5th September 1958]

(ஈ) அப்படியானால் எததனை ? எங்கெங்கே ?

(உ) அவை ஒவ்வொன்றுக்கும் ஆகும் செலவு என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Forty-eight.

(*b*) A statement[a] showing the places in which the Artificial Insemination Centres are located is placed on the Table of the House.

(*c*) Yes, Sir.

(*d*) This information is also given in the statement placed on the Table of the House.

(*e*) Precise figures showing the actual expenditure incurred in each centre are not readily available. Approximately, a non-recurring expenditure of Rs. 20,800 and a recurring expenditure of Rs. 10,200 are incurred in each centre.

SRI S. M. ANNAMALAI : ஆல் இந்தியா வில்லேஜ் ஸ்கீம் கோவை மாவட்டத்தில் மாத்திரம் 11 இடங்களில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. மற்ற மாவட்டங்களில் இவ்வளவு கூடுதலாக ஆரம்பிக்கப்படவில்லை. இதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆங்காங்கு இருக்கிற வசதிகளை பொறுத்தது.

District Central Banks and Land Mortgage Banks

*72 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் ஆயவுசெய்து பதிலளிப்பாரா—

ஜில்லா மத்திய பாங்குகளிலும் நில அடமான பாங்குகளிலும் தற்போதுள்ள முறைப்படி உள்ள காரியதரிசிகளுக்கு பதிலாக கவர்ன்மெண்ட் உதவியுடன் டிப்டி ரிஜிஸ்ட்ரார்களையும் சப்-டிப்டி ரிஜிஸ்ட்ரார்களையும் நியமிக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இல்லை ஐயா.

Harijan Welfare Schools

* 73 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the number of Harijan Welfare Schools in Coimbatore district; and

(*b*) the number of non-Harijan students in those schools in 1957?

THE HON. SRI P. KAKKAN : (*a*) 20

(*b*) 877.

MR. SPEAKER : இப்போது மணி பத்து ஆகிறது. கேள்வி-பதில் நேரம் இதோடு முடிவு அடைய வேண்டிய நேரம். இன்னும் ஐந்து கேள்விகள் இருக்கின்றன. இதை முடிப்பதற்கு ஒன்று இவைகளினுடைய பதில்கள் நடவடிக்கைகளில் அச்சடிக்கப்படவேண்டும், அல்லது இன்னும் ஐந்து நிமிடங்கள் நீட்டி இதற்கென்று ஒதுக்கி அதில் உப கேள்விகள் ஒன்றும் கேட்காமல் இருந்தால் சபையில் வைத்தே கேள்விகள் அத்தனையையும் முடித்து விடலாம்.

(ஐந்து நிமிட நேரம் ஒதுக்கப்பட்டது.)

[a] Printed as Appendix II on pages 297–299 infra.

[5th September 1958

Sri P. G. MANICKAM : ஸார், அரிஜனங்கள் அல்லாத மாணவர்களுக்கு 1957–58-ல் ஒதுக்கப்பட்ட தொகை என்ன ? இந்த நிதி அரிஜன நிதியிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறதா அல்லது வேறு நிதியிலிருந்தா ?

The Hon. Sri P. KAKKAN : இதற்கு தனி கேள்வி வேண்டும்.

Gazetted appointments

* 74 *Q.*—Sri M. C. MUTHUKUMARASWAMY : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கடந்த 1937–39, 39–46, 46–48, 48–50, 50–52, 52–54, 54–57, இவ் வருடங்களில் எத்தனை கெஜெட்டெட் பதவிகள் கொடுக்கப்பட்டன ?

(ஆ) அவைகளில் எத்தனை உத்தியோகங்கள் ஹரிஜனங்களுக்கு வழங்கப்பட்டன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The time and labour involved in collecting the particulars ranging over a period of twenty years in respect of the various departments in the State will not be commensurate with the purpose that they may serve.

Shooting

* 75 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have received any communication from the Centre about shooting at the crowd either to disperse or to kill; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) The Government consider that it would not be in the public interest to divulge the contents of the communication.

(Sri N. K. Palanisami rose.)

Mr. SPEAKER : Only answers to questions will be read. No supplementary questions can be put. The hon. Member can give notice of another question.

Manufacture of brushes

* 75-A *Q.*—Sri P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) பனைமரத்தின் மட்டையிலிருந்து பிரஷ்கள் செய்யப்படும் குடிசைத் தொழில் எந்தெந்த இடங்களிலே நடத்தப்பட்டு வருகின்றன ?

(ஆ) 1958–59-ஆம் வருஷத்திலே இத் தொழில்கள் எந்தெந்த இடங்களிலே ஆரம்பிப்பதற்காக அரசாங்கம் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Vedaranyam in Tanjore district; Devipatnam in Ramanathapuram district; Kulasekarapatnam, Tirunelveli town in Tirunelveli district; Kolachal in Kanyakumari district; and Sholavaram in Chingleput district.

(*b*) Departmental training-*cum*-production centres were set up by Government at the first three places mentioned in the answer to clause (*a*) and they will be continued during 1958-59. There is no proposal to set up any other new centre for the industry during 1958–59.

5th September 1958]

Films

* 75-B *Q.*—Sri S. LAZAR and Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any representations have been made to the Government by the film producers of Tamilnad in regard to the cut in import of raw films; and

(*b*) if so, whether there is any proposal before the State Government to take up the matter with the Government of India?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The Government of India have been addressed to remove the cut imposed on the import of raw film and also to allocate the available raw film among the three major film producing centres, viz., Madras, Bombay and Calcutta equitably based on the number of pictures released from each of the regions during the past year and the number of pictures under production at present.

Intensive manuring scheme

*75-C *Q.*—Sri P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

நெல், கரும்பு இவற்றைச் சாகுபடி செய்வதற்காக விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதற்காக தீவிர உரமிடும் திட்டத்தின் கீழ் 1958–59-ம் வருஷத்தில் ஜில்லாவாரியாக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : A statement [a] is placed on the table of the House.

Co-operative stores

* 75-D *Q.*—Sri N. R. THIAGARAJAN : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1947-ல் தற்போதைய சென்னை ராஜ்யத்தில் எத்தனை கூட்டுறவு பலசரக்கு ஸ்டோர்கள் இருந்தன ?

(ஆ) தற்போது எத்தனை ஸ்டோர்கள் இருக்கின்றன.

(இ) கலைக்கப்பட்ட ஸ்டோர்களின் மீதமுள்ள பணம் என்னவாயிற்று ?

(ஈ) எத்தனை ஸ்டோர்கள் (i) நஷ்டத்தினால் (ii) கையாடலால் மூடப்பட்டன ?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) There were 935 co-operative stores in 1947 in the area comprising the present Madras State.

(*b*) There were 517 co-operative stores in this State as on 31st December 1957.

(*c*) The surplus funds of the stores liquidated in the districts of Salem, Nilgiris and Ramanathapuram amounting to Rs. 1,362 were remitted into the concerned District Central Banks towards

[a] Printed as Appendix III on pages 300 infra.

their Reserve Funds. The surplus funds of the stores in the Tuticorin circle amounting to Rs. 1,954 were utilized in the construction of a godown. The surplus funds of about Rs. 38 of the stores in Vellore (North) circle were contributed towards the construction of a school building.

(*d*) (i) 528 stores were liquidated due to loss or other reasons.

(ii) 24 stores were liquidated due to misappropriation.

Japanese method of cultivation

* 75-E *Q.*—Sri P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ஜப்பானிய விவசாய முறையானது எந்தெந்த ஜில்லாக்களிலே எத்தனை எத்தனை ஏக்கர் நிலங்களிலே 1957–58, 1958–59-ம் வருஷங்களிலே கையாளப்பட்டது ?

(ஆ) இவ்வித விவசாய முறையை விவசாயிகளுக்கு அறிவிப்பதற்காக விவசாய இலாகாவாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளாலும் எடுத்துக் கொள்ளப்பட்ட பிரசார முறைகள் யாவை ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The answer[a] is placed on the table of the House.

Kerosene

* 75-F *Q.*—Sri K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that kerosene deposits are available in the coastal areas along Keelakkarai to Erwadi and near Devipattanam in the Ramanathapuram taluk; and

(*b*) if so, the action taken by the Government to exploit them?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Glass manufacture

* 75-G *Q.*—Sri P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கண்ணாடியில் வளையல்கள், மாலைகள், விளையாட்டுச் சாமான்கள் தயாரிக்கும் தொழிலைப் பயிலுவதற்காகப் பயிற்சி சாலைகள் எந்தெந்த இடங்களில் நிறுவப்பட்டிருக்கின்றன ?

(ஆ) இப் பயிற்சி பெற்ற தொழிலாளர்களிலே எத்தனைபேர் ஒன்று சேர்ந்து எந்தெந்த இடங்களிலே கூட்டுறவு முறையிலே தொழிற்சாலைகள் நிறுவியிருக்கிறார்கள் ?

(இ) இத் தொழிற்சாலைகளை நிறுவதற்காக மானியமாகவும், கடனாகவும் கவர்ன்மெண்டால் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Madurai (Madurai district), Nedumarathi (Salem district) and Guindy (Chingleput district).

---

[a] Printed as Appendix IV on pages 301–302 infra.

5th September 1958]

(*b*) No co-operative society for the manufacture of glass bangles, beads, etc., has so far been formed.

(*c*) Does not arise in view of answer to clause (*b*).

* 75-J *Q.*—SRI M. KALYANASUNDARAM : Sir, on a point of order. Without putting supplementary questions, the usefulness of the question hour is limited. Therefore, I submit that this question may be taken up to-morrow.

MR. SPEAKER : I have no objection.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Question No. 75-H may also be taken up to-morrow.

MR. SPEAKER : Question Nos. 75-H and 75-J will be taken up to-morrow. Now, questions are over.

II.—ADJOURNMENT MOTIONS.

(1) FIRE INCIDENT IN PULIANTHOPE, PERAMBUR BARRACKS, MADRAS.

MR. SPEAKER : I have received notice of the following adjournment motion under rule 41 of the Assembly Rules, from the hon. Member, Sri S. Pakkirisami Pillai :

'That this House do stand adjourned to discuss a definite matter of urgent public importance, viz., the fire incident in Pulianthope, Perambur Barracks, Madras, in which a large number of huts were gutted to ashes, several number of poor families were rendered homeless and there is also loss of life'.

I wonder how this would be the responsibility of the Government and how this could be dismissed as an adjournment motion. The hon. Member may give notice of a short notice question and the answer may be given and supplementary questions may be asked. I do not think there is any justification for an adjournment motion like this. Of course, I wish to hear what the hon. Member has to say about it.

SRI S. PAKKIRISAMI PILLAI : கனம் சபாநாயகர் அவர்களே, நேற்றைய தினம் பிற்பகல், திடீரென்று, எதிர்பாராத விதத்தில், தீ விபத்து நேர்ந்தது. அங்கே இருக்கின்ற அத்தனை ஏழை மக்களுடைய குடிசைகளும் சாம்பலாயின. அப்படிச் சாம்பலான பிற்பாடு, நமது தீயணைக்கும் படையினர் அங்கு வந்தார்கள். தீயணைக்கும் படையினர் வருவதற்கு முன்னாலேயே, அங்கு இருக்கும் மக்கள்—பொது ஜனங்கள்—கூட இருந்து உதவி செய்து தீயை அணைத்து விட்டார்கள். இருந்தாலும் அங்கு இருந்த ஏழை மக்களுக்கு இப்போது இருப்பதற்கு இடம் கிடையாது. அவர்கள் மிகவும் நிர்க்கதியான நிலையில் இருக்கிறார்கள். அந்த நிர்க்கதியாக இருக்கும் மக்களிடம்—அவர்களுடைய வீடெல்லாம் சாம்பலாயின, அவர்களுடைய சொத்தெல்லாம் சாம்பலாயின—பணம் கிடையாது. ஏதோ, கார்ப்பொரேஷன் அதிகாரிகள், கமிஷனர், மேயர் எல்லோரும் அந்த இடத்திற்கு விஜயம் செய்து, நேற்று இரவு 11 மணிக்கு அந்த மக்களுக்குச் சாப்பாடு போட்டார்கள். அவர்களுக்கு

[Sri S. Pakkirisami Pillai] [5th September 1958

வேறு ஒன்றும் கிடையாது. அவர்களுக்கு நிவாரணம் அளிக்க எந்த வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கப் போகிறது என்று அரசாங்கத்திடமிருந்து அறிய, இதை விவாதிக்கவேண்டும். இது மிகவும் அவசரமானது—அவசியமானதும் கூட என்று நினைக்கிறேன். ஆகையால் இதை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : Has the Hon. the Leader of the House got anything to say about it?

THE HON. SRI C. SUBRAMANIAM : Nothing, Sir.

MR. SPEAKER : However pitiable the condition of the people may be—I also sympathise with them—I do not think it comes under rule 41 and therefore I do not give permission to the hon. Member to move it. He may give notice of a motion under rule 40 or a short notice question.

SRI S. PAKKIRISAMI PILLAI : ஷார்ட் நோட்டீஸ் கொஸ்டின் கொடுத்தால் அதற்கு உடனே பதிலளிப்பார்களா ?

MR. SPEAKER : மந்திரி அவர்கள் ஒத்துக்கொண்டு நான் அனுமதித்தால் அது உடனே பதிலளிக்கப்படும்.

(2) FAILURE OF GOVERNMENT TO BRING IN LEGISLATION FOR KAIAERUVARAMDARS AND MATTUVARAMDARS.

MR. SPEAKER : The next adjournment motion is in the name of the hon. Member, Sri Kalyanasundaram. He wants to discuss the following matter of urgent public importance :—

'The failure of the Government to bring in necessary legislation to give protection against eviction to the kaiaeruvaramdars and mattuvaramdars, at least on the lines suggested by the Select Committee, as this failure has resulted in a large number of eviction of Harijan tenants in Tiruchirappalli district and consequent unrest and hindrance to food production'.

I am afraid, the hon. Member must realize that under item (ix) of rule 49 of the Assembly Rules, the motion is inadmissible. It says—

'The motion must not refer to grievances which can be remedied only by legislation'.

This is a grievance which can be remedied only by legislation.

SRI M. KALYANASUNDARAM : Sir, there is another point. With regard to eviction, just as the Hon. Minister has explained, in the case of tenants who are resisting eviction peacefully, the police need not interfere. But it is the responsibility of the Government to see that the police does not aid landlords to evict their tenants. In pursuance of the policy which they stated in the morning, that the Government would adopt in the case of peaceful strikes, they should come out at least with the assurance that the police will not interfere in these things so long as there is no cause for violence or anything of that kind. The Hon.

5th September 1958] [Sri M. Kalyanasundaram]

Minister should have brought a Bill as soon as the Assembly meeting was over. Then it would have acted as a check against the landlords. When landlords come to know that the Bill is not going to be enacted, they will evict the tenants. 10-10 a.m.

Mr. SPEAKER: Hon. Member must remember that grievances cannot be brought forward in an adjournment motion.

Sri M. KALYANASUNDARAM: The points raised are the action of the landlords and the action of the police in assisting the landlords in evicting the tenants. The matter is regarding eviction.

Mr. SPEAKER: Unfortunately, the hon. Member has mixed up the question with the issue of eviction with police aid. If he brings in a separate motion on eviction alone, I shall consider it on its merits.

III.—PRIVILEGE MOTION *RE* A PUBLICATION IN THE 'KALKI'.

Mr. SPEAKER: There is now a motion of privilege raised by Sri V. S. Manickasundaram. The hon Member should not argue on the merits of the case. He may make a brief statement.

Sri V. S. MANICKASUNDARAM: Sir, I beg to raise a point of privilege. கனம் சபாநாயகர் அவர்களே, 31-8-1958 தேதியிட்ட கல்கி இதழில் "ஜில்லாப் பிரிவினை" என்ற உப தலையங்கத்தில் "ஜில்லாப் பிரிவினைத் திட்டத்தைச் சென்னை சர்க்கார் மேற்கொள்வது உசிதமாகத் தோன்றவில்லை. சிறு ஜில்லாவாக இருந்தால் நிர்வாகம் சிறப்பாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு, சட்ட சபை அங்கத்தினர்கள் தங்கள் அக்கிரமச் செல்வாக்கை விருத்தி செய்து கொள்ளப் பார்க்கிறார்கள். சட்ட சபை அங்கத்தினர்கள் நிர்வாகத்தில் பிரவேசிப்பது நியாயமல்ல என்று கேரள ராஜ்ய நிர்வாகத்தைப் பற்றி குறை சொல்லிக் கொண்டிருக்கும்போதே அது காங்கிரஸ் நிர்வாகத்தில் தலை விரித்தாடுகிறது" என்று வெளியாகியிருக்கிறது. இந்தப் பிரசுரம் என்னுடைய அபிப்பிராயத்தில் சட்டசபை அங்கத்தினர்களைப் பற்றி அவதூறாகப் பேசுவதாகும். சட்ட சபை அங்கத்தினர்களைப் பற்றி அவதூறாகப் பேசும் பட்சத்தில் அது சட்டசபை அங்கத்தினர்களுடைய உரிமையை பாதிக்கும் என்பதற்கு "மேய்ஸ் பார்லிமெண்டரி பிராக்டிஸ்" லிருந்து ஒரு பகுதியைப் படித்துவிட்டு இதைத் தங்கள் தீர்ப்புக்கு விடுகிறேன்.

"Written imputations as affecting a Member of Parliament amounts to breach of privilege, without perhaps, being libels at common law".

இந்த நிலைமையில் இது சட்டசபை அங்கத்தினர்களுடைய உரிமையை பாதிக்கும் ஒரு விஷயம் என்று நான் நினைப்பதால், இதற்குத் தாங்கள் தீர்ப்புக் கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

Sri M. KALYANASUNDARAM: இந்த மோஷன் என்ன? எந்தப் பத்திரிகையைப்பற்றி?

Mr. SPEAKER: நான் தான் "கல்கி" யைப் பற்றி என்றுசொன்னேனே The hon. Member, Sri V. S. Manickasundaram has given notice of a motion regarding a breach of privilege. He states that

[Mr. Speaker] [5th September 1958.

the Tamil Weekly 'Kalki' on page 4 of the 31st August 1958 issue under the heading 'ஜில்லா பிரிவினை' has made a statement which is derogatory to the House.

SRI M. KALYANASUNDARAM: What is the motion, Sir?

MR. SPEAKER: The hon. Member read it just now. On going through this article, I find that one passage which may be construed as wrong is the reference 'சட்டசபை அங்கத்தினர்கள் தங்கள் அக்கிரமச் செல்வாக்கை In my opinion, this does not refer to the conduct of any Member in the Legislative Assembly nor does it refer to any business conducted or to be conducted in the House. The matter pertains only to the activities of Members outside the Legislative Assembly. Though this comment is not in good taste, I do not think that a *prima facie* case has been made out. I therefore rule that no *prima facie* case of breach of privilege has been made out.

IV.—MOTION UNDER RULE 40 *RE* KALEESWARAR MILLS, COIMBATORE.

MR. SPEAKER: Notice of the following motion under rule 40 of the Assembly Rules has been given by hon. Members, Sri N. Marudachalam and Srimathi Kolandai Ammal:

"தொழிலாளிகளுக்கு மூன்று மாதமாக சம்பளம் கொடுக்கப்படாமல், எவ்வித எச்சரிக்கையுமின்றி சட்ட விரோதமாக மூடப்பட்ட கோவை காளிஸ்வரர் மில்லை சர்க்கார் எடுத்து நடத்துமாறும், கம்போடியா மில் தொழில் தகராறை தீர்த்து வைக்குமாறும்."

SRI N. MARUDACHALAM: கனம் சபாநாயகர் அவர்களே, கோயம்புத்தூரிலுள்ள காளிஸ்வரர் மில்லில் சென்ற மே மாதத்திலிருந்து அங்கே வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு சம்பளம் கொடுக்கப்படவில்லை. இவ்வாறு சம்பளம் கொடுக்கப்படவில்லை என்ற விஷயம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி தெரிவிக்கப்பட்டிருந்தபோதிலும் கூட, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சம்பள பட்டுவாடா சட்டப் பிரகாரம் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும் அந்த மில் முதலாளி ஹைகோர்ட்டு தீர்ப்பு வந்த பிறகும் கூட அதை மீறி யிருக்கிறார். அத்தீர்ப்பை மீறின பிறகும் கூட, அரசாங்கம் அந்த மில் முதலாளி மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. தவிர, சென்ற மாதம் 10-ம் தேதியன்று, சட்டவிரோதமாக, எந்தவித எச்சரிக்கையும் இல்லாமல் மில் மூடப்பட்டுள்ளது. மில்லை மூடுவதற்கு மூன்று மாதத்திற்கு முன்னால் நோட்டீஸ் கொடுக்கவேண்டும். அவ்வாறு நோட்டீஸ் கொடுக்கப்படவில்லை. மில் மூடிய பிறகும் கூட, தொழிலாளிகள் தங்களுடைய சம்பளத்தைப் பெறுவதற்காக, வெளியே வந்தால் மில் பேல்கள் வெளியே போய்விடும் என்ற காரணத்தினால், உள்ளே இருந்து கொண்டு மில்லைப் பாதுகாத்து, 16-ம் தேதி வரையிலும் மில்லுக்குள்ளேயே இருந்தார்கள். இந்த விவரம் அரசாங்கத்துக்கும் தெரியும். மந்திரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தும் அதன் பேரில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தீர்ப்பு வந்த பிறகு, மத்திய அரசாங்கத்தின் லேபர் கமிஷனரும், தொழில் சங்கத் தலைவர்களும், அவர்கள் மூன்று பேர்கள் நியமித்தார்களே அவர்களும் சேர்ந்து, '2-ம். தேதியன்று சம்பளம் கொடுக்கப்படவேண்டும், 5-ம் தேதியிலிருந்து மில்லை நடத்தவேண்டும்' என்று கையெழுத்திட்டு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஒப்பந்தத்தை மீறினதற்காக எந்தவிதமான

5th September 1958] [Sri N. Marudachalam]

நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. உடனடியாக தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்காக தக்க நடவடிக்கை எடுப்பதோடு, சட்டத்தை மீறிய மில் முதலாளி மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கம்போடியா மில்லில் இரண்டு மாத காலமாக தகராறு நடந்து கொண்டே இருக்கிறது. கம்போடியா மில் இப்பொழுது மூடப்பட்டிருக்கிறது. மந்திரி அவர்களே இந்த தகராறை கோர்ட்டில் தீர்ப்புக்கு விட்டு வடலாமென்று சொல்லிவிட்டு வந்ததாகத் தெரிகிறது. கோர்ட்டு தீர்ப்பு வருகிற வரையிலும் தொழிலாளரின் வாழ்க்கை நிலைமை என்ன ஆகிறது? அதுவரையிலும் குறைந்தபட்சம் அரைச் சம்பளமாவது கொடுப்பதற்கு அரசாங்கம் உத்திரவிடவேண்டும். கோர்ட்டின் தீர்ப்பு வருவதற்கு 1 அல்லது $1\frac{1}{2}$ வருஷம் ஆகலாம். ஆகவே, அதுவரையிலும் தொழிலாளரின் வாழ்க்கையை பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமையாகும். மேற்சொன்ன காரணங்களுக்காக காளீஸ்வரர் மில்லை நடத்துவதற்கும், அந்த மில் தொழிலாளிகளுக்கு சம்பளம் கொடுப்பதற்கும், கம்போடியா மில் தொழிலாளிகளுக்கு கோர்ட் நடவடிக்கை முடியும் வரையிலும் சம்பளம் கொடுப்பதற்கும் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Srimathi KOLANTHAI AMMAL : கனம் சபா நாயகர் அவர்களே, கோயம்புத்தூர் ஜில்லாவிலே கம்போடியா மில்லில் வேலை நிறுத்தம் காரணமாக கடந்த இரண்டு மாதங்களாக தொழிலாளிகளுக்கு மிகவும் கஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பது அனைவரும் அறிந்ததே. அந்த மில்லிலே வேலை செய்யக்கூடிய 2,700 தொழிலாளிகளும், பொதுவாக கோயம்புத்தூரிலேயே பொருளாதாரத் துறையில் பின்தங்கியவர்கள் என்பது மிகவும் முக்கியமான விஷயம். இரண்டாவதாக மில்லிலே வேலைசெய்கின்ற நிரந்தரத் தொழிலாளிகளை பதலிகளாக வேலைக்கு அமர்த்தவேண்டுமென்ற மில் முதலாளியின் கோரிக்கை மிகவும் பலவந்தமாக இருக்கிறது. மூன்றாவதாக, வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிற தொழிலாளிகளுக்கு அரசாங்கமானது நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று இருக்கிற தொழில் சட்டத்தை கண்டிப்பாக அமல் நடத்த வேண்டுமென்பது. இந்த மூன்று பிரச்னைகளையும் வலியுறுத்துவதுடன், இந்த மில்களிலே வேலை செய்துவந்தவர்கள் இரண்டு மாத வேலை நிறுத்தம் காரணமாக பண நெருக்கடியால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதையும் எடுத்துக்கூற விரும்புகிறேன். அவர்களுடைய குடும்பங்கள் மிகவும் கஷ்டப்படுகின்றன. அங்கே வேலை செய்கின்ற 2,700 தொழிலாளிகளில் குறைந்தபட்சம் 2,500 தொழிலாளிகள் என்னுடைய தொகுதியிலே உள்ளவர்கள். அது மட்டுமல்ல. ஜனவரி மாதம் முதல் மின்சார வெட்டு வந்ததன் காரணமாக, மாதத்திலே 10 அல்லது 12 நாட்களுக்கு வேலை குறைந்து ஏற்கனவே 4 மாத காலமாக குறைந்த சம்பளத்தை வாங்கி கடனிலே ஆழ்ந்திருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து வேலை நிறுத்தம் அவர்களுக்கு கஷ்டத்தைக் கொடுக்கிறது. ஆகவே இதை எல்லாவற்றையும் கவனித்து, இந்த இரண்டு மில்களும் நல்ல முறையில் வேலை செய்வதற்கு அவசரமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

* The Hon. Sri R. VENKATARAMAN : Sir, the management of the Kaleeswarar Mills suddenly closed down the mills on and from 13th August 1958, without any prior notice to the workers and without any payment of wages in lieu of retrenchment compensation, as required under the Industrial Disputes Act, 1947. This resulted in loss of employment to about 2,300 workers. In their notice, dated 13th August 1958, the management stated that the closure of the mill was due to factors such as heavy and continuous losses during the year 1957–58, accumulation 10-19 a.m.

[Sri R. Venkataraman] [5th September 1958

of stocks of cloth and yarn, demands of the cotton and stores merchants and other creditors for payment of monies due to them, lack of finance for purchase of raw materials and credit facilities for raising further finance for working the undertaking. Even before the closure, the affairs of the mill during the past few months have not been quite satisfactory due to a litigation between the shareholders and the former local agent. The wages of the workers were not regularly paid on the due dates from the month of March 1958 onwards. While the wages for March and April 1958 were paid as late as 19th April 1958 and 26th June 1958 respectively, the wages for the months of May to July 1958 remained unpaid despite the High Court's order directing the management to take steps for the prompt payment of wages to the workers on the due dates. On 19th August 1958 Government issued a Press Note explaining the situation.

As the workers were not paid wages for three months, action was taken under the Payment of Wages Act and some of the movable properties belonging to the management were attached, pending issue of final orders for recovery of the delayed wages due to the workers. Besides this, the question of prosecuting the management for contravention of the provisions of the Payment of Wages Act and the Industrial Disputes Act was also taken up. Meanwhile, to give relief to the workers, arrangements were made to disburse to the workers their provident fund accumulations. I wish to state that if the workers want their provident fund accumulations, the Government will make arrangements to pay a portion of the accumulations to them.

SRI M. KALYANASUNDARAM : Is it by way of an advance or is it final payment?

THE HON. SRI R. VENKATARAMAN : These things will have to be discussed and settled.

The Government of India have been apprised of the situation and requested to cause a full and complete investigation into the working of the mill under the Industries (Development and Regulations) Act, 1951. It is understood that an officer deputed by the Government of India visited the mills.

Meanwhile, the High Court passed orders on 22nd August 1958 appointing Sri N. Ramachandra Iyer, Sri P. S. Krishnaswamy Iyengar and Sri T. S. Sundaram Pillai, as a Council of Administrators for the Kaleeswarar Mills and instructed the administrators to give priority to the payment of wages to the workers. An agreement was reached between the Council of Administrators and the workers on 27th August 1958. According to this agreement, the arbitrators agreed to pay the workers, the arrears of wages, salary for the months of May, June and July 1958, on or before the 2nd September 1958. The parties also agreed to reopen the mills and resume work not later than 5th September 1958.

5th September 1958] [Sri R. Venkataraman]

It is understood that the Council of Administrators have not paid the wages to the workers with reference to the settlement, dated 27th August 1958 and that they are moving the High Court for adequate security for financing the amount required. The further developments are being closely watched by Government. The Government of India are also being apprised of the latest position and requested to take necessary action to meet any eventualities.

Cambodia Mills, Limited, Coimbatore.—The management of Cambodia Mills, Limited, Coimbatore, served notices of retrenchment to 251 badlies and discharged 96 temporary workers on 21st December 1957. The Commissioner of Labour held conciliation on 17th January 1958 and brought about a settlement. As per this settlement, the mill agreed to work three shifts of 7½ hours duration each subject to the condition that the Electricity Department accorded necessary relaxation of peak hour restrictions. The management subsequently informed the Commissioner of Labour that they could not give effect to the terms of settlement due to their inability to get relaxation of peak hour restrictions from the Electricity Department and that they have, therefore, decided to give effect to their original proposals, viz., closure of one shift and to retrench 251 badlies to avoid the total closure of the mills. Notice to 248 badlies were also issued. The workers went on a strike from 1st July 1958 protesting against the action of the management. The Government called for the parties and held a discussion at Madras on 4th August 1958. During the discussion, the Government suggested certain proposals to the parties for arriving at an amicable settlement. But the management informed the Government that the proposals suggested by the Government were not acceptable to them. After examining the question further in consultation with the Commissioner of Labour, the Government have referred the dispute for adjudication.

V.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER *RE* NOTICE OF AMENDMENTS.

MR. SPEAKER: I have fixed 5th September 1958 as the last date on which amendments for the following Bills have to be submitted to office :—

(1) The Madras District Development Councils Bill, 1958.
(2) The Madras City Municipal (Amendment) Bill, 1958.
(3) The Madras District Municipalities (Amendment) Bill, 1958.

We have decided to take up these Bills for consideration on 8th September 1958. Members tell me that they have not got copies of the Bills. I thought that the Bills were published in the *Fort St. George Gazette* and distributed to all Members. As a precaution, we give copies in the House. Members must have got copies. If they have not got, then I can think of something else. Unfortunately, I cannot extend the time for giving notice of amendments, because to-morrow and the day after are holidays. If Members do not give notice of amendments by this evening,

how can they expect the office to reneo the amendments and distribute them to Members? If they have got copies in their homes, then they have no justification to say that they had no time to look into the Bills.

SRI M. KALYANASUNDARAM : Sir, the difficulty of the Members coming from the mofussil is this. Copies have been sent along with the gazette. They would have gone there after we left our homes. We are not in a position to know the provisions of the Bills. We want copies of the Bills. On receipt of copies, we shall give notice of amendments.

MR. SPEAKER : Extra copies have not yet come from the press, but they are expected within an hour or two. I shall see that they are handed over to Members this evening by putting special staff on this work. I shall see that amendments are circulated to Members.

SRI M. KALYANASUNDARAM : May we give notice of amendments till 10 o'clock to-morrow?

MR. SPEAKER : That will not be possible. To-morrow is a holiday. How do you expect the staff to work?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, we will perhaps be taking up only one Bill on Monday. With reference to that Bill, Members may give notice of amendments before this evening. We may choose one non-controversial Bill, say, the Madras District Development Councils Bill. With reference to the other Bills, Members may give notice of amendments till 12 noon on Monday.

MR. SPEAKER : Is this suggestion acceptable to hon. Members?

HON. MEMBERS : Yes, Sir.

MR. SPEAKER. I have no objection. I will extend the time for receipt of amendments to the Madras City Municipal (Amendment) Bill, 1958, and the Madras District Municipalities (Amendment) Bill, 1958, till 12 o'clock on the 8th on the understanding that these Bills will be taken up on he 9th or a little later. But in regard to the Madras District Development Councils Bill, 1958, hon. Members will have to give notice of amendments to-day. Hon. Members may not forget that to-morrow and the day after to-morrow are holidays.

SRI M. KALYANASUNDARAM : மூன்று தினங்களுக்குள் இந்த மசோதாக்கள் அங்கத்தினர்களுக்கு கொடுக்கப்படும் என்று எதிர்பார்த்தோம். இன்றுவரையில் கொடுக்கப்படவில்லை. இன்றைக்கு மசோதாக்களை வாங்கிக்கொண்டு இன்று மாலைக்குள் திருத்தங்கள் கொடுப்பது என்பது சுலபம் அல்ல. நாளைக்கு விடுமுறை நாளாக இருந்தால் கூட, பிரத்தியேக சிப்பந்திகளை வைத்துக்கொண்டு நாளை மாலை 3 மணி வரை திருத்தங்கள் கொடுப்பதற்கு காலவரையை நீடிக்கலாம் என்று நினைக்கிறேன்.

MR. SPEAKER : I shall look into the matter and make an **announcement later.**

VI.—GOVERNMENT BILL

THE MADRAS CHILDREN (AMENDMENT) BILL, 1958 (L.A. BILL NO. 10 OF 1958).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, I beg to move—

"That the Madras Children (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 10 of 1958), as amended by the Joint Select Committee be taken into consideration."

Legislation dealing with juvenile delinquency in this State is contained in the Madras Children Act, 1920. The question of amending the Act has come up to Government frequently, as the methods pursued in different certified schools and other institutions established under the Act are considered inadequate. In 1950, a Bill was prepared on the basis of the recommendations of Lt. Col. Ford Thomson, the Adviser in Child Psychology to the Government in 1948. The Bill was considered by the Provincial Advisory Board of Education. This Board while expressing general agreement with the terms of the Bill, suggested the constitution of a committee to consider in detail the provisions of the Bill. The Government accordingly appointed the Madras Children Bill Committee, 1950, to consider the provisions of the Bill. Subsequently in view of the large expenditure involved and the then impending partition of the State the proposal to legislate on the lines of the Madras Children Bill, 1950, was deferred. In 1955, the Government appointed a committee under the Chairmanship of the Home Secretary to scrutinise the Madras Children Bill, 1950, and the Central Children Bill, 1953, and suggest modifications to the Children Act. The present Bill is mainly based on the recommendations of this Committee. The Joint Select Committee has subjected the clauses of the Bill to a detailed scrutiny in the light of the evidence tendered before it, as a result of which various changes have been made in the Bill.

I shall briefly explain the main provisions of the Bill :

There are now two classes of Certified Schools viz., Junior Certified Schools and Senior Certified Schools. The Junior Certified School is at present admitting non-offenders under the age of 14 years and offenders under 12 years of age. The Senior Certified School is intended for offenders who are 12 years of age and above but less than 16 years of age and uncontrollable children. According to the provisions of the Bill the Junior Certified School will be admitting non-offenders under the age of 16 years. Juvenile offenders of and above 12 years of age will continue to be sent normally to a Senior Certified School. The Courts will have powers in special circumstances to send to a Junior Cetified School only those juveniles who are of the age of 12 or 13 years. The Senior Certified Schools will be admitting offenders whose age is 12 and above but less than 18 years.

[Sri M. Bhaktavatsalam] [5th September 1958

According to the existing provisions, a youthful offender may be ordered to be committed to a Senior Certified School for a period of not less than two and not more than five years but not in any case extending beyond the time when the youthful offender will attain the age of 18 years. In the case of a child sent to a Junior Certified School, no minimum period has been prescribed but the child should not be detained beyond the date on which he attains the age of 16 years. The Bill provides for detaining a youthful offender in a Senior Certified School for not less than two and not more than five years but not in any case extending beyond the date on which he will attain the age of 21 years.

The Bill also provides that in the case of a child sent to a Junior Certified School the period should be not less than two years and not in any case extending beyond the time when the child will attain the age of 18 years.

The Bill provides for the committal of children who beg in any street or places of public resort and for the transfer of a child placed in suitable custody to a certified school or *vice versa*.

A new provision is made in the Bill for placing a youthful offender, child or young person, found incorrigible after release, under the supervision of a probation officer or in an after-care organization. Adequate provisions have also been made to deal with special offences committed against children and young persons. The Bill provides that a competent court before passing an order in respect of a child or young person shall have regard to certain circumstances including the report made by Probation Officers or of reports made or obtained by any person or organization approved by the Government.

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Children (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 10 of 1958), as amended by the Joint Select Committee be taken into consideration."

I have not been given the names of Members who wish to speak on this Bill. Anyway, I have received till now the names of four Members. If other Members want to speak, they may give their names and they will be called after these four Members have spoken.

* SRI T. SAMPATH : Mr. Speaker, I welcome this legislation. It is now more than 37 to 38 years that the Madras Children Act was first enacted in this State. A comprehensive legislation on the control and punishment of youthful offenders and also for the protection of children and young persons has been a longfelt need. I am glad that the Members of the Joint Select Committee have carefully considered the various aspects and they have recommended a number of changes in the Bill. The Bill is therefore designed to implement those changes and also to bring into practice a new concept, a radically new concept in the matter

5th September 1958] [Sri T. Sampath]

of training children and also in the matter of training delinquents and destitute children. One of the notable changes which the Select Committee has made is in regard to section 3. I welcome the change. Section 3 of the old Act prescribed the age for young person and youthful offender as 16 years. This has now been raised to 18 years. It is a very good change. I welcome it. Again, under section 16 of the old Act, admission of these destitute children in Certified Schools was left to the discretion of the managers of such institutions conducted not by the Government, but by private management. It was left to the management to take in children or not. My respectful submission in this regard is this. I would like to go to the extent of saying that this provision should be made obligatory. Because, accommodation is not such a big thing. I understand that accommodation can be provided if there is the will on the part of the management.

(Sri R. Srinivasa Iyer in the Chair.)

Section 36 provides for the establishment and trial in Juvenile Courts. Juvenile Courts have not been established in all the districts. So, the section says—

"Where no such separate court has been established, the court before which a child or young person is brought shall whenever practicable, sit either in a different building or room from that in which the ordinary sittings of the court are held or on different days or at different times from those at which the ordinary sittings are held."

This, according to me, will cause innumerable hardship and further it will not be conducive to the spirit of the Act. I therefore suggest that the Government should come forward to establish juvenile courts in almost all districts at least after this new Act comes into force.

I find that certain new sections have been inserted. I am of the view that these new sections will have a very salutary effect. I must, however, point out here that the punishments provided for under sections 30-C and 36-D are not quite adequate. Because, I find that they are of a mild type having regard to the nature of the offence. The punishment provided is only a small fine of Rs. 200 or so. It is a very simple punishment. I am of the view that we should prescribe some deterrent punishment. Having regard to the nature of the offence, imprisonment should be the proper punishment. I am glad that section 36-J makes all offences under the Act cognizable. This is very good. Unless the offences under the Act are made cognizable, it would be very difficult to work the Act effectively.

As at present, the number of probation officers appointed in the State is very inadequate. Further, they are asked to do a number of jobs. If really the Government want to enforce this Act effectively, they should consider the question of appointing more probation officers so that the Act may be enforced effectively.

One word about accommodation in schools. As at present, the accommodation is quite limited. I am only referring to schools run by the Government. The Government should do their best to make the maximum accommodation available for admission of children in these schools. With these few observations, I support the Bill.

SRI K. SATTANATHA KARAYALAR : அவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்த மசோதா உயரிய லட்சியத்தை அடிப்படையாகக் கொண்டுவரப்பட்டுள்ளது என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை. துள்ளித் திரிகின்ற பருவத்தில் அந்தத் துடிப்பை அடக்கி பள்ளிக்கு அனுப்பும் ஒரு நல்ல கைங்கரியத்தை சிரமேற்கொண்டு செய்ய இந்த மசோதா வழிவகை செய்கிறது. இருப்பினும் எந்த அளவு அனுபவசாத்திய ரீதியில் இது பயன் தரும் என்பதில் பல ஐயப்பாடுகள் உண்டு. 1920-ல் நிறைவேற்றபபட்ட மசோதாவின் அடிப்படையில், அதன்மீது சில திருத்தங்கள் செய்யப்பட்டு இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஓரளவு புது மசோதாவாகவே இது வந்திருந்தால், இது மிக நல்ல முறையில் பயன்படக் கூடியதாக இருந்திருக்குமென்று நினைக்கிறேன். இந்த மசோதாவில் கொண்டுவரப்பட்டுள்ள பல்வேறு திருத்தங்கள் மூலமாக, பல்வேறு குற்றங்கள் செய்த குழந்தைகளை சில சட்டதிட்டங்களுக்குட்பட்டு பராமரிப்பதற்கும், அதன் அடிப்படையிலே தவறு செய்தவர்களுக்கு எந்த முறையில் பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்பதற்கும் வழிவகைகள் விரிவுபடுத்தி கூறப் பட்டுள்ளன. ஆனால், அப்படி பாதுகாப்பு அளிக்கக்கூடிய குழந்தைகள் நமது நாட்டிலே எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள், எந்த அளவு ஒரு சமூகத்தின் நோயாக இது வளர்ந்துகொண்டு வருகிறது என்பதை அடிப் படையாக பரிசீலனை செய்ததாகத் தெரியவில்லை. 1920ல் வெளி நாட்டிலுள்ள வெள்ளையர் குழந்தைகளின் சட்டத்தின் (English Children Act) அடிப் படையில் இந்த சட்டம் இயற்றப்பட்டது. நாடு சுதந்திரம் அடைந்தபொழுது 1950-ல் இது எந்த முறையில் மாற்றி அமைப்பது என்ற புதிய கண்ணோட்டத் தோடு பரிசீலனை செய்யப்பட்டு, சென்னை குழந்தைகள் சட்டம் (Madras Children Act) என்று ஒரு மசோதா பிரசுரிக்கப்பட்டது. அது பல்வேறு காரணங்களினால் கைவிடப்பட்டது என்று தெரிகிறது. கமிட்டி பரிசீலனைக்குப் பிறகு, நிதி வசதி சரியாக இல்லாதது, ராஜ்ய புனரமைப்பு போன்ற காரணங் களை உத்தேசித்து இந்த மசோதா அன்று எடுத்துக்கொள்ளப்படவில்லை. திரும்பவும் 1953-ல் இந்த மசோதாவை எந்த முறையில் கொண்டுவரலாம் என்று பரிசீலனை செய்ததாகத் தெரிகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக மத்திய சர்க்கார் ஒரு மாதிரி சட்டம் கொண்டுவந்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே இந்தத் திருத்தங்கள் இப்பொழுது கொண்டுவரப்பட்டுள் ளன. ஆனால் 1950-ல் எந்தக் காரணத்திற்காக இந்த மசோதா கை விடப்பட்டதோ, அதாவது நாட்டில் நிதி வசதி சரியாக இல்லை என்ற நிலைமை இன்று மாறியிருப்பதாகத் தெரியவில்லை. இன்று நிதி வசதி இன்னும் மோசமாகத்தான் இருந்துக்கொண்டிருக்கிறது. சாதாரணமாக 3,000-க்கு அதிகமாக குழந்தைகள் 1956-ல் ஒரு ஆண்டில் பராமரிக்கப் பட்டதாகத் தெரிகிறது. அன்று குழந்தைகள் போதிய வசதியோடு அல்லது சரியான முறையிலே பராமரிக்கப்படுவதற்கு நிதி வசதி போதாமல் பற்றாக் குறையாக இருந்துள்ளது என்பது தெளிவாகிறது. அதே நிலை மையில் நாட்டிலே இன்றும் பல்வேறு குழந்தைகள் இந்த வசதிகள் கிடைக்கப்பெறாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதும் தெரிகிறது. ஏனெனில் கடைசியில் வந்த 1956-ம் ஆண்டு ரிபோர்டைப் பார்த்தால் 3,208 குழந்தைகள் பராமரிக்கப்பட்டுள்ளனர். அதிலே 1,635 குழந்தை கள் " டெஸ்டிடியூட்ஸ் " அதாவது பேணிப் பராமரிப்பதற்கு பொறுப்புள்ள யாரும் இல்லாத குழந்தைகள் என்று தெரியவருகிறது. களவு, மது விலக்கு குற்றங்களுக்காக முறையே 343, 367 குழந்தைகள் சிருஷ்டிக்கப் பட்டிருக்கின்றனர். இவைதான் மிகப் பெரிய குற்றங்களாக உள்ளன. இதிலே மிகப் பெரிய பங்கு அனாதையாக விடப்பட்ட குழந்தைகள் என்பது

5th September 1958] [Sri K. Sattanatha Karayalar]

நன்கு தெரிகிறது. குழந்தைகளை பொறுப்புடன் தாய் தந்தையர்கள் நல்ல முறையில் பராமரிப்பதற்கு போதிய வசதி இல்லாதவரை பல்வேறு துன்பங்கள் ஏற்படத்தான் செய்யும். இதற்கு அடிப்படை காரணம் என்ன வென்பதை ஆராய வேண்டும். இந்த நிலைமை நீடிக்கும் நாள் வரையில் இது பெருகிக்கொண்டே போகும். குறிப்பாக அனாதை குழந்தைகள் பெரிய பங்கு இருக்கும் என்று நினைக்கிறேன். நகரங்களில் செய்யப்படும் குற்றங்களுக்கும், கிராமங்களில் செய்யப்படும் குற்றங்களுக்கும் அடிப்படையில் பல வித்தியாசங்கள் இருப்பதை காண்கிறோம். அடிப்படையிலே இந்த மாறுதல்கள் இன்று சமூகத்தில் வளர்ந்துவருவதற்கு பல்வேறு காரணங்களை சுட்டிக்காட்ட அவா உருகின்றேன். நகரப்புறங்களில் வளர்ந்துவரும் குழந்தைகள் ஒரு புதிய மனப்பான்மையில் வளர்ந்துவருகின்றன. இந்த புதிய மனப்பான்மை வளர்ந்துவருவதற்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுக்கக்கூடிய முறையில் நாட்டில் சில பத்திரிகைகள் இருந்துகொண்டு வருகின்றன. இதை ஒரு மிகப் பெரிய கலையாக அவர்கள் நினைக்கிறார்கள். கொலையை பிரசுரிப்பதையே ஒரு கலையாக எண்ணி இவைகள் கொலைச் செய்திகளை பிரசுரிக்கின்றன. இம்மாதிரி செய்யும் மாதப் பத்திரிகைகள், வாரப் பத்திரிகைகள், தின ஏடுகள் பல நாடுகளில் வளர்ந்து வருகின்றன. துப்பறியும் நாவல்கள், தொடர் கதைகள் பல கொலையை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டு, அவைகளை இளைஞர்கள் படிக்கிறார்கள். சிறுவர் பகுதிகளில்கூட அம்மாதிரி எழுதப்படுகிறது. அதோடு மாத்திரமல்லாமல், சினிமா துறையில்கூட "திரில்லேர்ஸ்" துணிவுறும் செய்திகள், சம்பவங்கள் பல கொலை அடிப்படையில் எழுதப்பட்டும், இம்மாதிரியான பல படங்கள் வெளி நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டும் நமது நாட்டில் திரையிடப்படுகின்றன. உதாரணமாக கொலையை அடிப்படையாகக் கொண்டு **"Dial 'M' for murder" 'House of Wax' 'Murder in a minute'** போன்ற புது புது சினிமாக்கள் வந்துக்கொண்டே இருக்கின்றன. இவைகளெல்லாம் அடிப்படையிலே நமது சமுதாயத்தையே பாதிக்கின்றன என்பதை பல சந்தர்ப்பங்களில் கோர்ட்டு தீர்ப்புகளே எடுத்துக் கூறியிருக்கின்றன. இம்மாதிரி புத்தகங்களையும், படங்களையும் உள்நாட்டில் உற்பத்தி செய்வதையும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதையும் தடை செய்வதற்கும் இம்மாதிரி சம்பவங்களையே பிரசுரிக்கக்கூடிய பத்திரிகைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், இது ஓரளவுக்கு மிகப் பெரிய பாதகமாக வளர்ந்து விடும். ஜட்ஜுகள் கோர்ட்டுகளில் தீர்ப்புகள் கொடுக்கும்பொழுது இதுபற்றி பல முறை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். சமீபத்தில் நெல்லை ஜில்லாவில் ஒரு இளைஞன் கொலை குற்றத்திற்காக விசாரிக்கப்பட்டான். அவன் கொடுத்த வாக்குமூலத்தில், ஒரு சினிமா படம் பார்த்ததிலிருந்துதான் அந்த கருத்து அவனுக்கு உதயமானதாக கூறினான். அந்த சினிமா படத்தின் பெயரை நான் சொல்ல விரும்பவில்லை. அந்த ஜட்ஜு தன்னுடைய தீர்ப்பில் இதை மேற்கோளாகக் காட்டி இது போன்ற படங்களை தடை செய்வதற்கு சர்க்கார் வழிவகை செய்யவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார். அடிப்படையில் சமுதாயத்தில் உள்ள பல்வேறு சீர்கேடுகளையும், குறைகளையும் நீக்குவதற்கு வழிவகை செய்யாமல் இது போன்ற ஒரு மசோதாவை மாத்திரம் நிறைவேற்றி ஓரளவு மனச்சாந்தி தேட முயற்சிப்பது, தெருவில் போகும்பொழுது பிச்சைக்காரனுக்கு ஒரு காசு கொடுத்துவிட்டு மனச்சாந்தி அடைவதை ஒத்ததாக இருக்குமே தவிர, இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு காண்பதாக இருக்க முடியாது.

கடந்த 1956-ம் ஆண்டிலே இதற்காக நாம் செலவு செய்திருக்கக்கூடிய தொகையை பார்த்தோமானால், அது மிகக்குறைவானது. தனி நபர் நடத்தக்கூடிய பள்ளிக் கூடங்களுக்கு ரூ. 3,71,000 செலவழிக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் சர்க்கார் நடத்தக்கூடிய விடுதிகளுக்கு ரூ. 8,81,000 செலவழித்திருக்கிறோம். இந்தத் தொகை செலவு செய்திருந்தும் கூட, இவர்களுக்கு கிட்ட வேண்டிய வசதி கிட்டவில்லை. இவர்களுக்கு போதுமான சலுகைகள் கொடுப்பதற்கு பயன்படவில்லை. பாழடைந்த கட்டிடங்களை வனப்பான கட்டிடங்களாக மாற்றி அமைக்க வசதியில்லை. தனிநபர்

• [Sri K. Sattanatha Karayalar] [5th September 1958

பள்ளிக்கூடங்களில், சில பள்ளிக்கூடங்களுக்கு ஒரு குழந்தைக்கு ரூ. 25-ம் சில பள்ளிக்கூடங்களுக்கு ஒரு குழந்தைக்கு ரூ. 15-ம் கொடுப்பதாகத் தெரியவருகிறது. "டெஸ்டிடியூட்" குழந்தைகளுக்கு கொடுக்கக்கூடிய பணம் எல்லா பள்ளிக்கூடங்களுக்கும் ஒரே அடிப்படையில் கொடுப்பதுதான் நல்லது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மசோதாவில் கொண்டுவரப்பட்டுள்ள, குறிப்பாக சில திருத்தங்கள் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இதிலே, 36–வது பிரிவில், விரிவாக பல திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதைக் காண்கிறோம்; 36 பி-யில் இளங்குழந்தைகளை பிச்சை எடுக்கப் பயன் படுத்தக்கூடாது என்று இருப்பது மிகவும் போற்றத்தக்க கூடிய திருத்தம். இதுவும் கோர்ட் தீர்ப்பின் அடிப்படையில் வந்த ஒரு திருத்தந்தான். ஒரு கேஸில் குழந்தையை காலை முடக்கி பிச்சை எடுக்க ஒருவன் உபயோகித்த காரணத்தினால் வந்த ஒரு தீர்ப்பின் அடிப்படையில் எழுந்ததாக இருக்கலாம். இதிலே பெற்றோர்களைப் பொறுத்த மட்டில், எப்படிப்பட்ட பெற்றோர்கள் பிச்சை எடுக்கலாம் என்பதைபற்றி ஒன்றும் கூறப்படவில்லை. வேறு கதியில்லாத பெற்றோர்களை குழந்தைகளிலிருந்து பிரித்து எடுப்பது சாத்தியமான காரியம் அல்ல. ஆகவே அந்த அடிப்படையில், இந்த விதிக்கு மாற்றம், விதிவிலக்கு செய்வது நன்மை பயக்கும். இல்லாதுபோனால், இந்த சமூகத் தீங்கை மாற்ற முடியாது.

36—ஹெச் என்ற விதியிலே, ' **young girls exposed to risk of seduction, etc.** என்பதைப் பற்றி இருக்கிறது. இது மிகப் பெரிய தீங்கு, இந்த தீங்கு குழந்தைகளுக்கு அளிக்கப்படுவதை தடுக்க வேண்டுவது அத்தியாவசியம். கிராமங்களிலே 13, 14 வயதுள்ள சிறு பெண்கள் விவாகத்திற்குத் தயார் ஆகிறார்கள். பெற்றோர்கள் அவர்களுக்கு விவாகம் செய்துகொடுக்கிறார்கள். இதன் நடுவே காதல் நிகழ்ச்சிகளும் ஏற்படுகின்றன. அதன் காரணமாக ஏற்படும் பூசலும், விவகாரங்களும் அனந்தம். அப்படி இருக்கும்போது, சில விதிகள் சந்தர்ப்பங்களிலே தவறாக பயன் படுத்தப்படலாம். உதாரணமாக, '**If it appears to a Court on the complaint of *any* person that a girl under the age of sixteen years is** . . . . இப்படி இருப்பதில், ஒரு பெண் ஒரு நபரோடு காதல்கொண்டு காதல் வாழ்க்கை நடத்த விருப்பங்கொண்டு இருப்பதாக தவறாகப் புரிந்துகொண்டு, யாராவது ஒரு குடும்பத்திலே பெற்றோர்களுக்கு விரோதமாக ஒரு குறை கூறி அவர்களை வேண்டுமென்றே சந்தி சிரிக்கச்செய்து கோர்ட்டிலே நிறுத்தலாம். இந்தத் திருத்தம் நல்ல நோக்கோடு கொண்டுவரப்பட்டிருக்கலாம். ஆனால், நடைமுறையிலே, இது தவறான கண்ணோடு, மனப்பான்மையோடு பார்ப்பவர்களுக்கு, முக்கியமாக கிராமங்களிலே, தவறாகப் பயன் படுத்தக்கூடியதாக அமைந்து விடக்கூடும். அதை தவிர்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பிரிவு 39–டியில் பத்திரிகைகளில் விளம்பரம் செய்வது பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இது ஓரளவில் வரவேற்கக்கூடியதுதான். என்றாலும், பத்திரிகையில் பிரசுரிக்கக்கூடாது என்றிருந்தால் நன்றாக இருக்கும். பெயரையோ ஊரையோ குறிப்பிடாமல் பல இடஞ்சல்களை ஏற்படுத்த முடியும். இதையே கலையாகக் கொண்டு ஜீவனம் நடத்தும் பத்திரிகைகள் இருக்கின்றன. இவை நாட்டிலே இளைஞர்களிடையே தவறான எண்ணங்களையும், ஸெக்ஸ் ஸைகாலஜியையும் உண்டாக்குகிறது. சமாச்சாரங்களை கவர்ச்சியாக இருக்கும் வண்ணம் சாமர்த்தியமாக பிரசாரம் செய்கிறார்கள் சில பத்திரிகைக்காரர்கள். அதற்கு இடம் கொடுக்கக்கூடாது. ஆகவே இந்த பிரிவு பொதுவாக "டிஸ்க்ளோஸ்" செய்யக்கூடாது என்றுதான் இருக்கிறது. "ஒரு கிராமத்திலே, இன்ன பக்கத்திலே ஒரு இடம்" என்றால் போதும். இப்படியே மக்கள் உணர்ச்சியைத் தூண்டிவிடுகின்றன பல பத்திரிகைகள். இவைகளைத் தடைசெய்தாகவேண்டும்.

5th September 1958] [Sri K. Sattanatha Karayalar]

ஆகவே, இந்த திருத்தத்தில் " **no report shall be published** " என்று இருக்கவேண்டும். மேலும் அப்படி மீறி தவறு செய்தால், அதற்கு தண்டனை ஆயிரம் ரூபாய் அபராதம் மட்டுந்தான். தடையை மீறி பிரசாரம் செய்பவர்களுக்கு சிறை தண்டனை விதிக்கவேண்டும். அந்த விதத்தில் திருத்தம் இருக்கவேண்டும்.

அந்த முறையிலே, இந்தச் சட்டத்தைத் திருத்தி அமைக்க கனம் மந்திரி அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அந்த ரீதியிலே இந்த மசோதாவில் நான் மேலே குறிப்பிட்ட திருததங்களை நல்ல முறையிலே அமைத்து, இந்த மசோதாவைச் சட்டமாக்க வேண்டும் என்ற அவாவோடு என் உரையைச் சபை முன் சமர்ப்பிக்கிறேன்.

*DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN: தலைவர் அவர்களே, இந்த குழந்தைகள் சம்பந்தமான திருத்த மசோதாவை நான் முழு மனதோடு வரவேற்கிறேன். இதில் பல நல்ல மாறுதல்கள் ஏற்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும், திருத்த மசோதா என்ற குறை இல்லாமல், பரிபூரண மசோதாவாக ஆக்கியிருக்க முடியும். இனியும் பல அபிவிருத்திகளுக்கு இதில் இடம் இருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர்களில் ஒருவர் சட்ட நுணுக்கங்களைப் பற்றியும், மற்றவர்கள் இன்னும் சில முக்கியமாக செய்யவேண்டிய திருத்தங்களைப் பற்றியும் பேசினார்கள்.

சென்னை மாகாணத்திலே, குழந்தைகள் பாதுகாப்புக்கான நடவடிக்கைகள், சென்ற 30, 40 வருஷங்களாகவே எடுக்கப்பட்டு வந்திருக்கின்றன; முயற்சிகள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. ஆரம்பத்திலேயே, குழந்தைகள் குற்றவாளிகளாகப் பிறப்பதில்லை. நல்ல குழந்தைகளாக, சிசுக்களாகத்தான் பிறக்கிறார்கள். ஆகையால் குற்றஞ் செய்தவர்களை, ஜெயில் கைதிபோல் பூட்டி வைத்து கடுமையாக நடத்துவது பயனளிக்காது; சரியல்ல. அதிலும், குற்றம் செய்தவர்கள், திக்கற்றவர்கள் என்று தனித் தனியாகப் பிரித்து வைக்கவேண்டும். அநேகமாக குழைந்தைகளில் சிலர் குற்றவாளிகளாக இருக்கிறார்கள். ஆனால் பலர் குற்றவாளி ஆகிறார்கள். இப்படிப்பட்ட குழந்தைகளை திருத்தவேண்டிய அவசியத்தை, அதன் உண்மைகளை நாம் 20–வது நூற்றாண்டில் தெரிந்து கொண்டிருக்கிறோம். "வருமுன் காப்பதே நலன்" என்ற முறையில் சைல்ட் விஜிலனஸ் பீரோ என்று சொல்லுகிறோமே அப்படி ஏற்படுத்தி, ஊழியர்களைத் தயார் செய்து குழந்தைகளின் நலனுக்காக பாடுபட்டு வருகிறார்கள். முக்கியமாக குழந்தைகளை விட்டுவிட்டு வேலைக்குப்போகும் தாய்மார்களுக்கு உதவி செய்ய வேண்டும். அந்த நிலையில் குழந்தைகள் தானாகவேதான் வளரவேண்டியிருக்கிறது. அச்சமயங்களில் பலவிதமான சூழ்நிலை காரணமாக அவர்கள் கெட்டுப்போகின்றனர். ஆகவே அடியிலிருந்தே, 12, 14 வயது வரை எல்லாத் துறைகளிலும் பெற்றோர்களுக்கு நல்ல யோசனைகளைச் சொல்லி, நல்ல இட வசதிகள் அளித்து பெரும் பாதுகாப்பு அளிப்பதற்கு சைல்ட் கைடன்ஸ் பீரோ அவசியமாகிறது.

நான் கொஞ்சம் முன்னால், குழந்தைகள் மசோதா வரும் சமயத்தில் சட்ட சபையில் அங்கத்தினர்களே இல்லாமல், "கோரம்" இருக்கா என்று கேட்கலாமா என்று நினைத்தேன். சபை அவ்வளவு காலியாக இருந்தது. ஆனால் இப்போது கொஞ்சம் தேவலை. ஆகவே அந்தப் பிரச்சினையை எழுப்பவில்லை. எல்லாக் குழந்தைகளுக்கும் நன்மை புரிய, எல்லா ஜில்லாக்களையும், பெரிய ஊர்களையும் சர்க்கார் க்ஷேம நல பணியில் சேர்த்து இணைத்து வேலை செய்யவேண்டும் என்று எனக்கு ஆசை. கிராம சேவக் ஊழியர்கள், க்ஷேம நல ஊழியர்கள் இவர்களைக் கொண்டு சைல்ட் கைடன்ஸ் பீரோக்களை அமைத்து வேலை செய்யவேண்டும்.

[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]
[5th September 1958

இந்த ப்ரொசீடிங்ஸைப் படித்தேன். சீப் இன்ஸ்பெக்டர் ஆப் ஸர்ட்டிபைட் ஸ்கூலில் என்பதை டைரெக்டர் ஆப் சைல்ட் ரீஹாபிலிடேஷன் என்று மாற்றியிருப்பது ரொம்பப் பொருத்தமானது. இவைகளையெல்லாம் ரூல்களில் மாற்றிக்கொள்ளலாம். அந்த மாறுதலில் ஒரு ஸைகலாஜிகல் உண்மை இருக்கிறது என்பதை மட்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். என்னவென்றால், குழந்தைகள் பிறவியிலேயே தப்பெண்ணம் உள்ளவர்களாகப் பிறப்பதில்லை. சூழ்நிலை காரணமாக கெடுகிறார்கள். ஆதலால், அந்த அதிகாரிக்கு நல்ல பெயர் வைப்பதும் ஒரு நல்ல மாற்றம். "விப்பிங்" நடைமுறையில் இல்லாவிட்டாலும், சட்டப் புத்தகத்திலிருந்து அதை எடுத்து இருப்பது ரொம்ப விரும்பத்தக்கது.

அதிகப்படியாக பணம் உள்ள கோவில் நிதிகளிலிருந்து குழந்தை விடுதிகளை ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லி இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுது அது நின்று விட்டன. அதற்குக் காரணம் அற நிலைய பாதுகாப்புச் சட்டத்தில் அதற்கு வேண்டிய அதிகாரம் இல்லை என்றெல்லாம் சொல்லப்பட்டது. ஆனால் அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. அப்படிச் சட்டம் கொண்டு வருவதாக இருந்தால் இந்த குழந்தைகளுக்குத்தான் அப்படிக் கொண்டு வரலாம். ஆகவே அப்படி இருந்தால் அறநிலைய பாதுகாப்புச் சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்து சீக்கிரமாக அதைக் கொண்டு வந்து குழந்தைகளுக்கு என்று விடுதிகளை கோவில் நிதியிலிருந்து அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். இது அவர்களுடைய முக்கியமான வேலையாக இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட ஒரு திருத்த மசோதாவை எவ்வளவு சீக்கிரத்தில் கொண்டு வரவேண்டுமோ அவ்வளவு சீக்கிரத்தில் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

குழந்தைகளைப்பற்றி கனம் சம்பத் அவர்கள் சொன்னார்கள். குழந்தைகளுக்கு என்று நடத்தப்படும் ஸ்தாபனங்கள் இருந்து அவைகளில் இடம் இருந்தால் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டது. அப்படி இருக்கக்கூடாது. இடம் இருக்கிறதோ இல்லையோ அதிகப்படியான குழந்தைகள் வந்தால் எடுத்துக்கொள்ள வேண்டும். இருக்கக்கூடிய இடத்தில் எவ்வளவு அதிகமான குழந்தைகளை எடுத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். தனிப்பட்ட முறையில் நடத்தப்படுகிற ஸ்தாபனங்களில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. தனிப்பட்ட முறையில் ஸ்தாபனத்தை வைத்து நடத்துகிறவர்களில் நானும் ஒருவன். அதிலுள்ள கஷ்டங்கள் எனக்கு நன்றாகத் தெரியும். நார்மலாக நல்ல குழந்தைகள் வளரும் இடத்தில் ஒரு துஷ்டக் குழந்தை இருந்தால் அதாவது விஷமம் செய்யக்கூடிய குழந்தை இருந்தால் அதை வைத்துக்கொண்டு வளர்ப்பது என்பது ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. அப்படிப்பட்ட குழந்தையை மற்ற குழந்தைகளுடன் சேர்த்துக்கொண்டு வருவதில் எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன என்பது என்னைப் போன்றவர்களுக்குத்தான் நன்றாகத் தெரியும். அதனால்தான் ஸ்தாபனங்கள் தனித் தனியாக இருக்க வேண்டும். 'மெண்டலி பாக்வேர்ட்' குழந்தைகள், 'நார்மல்' குழந்தைகள், 'பால்யக்' குழந்தைகள் 'டெம்பரேட்' குழந்தைகள் இப்படி தனித் தனியாக வைத்து நடத்தினால் மற்ற குழந்தைகள் நல்ல முறையில் வளருவதற்கு வசதியாக இருக்கும். மற்ற குழந்தைகள் நன்றாக இருக்க முடியும். ஆகவே இது விஷயத்தில் அதிகப்படியாக கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தப்படியாக அனாதைக் குழந்தைகளுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள் என்றே நினைக்கிறேன். சிசு ஆலயம் என்று நாம் சொல்லுகிறோமே அதாவது சிசுக்களை வைத்து பராமரிக்கும் நிலையம் நம் சென்னை மாகாணத்தில் அதிகப்படியாக இல்லை என்பது வாஸ்தவம். இன்னும் அதிகமாக இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]
5th September 1958]

திக்சற்ற குழந்தைகளை பராமரிக்க வேண்டிய திட்டங்களை நாம் எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம். எவ்வளவோ திக்கற்ற குழந்தைகளும், 'அன்டிசயரபிள்' என்று சொல்லுவார்களே அதைப்போலுள்ள குழந்தை களும் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் பாதுகாக்க வேண்டியது ரொம்பவும் அவசியமாக இருக்கிறது. அதனால் அதிகப்படியான சிசு ஆலயங்கள் இருக்க வேண்டியது அவசியம் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இப்படி அதிகப்படியாக அமைத்தால் எவ்வளவோ குழந்தைகளை நாம் திருத்தி நல்ல முறைக்குக் கொண்டுவருவதற்கு வசதியாக இருக்கும். இப்பொழுது நாம் அனாதை விடுதிகளை அமைத்துக்கொண்டிருப்பதால் எவ்வளவோ சிசுக்கள் கொலை செய்யப் படாமல் இருப்பதை நாம் பார்க்கிறோம். இப்பொழுது சிசுக்களின் கொலை குறைந்து போய்க்கொண்டிருக்கிறது. இதை நாம் நன்றாக அறிவோம். அவர்களுக்கு அதிகமாக நாம் ஊக்கம் கொடுக்கவேண்டும்.

கனம் சட்டநாத கரையாளர் அவர்கள் குழந்தைகளைப்பற்றி குறிப்பிடும்போது குழந்தைகளின் ஸ்தாபனங்களுக்கு மானியங்கள் வழங்குவதைப்பற்றி குறிப்பிட்டார். அவர் சொல்லுகிறபடி எல்லா ஸ்தாபனங்களுக்கும் எல்லா குழந்தைகளுக்கும் ஒரே மாதிரியாக பணம் கொடுக்க வேண்டும் என்று சொல்லுவது சரியல்ல. அதை என்னால் ஒத்துக் கொள்ள முடியாது. ஏனென்றால் குழந்தைகள் விடுதி வைத்து நடத்தி அனுபவம் பெற்றிருப்பதால் எனக்கு அதைப்பற்றி நன்றாகத் தெரியும். அதனால்தான் நான் அவர் சொல்வதை ஒத்துக்கொள்ளவில்லை. இரண்டு மூன்று வயதுள்ள குழந்தைகளுக்கு ஒரு விதமாகவும், நாலைந்து வயதுள்ள குழந்தைகளுக்கு ஒரு விதமாகவும், பத்து அல்லது பனிரெண்டு வயதுள்ள குழந்தைகளுக்கு ஒரு விதமாகவும் செலவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. இரண்டு அல்லது மூன்று வயதுடைய குழந்தையாக இருந்தால் அவைகளுக்கு ஒவ்வொருவருக்கும் ஒரு அட்டென்டர் வேண்டும். ஒவ்வொன்றையும் தனியாக கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. எல்லாக் குழந்தைகளையும் க்ளப் பண்ண முடியாது. இதைப் பற்றி நான் பல வருஷங்களாக சொல்லிக்கொண்டு வருகிறேன். அதையே இப்பொழுது மீண்டும் சொல்லுகிறேன். ஐந்து வயது வரைக்கும் இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு அதிகப்படியான தொகை கொடுக்க வேண்டும். ஐந்து வயதுக்கு மேற்கொண்டு பத்து வயது வரைக்கும் கொஞ்சம் குறைவாகவும் அதற்கு மேலுள்ள குழந்தைகளுக்கு இன்னும் குறைவாகவும் தொகை ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். சிறிய குழந்தைகளுக்கு அதிகப்படியாக மெடிகல் வசதி செய்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. தனியாக அட்டென்டர்களைப் போட்டு வளர்க்க வேண்டியதாக இருக்கிறது. தாய் பால் இல்லாமல் குழந்தைகளை வளர்ப்பதன் கஷ்டம் என்ன என்பது எங்களைப்போன்றவர்களுக்குத்தான் நன்றாகத் தெரியும். அவைகளை வளர்ப்பதாக இருந்தால் எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன. அதனால் அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு அதிகப்படியாக கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஐந்து வயது முதற்கொண்டு பனிரெண்டு வயது வரையிலுள்ள குழந்தைகளுக்குக் கொடுக்கப்படும் தொகையை விட இன்னும் அதிகமாக ஐந்து வயது வரைக்கும் இருக்கும் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும். அதாவது கொஞ்சம் அதிகமாகவே கொடுக்க வேண்டும். பனிரெண்டு வயதிற்கு மேற்பட்ட குழந்தைகள் எல்லாவற்றிற்கும் ஒரே மாதிரியாகக் கொடுக்கலாம். அதற்கு என்னைப் போன்றவர்களுக்கு ஆட்சேபனை இல்லை. இப்பொழுது ஸ்தாபனத்திற்கு ஸ்தாபனம் வித்தியாசம் இருக்கிறது. ஆனால் குழந்தைகளை பாதுகாக்கும் ஸ்தாபனங்களுக்கு இவ்வளவு கட்டுப்பாடு இருக்கவே கூடாது. குழந்தைகளுக்கு எவ்வளவு வசதி கொடுக்க முடியுமோ அவ்வளவு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

மற்றும் கனம் சட்டநாத கரையாளர் அவர்கள் சொன்னார்கள், 16 வயதுக் குட்பட்ட பெண்கள் காதல் விவகாரங்களினால் அதாவது மற்றவர்களுடன்,

[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]
[5th September 1958.

தகுதி, யற்றவர்களுடன் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தால் அவர்களையும் பெற்றோர்களையும் கோர்ட்டுகளுக்கு இழுத்து கஷ்டப்படும் நிலைமை ஏற்படுகிறது. ஆகவே அது கூடாது என்று குறிப்பிட்டார். அவருடைய கருத்தை நான் முற்றிலும் மறுக்கிறேன். காதல் விஷயத்தில் அவர்கள் காதல் செய்து வருகிறார்கள் என்று அர்த்தம் இல்லை. இப்பொழுது 16 வயது என்று இருப்பது ரொம்பவும் குறைவு. அது 18 வயது என்று இருக்க வேண்டும். இதைப் பற்றி பல புகார்கள் வந்திருக்கிறன. 18 வயதுள்ள பெண், சாதாரணமாக எதிர் வீட்டுக்காரர்கள் பார்த்து அந்தப் பெண் யாருடனே தொடர்பு கொண்டிருக்கிறாள் என்று குற்றம் சாட்டி அவளை கோர்ட்டுக்கு இழுக்கும்படியான நிலை ஏற்படுகிறது. இதனால் பல பெண்களுக்கு கஷ்டம் வருகிறது. 13 முதல் 15 வயது வரையிலுள்ள பெண்களை சாதாரணமாக ஆசை வார்த்தை காட்டி அந்தப் பெண்களை மோசம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் சிலர் நடக்கிறார்கள். அப்படி நடந்தால் அந்தப் பெண்ணை கோர்ட்டுக்கு இழுத்து பெற்றோர்களை கோர்ட்டார் அழைத்து இந்தப் பெண்ணிற்கு வயது 16-க்கு குறைவாக இருக்கிறது அதனால் அந்தப் பெண்ணை தகுந்த பாதுகாப்புடன் வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லவேண்டும் என்று சொல்லப்படுகிறது. கலப்பு மணத்தை பற்றி யாருக்கும் ஆட்சேபனை இருக்க முடியாது. இளம் பெண்களை ஆசை வார்த்தை காட்டி பெற்றோர்களின் அறிவுக்கு எட்டாமல் கொண்டு போவது இப்பொழுது சகஜமாக இருக்கிறது. ஆகவே 16 வயது என்று இருப்பதை 18 வயது என்று மாற்றி திருத்தி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். பெண்கள் தெரிந்தோ தெரியாமலோ அப்படிச் சென்று விடலாம். ஆகவே 18 வயது என்று திருத்தம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனால் விவாகம் செய்துகொண்டு விடலாம் என்று சொன்னால் அதைப்பற்றி யாரும் ஆட்சேபிக்கப் போவதில்லை. அது பக்க பலமாகவும் இருக்கும். அதைத் தவிர பெண்களை தவறான காரியங்களுக்கு உபயோகப்படுத்தவும் முடியாது. ஆகவே தான் வயதை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தப்படியாக பெண்கள் பாதுகாப்பு விஷயத்தில் அதாவது 'ரெஸ்க்யூ ஹோம்' விஷயத்தில் நல்ல மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது. நம்முடைய சென்னை மாகாணத்தில் நாம் இது விஷயமாக வெகுவாக முன்னேறியிருக்கிறோம். பெண்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கும் விஷயத்தில் இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் கூட ஜில்லாவுக்கு ஜில்லா 'விஜிலன்ஸ் ஹோம்களை' அதிகமாக ஏற்படுத்தியிருக்கிறோம். 'விஜிலன்ஸ் ஹோம்' என்பதற்கு சரியான தமிழ் பதம் என்ன என்பது எனக்குத் தெரியவில்லை. ஸ்திரீகளுடைய உஷார் விடுதி என்று சொல்லலாம் என்று ஒருவர் சொல்லுகிறார். அப்படிச் சொல்லுவதை கொஞ்சம் கூட நான் ஆதரிக்கவில்லை. இருபது வருஷமாக உஷார் விடுதி என்று சர்க்கார் பாஷையில் இருந்தது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கண்காணிப்பு என்று சொல்லலாம்.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : Vigilance-ஐ கண்காணிப்பு என்று சொல்வது நன்றாக இருக்காது. அதற்கு ஒரு நல்ல பதம் வரவேண்டும். தமிழ் மொழியில் ஆர்வம் படைத்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இதற்குத் தக்க பதத்தைக்கண்டுபிடிப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே உஷார் விடுதி என்று சொல்லப்படும் விடுதிகள் இன்னும் அதிகமாக்கப்பட வேண்டும். அதே சமயத்தில் 'சீனியர் ஏஜ்' அதாவது பருவம் அடைந்த பெண்கள், திக்கற்ற பெண்கள் இவர்களை உஷார் விடுதியில் வைக்கலாம் என்றிருந்தது. அப்படி ப்ராதலில் வைக்கப்பட்ட குழந்தைகள் அநேகம் பேர்கள் நல்ல முறையில் அனுபவம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் நல்ல முறையில் வாழ்வதற்கு பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அங்கு இருக்கக்கூடிய பெண்கள் 100-க்கு 100 குழந்தைகள், வீட்டில் வாழக்கூடிய குழந்தைகளைக் காட்டிலும் நல்ல முறையில்

[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]
5th September 1958]

வாழ்ந்து வருகிறார்கள். ஆகவே ' டெண்டர் ஏஜ் ' பெண்களுக்கு அதிகப்படியான பாதுகாப்பு அளிக்க வேண்டும். சிறு குழந்தைகளை பராமரிக்க வேண்டியது ரொம்பவும் அவசியமாக இருக்கிறது. இப்பொழுது ' ரெஸ்க்யூ ஹோம்' மேற்பார்வையை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். திக்கற்ற பெண்களுக்கும், பருவம் அடைந்து வெளி வந்த பெண்களுக்கும், வேறு குற்றங்களில் ஈடுபட்ட பெண்களுக்கும், வயது வந்த பெண்களுக்கும் இப்பொழுது நிறைய விடுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதை இன்னும் தாராளமாகச் செய்து, எல்லா ஜில்லாக்களிலும், எல்லா இடங்களிலும் அந்த விடுதிகளை அமைத்தால், நிச்சயமாக அம்மாதிரி குற்றங்கள் நடப்பதோ அல்லது பெண்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ள சக்தியில்லாத நிலையில் இருப்பவர்களை தவறான வழியில் உபயோகப்படுத்திக்கொள்ள விடுவதோ ஆகிய இத்தகைய குற்றங்கள் மிகவும் குறைந்து விடும்.

கற்பழிக்கப்பட்ட கேஸ்களில் தண்டனைகளை மிக அதிகமாக ஆக்கி இருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால், தண்டனையை அதிகமாக ஆக்கினால் மட்டும் போதாது. சட்டத்திலுள்ள இது சம்பந்தமான விதியை கடுமையாக அமுலுபடுக் கொண்டு வந்தால் தான் பலன் உண்டாகும். எனக்குத் தெரியும்—இம்மாதிரி கேஸ்களில் சம்பந்தப்பட்ட பெண்களுக்குப் பெற்றோர்கள் இருந்தால், அவர்கள் தங்களுடைய பெண்களை கோர்ட்டுக்கு கொண்டுவரவே சம்மதிக்க மாட்டார்கள். ஏனென்றால், நாம் அதை அவமதிப்பாகக் கருதுகிறோம். அப்படியே பெற்றோர்கள் கொண்டு வரக் கூடிய இடங்களிலும் பெரிய ஜட்ஜுகள், பெரிய வக்கீல்கள் தங்களுடைய புத்தி நுணுக்கங்களையெல்லாம் உபயோகப்படுத்தி எப்படியாவது அதில் ஒரு தண்டனை வர முடியாத படி பார்த்துக்கொள்ளவதாகத் தெரிகிறதே தவிர, கடுமையான தண்டனை வாங்கிக் கொடுப்பதாகத் தெரிய வில்லை. கொடும் சமூகக் குற்றமான இவைகளை இழைப்பவர்களுக்கு நாம் நிச்சயமாகக் கடுமையான தண்டனை விதிப்பதிலே பின் வாங்கக் கூடாது. அதிலேயும், கிராமங்களில் எஜமானர்கள்—அடியார்கள் என்று இருக்கும் இடங்களிலே பெற்றோர்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ பெண்கள் கெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாமும் அறிவோம். ஆகையால், இந்த ஷரத்தை கடுமையாக அமுல் நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

(Mr. Speaker in the Chair.)

விஜிலன்ஸ் ஹோமுக்கு வருகிற டெலிங்க்வெண்ட் பெண்களும் குழந்தைகளும் தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ளக்கூடிய வகையில் அவர்களுக்கு பொருளாதாரத் துறையில் வசதி செய்து கொடுத்தால், இத்தகைய குற்றங்களெல்லாம் வெகுவாகக் குறைந்துவிடும். எந்த எந்த காரணங்களினால் வீட்டை விட்டு வெளியேறினார்கள், என்று விஜிலன்ஸ் ஹோமில் இருப்பவர்களைக் கேட்டால், பொருளாதாரக் குறைவு தான் காரணம் என்று சொல்கிறார்கள். ' ப்ராதல்' களிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்களுடைய கணக்கைப் பார்த்தால், 100-க்கு 99 பேர்களுக்கும் பொருளாதாரக் குறைவுதான் காரணமே தவிர, ஆசையினாலோ—பணத்தாசை, நகையாசையினாலோ—18-20 வயத்துக்கு மேற்பட்ட பெண்கள் தவறிப் போவது என்பது அபூர்வமாகத் தெரிகிறது.

ஆகவே, பெண்களுக்கு பொருளாதாரத் துறையில் பாதுகாப்பு அளித்து, தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளக்கூடிய நிலைமையை உண்டாக்குவதற்கு சமூகம் பாடுபட்டால் தான் நிரந்தரமான பலன் கிடைக்கும். இல்லாவிட்டால் சமூகத் தீமையான இந்த விஷயங்கள் நிற்க முடியாது. ஆகையால், குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் சிறு வயதிலிருந்து பாதுகாப்பு கொடுக்கும் விஷயத்தை நம்முடைய நாட்டு க்ஷேம நல வேலைகள் எல்லாவற்றோடும் இணைப்பதற்கு தனியாக டிபார்ட்மெண்ட் இருந்தாலும்கூட தீமை வருமுன் காத்துக் கொள்வதற்கு ஏதுவாக இருக்கும். சிறு வயதிலிருந்தே அவர்களைச் சீர்திருத்தி, தங்களைத்

[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]
[5th September 1958

தாங்களே காப்பாற்றிக் கொள்ளக்கூடிய முறையில் அவர்களுக்கு கல்வியிலும் கைத் தொழிலிலும் பயிற்சி அளித்தாக வேண்டும். இம் மாதிரி திட்டமிட்டு வேலை செய்தால், பிச்சைக்காரப் பிரச்னையும், பெண்கள், குழந்தைகள் தவருன பாதைக்கு இழுத்துச் செல்லப்படுவதும், இன்னும் இதுபோன்ற சமூகக் கேடான செயல்களும் ஏகதேசம் ஒழியும்.

இந்த சிறுவர்கள் (திருத்தச்) சட்டம் வருவது ரொம்ப நன்ருக இருக்கிறது. நாங்கள் ரொம்ப வருஷமாக காத்துக்கொண்டிருந்த பல விஷயங்கள் அதிலே சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதற்காக பெண்கள், குழந்தைகள் சார்பில் சர்க்காருக்கு நன்றி செலுத்துவதோடு, இன்னும் நல்ல விதமாக பரவலாக இச்சட்டம் அமுல் நடத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

* SRI A. VEDARATHNAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த குழந்தைகள் மசோதாவை இவ்வளவு நீண்ட காலம் கழித்து இப்பொழுது நிறைவேற்ற முன் வந்த நம்முடைய உள் விவகார அமைச்சர் அவர்களை நான் முழுமனதோடு பாராட்டுகின்றேன். இது எவ்வளவு அவசியமான மசோதா என்பதைப்பற்றி எனக்கு முன் பேசிய பலர் கூறியிருக்கிருர்கள். எனவே, அதை நான் மீண்டும் கூறத் தேவையில்லை.

பாரதி கூறியபடி நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள். அதிலும் ஜனநாயக யுகத்திலே, ஜனநாயக அரசாங்கத்திலே நாம் ஒவ்வொருவரும் இந்த நாட்டு மன்னர்கள் தான். இந்த நாட்டை ஆளப்பிறந்தவர்கள் ஆதலால், ஆளும் பொறுப்பு அனைத்தும் நம்மைச் சார்ந்தது. இத்தகைய நாட்டிலே, இப்போதைய குழந்தைகள், எதிர்கால மன்னர்கள் திருடர்களாகவும் குடிக்காரர்களாகவும் குற்றம் புரிபவர்களாகவும் இருப்பார்களானல், அது எவ்வளவு இழிவானது என்பதை மன்னர்களாகிய நாம் சிந்தித்துப் பார்க்க கடமைப்பட்டிருக்கிருேம்.

குற்றம் செய்பவர்கள் பிறக்கும் போதே இப்படி குற்றவாளிகளாகப் பிறக்கிருர்களா என்பது தான் இதில் முதலில் ஆராய வேண்டிய விஷயம். டாக்டர் சௌந்தரம் அம்மையார் அவர்கள் சொன்னது போல, குழந்தைகள் பிறக்கும்போதே குற்றவாளிகளாகப் பிறப்பதில்லை ; பின்னர்தான் கெட்ட பழக்கத்தில் ஈடுபடுகிருர்கள். கால வசத்தினல், சூழ்நிலை காரணத்தினல், சுற்றுணர்ச்சியினல் அவர்கள் இப்படி மாறுகிருர்கள்.

"மனத்தானும் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானும்
இன்ன னெனப்படுஞ் சொல்"

என்று வள்ளுவர் கூறியிருக்கிருர். சார்ந்தவர்கள் எப்படி இருக்கிருர்களோ, நண்பர்கள் எப்படி இருக்கிருர்களோ, சுற்றுச் சார்பில் உள்ளவர்கள் எப்படி இருக்கிருர்களோ, அதற்கேற்ப ஒருவன் மாறிவிடுகிருன். சற்று அறிவு வந்த மாந்தர்களே அப்படி ஆய்விடுகிருர்களென்ருல், குழந்தைகளைப் பற்றிக் கேட்க வேண்டியதே இல்லை. இளம் வயதில் அவர்கள் எம் மாதிரி சகவாச தோஷத்தால் தப்பு வழிக்கு ஆளாகிருர்கள் என்று கூறத் தேவையில்லை. கனம் அங்கத்தினர் ஸ்ரீ சட்டநாத கரையாளர் அவர்கள் கூறியபடி, இந்த நாட்டில் மக்களை நல்வழியில் கொண்டு செல்வதற்குச் சாதனங்களாக இருக்க வேண்டிய பத்திரிகைகள், சினிமாக்கள் போன்றவையெல்லாம் கூட, அவர்களை தப்பு வழிக்குச் சுலபமாக இழுத்துச் செல்வதற்கு உதவி செய்கின்றனவேயன்றி, அவர்களை நல் வழிக்குக் கொண்டு வருவதற்கு உதவுவதாக இல்லை.

குரங்கு தன் குட்டியைக் கொண்டு ஆழம் பார்ப்பது போல, திருடுகின்றவர்கள், கள்ளக் கடத்தல் செய்கின்றவர்கள், மதுபானம் காய்ச்சுகின்றவர்கள் எல்லாம், தாங்கள் அகப்பட்டுக்கொண்டால் தங்களுக்குப் பெரிய கடுமையான தண்டனை வரும் என்று நினைத்து இளம் பிள்ளைகளை குற்றம் செய்வதற்கு அமர்த்திக்கொள்ளுகிருர்கள். தாய் தந்தையற்ற காரணத்தினலோ, வறுமை காரணத்தினலோ, எந்தக் காரணத்தினலோ,

5th September 1958] [Sri A. Vedarathnam]

இப்படித்தெருவிலே திரிகின்ற பிள்ளைகள் குற்றம் செய்பவர்களுடைய கையிலே அகப்பட்டு, குற்றவாளிகளாகக் கருதப்பட்டு தண்டனையை அனுபவிக்கிறார்கள். ஆனால், உண்மையிலேயே குற்றத்திற்குக் காரணமாக இருப்பவர்கள் தண்டனையிலிருந்து தப்பித்துக்கொண்டு விடுகிறார்கள். " எய்தவனை விட்டு அம்பை நோவது போல ", இளம் குழந்தைகள் அகப்பட்டுக்கொண்டு நீதி ஸ்தலங்கள் வரையில் இழுத்துச் செல்லப்பட்டு தண்டனையையும் அனுபவிக்கிறார்கள். இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்காக, வறுமை காரணமாக தெருவிலே திரியும் பிள்ளைகள், வேறு காரணமாக அனாதைகளாக இருக்கின்றவர்கள், இளம் குற்றவாளிகள் சிறையிலே இருக்கிறவர்கள், ஆகிய இப்படிப்பட்டவர்களையெல்லாம் நீதி புகட்டும் ஸ்தாபனங்களிலே வைத்துப் பராமரித்து அவர்களுக்கு நல்ல பயிற்சி அளிக்கும் நோக்கம் இந்த மசோதாவில் கொண்டுவரப்பட்டிருக்கிறது மிகவும் வரவேற்க தகுந்த விஷயம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

" கொடிது கொடிது வறுமை கொடிது ;
அதனினும் கொடிது இளமையில் வறுமை."

என்றபடி வறுமையை அனுபவிப்பது என்பது முதியவர்களுக்கே கடினம். அதிலும் பிள்ளைப் பருவத்திலே வரும் வறுமை சகிக்க முடியாதது. ஏனென்றால், வாழ்வையே பாழாக்கும் தன்மையில் அது அமைந்து விடுகிறது. ஆகையால், அந்தப் பருவத்திலே அவர்களை நல்ல ஸ்தாபனங்களிலே அனுப்பி, அவர்களுக்கு நல்ல அறிவு புகட்டுகிற ஒரு சூழ்நிலையை உண்டாக்கினால், அவர்களில் எத்தனையோ சிறந்த நிபுணர்கள், அறிவாளிகள், மேதாவிகள் தோன்றக் கூடும். அரசாங்கம் மாத்திரம் முன்வந்து இதற்காக நிதி ஒதுக்கிச் செலவிடுவது போதாது ; இந்த நாட்டிலே இருக்கும் பெரும் தனவந்தர்களும் முன் வர வேண்டும். அம்மையார் அவர்கள் கூறியபடி, தேவாலய நிதியிலிருந்து அனாதை விடுதிகள் பல தோற்றுவிக்கப் பட்டிருந்தாலும், அதையெல்லாம் இப்பொழுது ஒவ்வொன்றாக மறைந்து வருகின்றனவே தவிர, அவைகள் விரிவடையக் காணோம். நன்றாக நடைபெறுகிறது என்று சொல்லக்கூடிய நிலையில் கூட சில இல்லை. எனினும் சில ஸ்தாபனங்கள் நன்றாக நடக்கின்றன. நன்றாக நடக்காத வற்றையும் நன்றாக நடக்கும்படி செய்ய வேண்டும். அல்லது நன்றாக நடத்தக்கூடியவர்களுக்கு அந்த ஸ்தாபனங்களை உதவி புரியும்படியாகவாவது செய்ய வேண்டும். உள் விவகார மந்திரி அவர்களே தர்ம ஸ்தாபன மந்திரியாகவும் இருக்கிற காரணத்தால் அவர்கள் இதற்கு வேண்டுவன செய்து, அதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பார்கள் என்று நான் எதிர்ப்பார்க்கிறேன். இந்த மாதிரியாக குழந்தைகளை நல்ல வழிக்குக் கொண்டு வந்தால் தவறான வழியில் இருந்து அவர்கள் திருந்தி நல்லவர்களாவார்கள் என்பதைப் பற்றிக் கொஞ்சமும் ஐயமில்லை. குழந்தைகளைத் திருத்துவதற்கு " ஜுவனைல் கோர்ட் " ஜில்லா தோறும் வேண்டுமென்று ஸ்ரீ சம்பத் அவர்கள் கூறினார்கள். ஜில்லா தோறும் இல்லாவிட்டாலும் இப்போது சில இடங்களில் இருக்கிறது. அந்தக் கோர்ட்டுகளுக்கு பெண்களையே நீதிபதிகளாக ஏற்படுத்துகிறார்கள். அதிகாரிகளால் அவர்கள் நியமனம் செய்யப் படுகிறார்களேயன்றி குழந்தைகள் விஷயத்தில் அக்கறை காட்டிக் கொண்டிருக்கிற பொது ஸ்தாபனங்களில் வேலை செய்கிற பெண்களை நியமிப்பது கிடையாது. இப்போது அதிகாரிகளால் நியமனம் செய்யப்படுகிற பெண்களுக்கு பிள்ளைகள் விஷயத்தில் போதிய அக்கறை இருக்கிறதென்று சொல்ல முடியாது. இவர்களை நியமனம் செய்கிற அதிகாரிகள் என்ன, நினைக்கிறார்களோ—கிட்டதட்ட அந்த எண்ணப்படியே இவர்கள் தீர்ப்பு அளிக்கின்றார்களேயல்லாமல், சுபாவமாக குழந்தைகளிடத்தில் அக்கறை காட்டி அவர்கள் திருந்த வேண்டுமென்ற நோக்கத்தோடு தீர்ப்பு வெளிவருவதாகத் தெரியவில்லை. எனவே இந்த ஜுவனைல் கோர்ட்டுகளுக்கு பெண் நீதிபதிகளை நியமிக்கும் விஷயத்தில் கொஞ்சம் சர்க்கார் கவனிக்க வேண்டும். குழந்தைகளுக்காக சேவை செய்கிற பெண்களின் ஸ்தானங்கள் நிரம்ப இருக்கின்றன. அந்த ஸ்தாபனத்தை நிர்வகித்து நடத்துகிறவர்களிடத்தில் இந்தப் பொறுப்பை ஒப்படைத்தால் குழந்தைகளை நல்ல வழிக்கு கொண்டு வருகிற முயற்சியில் நாம்

[Sri A. Vedarathnam] [5th September 1958

அதிகம் வெற்றிபெற முடியும். ஆகவே குழந்தைகளை சீர்த்திருத்தும் பெண்கள் பொது ஸ்தாபனங்களில் வேலை செய்கிறவர்களை இந்த ஜுவினைல் கோர்ட்டின் நீதிபதிகளாக நியமிக்கத்தக்க வகையில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி செக்ஷன் 35-பி-ல் இன்ஸ்பெக்டர் அவர்கள் **" the Chief Inspector, if satisfied that he is incorrigible "** அவர்கள் மாற்ற முடியாதவர்கள் என்ற தீர்மானத்திற்கு வந்துவிட்டால் அவர்களுக்கு தண்டனை அளிக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. இப்படி இந்த முடிவை இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு விட்டுவிடுவது நியாயமாகாது என்று நான் கூற விரும்புகிறேன். அது ஒரு கோர்ட்டினுடைய முடிவுக்கு இருக்கவேண்டுமேயல்லாமல் இப்படி ஒரு தனிப்பட்டவரின் முடிவுக்கு விடக்கூடாது. "இந்தக் குழந்தை திருத்த முடியாதது" என்று அவர் தீர்மானித்துவிட்டால் அந்தக் குழந்தையின் வாழ்வே பாதிக்கப்பட்டுவிடும் என்று நான் கூற விரும்புகிறேன். ஸ்ரீமதி சௌந்தரம் ராமச்சந்திரன் அவர்களும் சொன்னார்கள். ஒரு பள்ளியில் துஷ்டக் குழந்தை ஒன்று வந்துவிட்டால் போதும். அதுவே பெரிய ப்ராப்ளம் ஆகிவிடும். அந்த ஒரு குழந்தையினால் பள்ளியில் உள்ள இதர குழந்தைகளைத் திருத்துவது என்பதும் சாத்தியமில்லாமல் போய்விடுகிறது என்று சொன்னார்கள். அந்த மாதிரியான குழந்தையை எப்படி பராமரிக்கவேண்டும் என்று யோசனை செய்து அதன்படி நடக்கவேண்டும் என்பதற்காகத்தான் சைகாலஜி ஆப் சில்ரன் தெரிந்திருக்கவேண்டும் என்கிறார்கள். உளநூல் சாஸ்திரப்படி எப்படிப்பட்ட கெட்ட குழந்தையாக இருந்தாலும் அதைத் திருத்திவிட முடியும் என்பதாக அறிஞர்கள் கருதுகிற போது உளநூல் சாஸ்திரம் எதுவும் தெரியாத ஒரு இன்ஸ்பெக்டர் அவர்கள் "ஒரு குழந்தை திருத்த முடியாதது" என்கிற முடிவுக்கு வந்துவிட்டால் தண்டனை அளிக்கலாம் என்று இருப்பது சரியாகாது. ஆகவே, இந்த விஷயத்தையும் கனம் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இன்னொரு முக்கியமான விஷயம். இந்தக் குழந்தைகளைச் சீர்திருத்துவதாகச் சொல்லி பல ஸ்தாபனங்கள் இன்றைய தினம் மதம் மாற்றி வருகிறார்கள். நான் எந்த மதம் என்று குறிப்பிட்டுச் சொல்ல விரும்பவில்லை. தங்களுடைய மதம் என்னது என்றே தெரியாத குழந்தைகளிடத்தில் பிற மதங்களைப்பற்றிச் சொல்லி மதம் மாற்ற இந்த ஸ்தாபனங்கள் முயற்சிப்பது மிகவும் கொடுதியானது. இதைத் தடுப்பதற்கு சட்டத்தில் இடம் இல்லாது இருப்பதை கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றைக்கே இந்த திருத்த மசோதாவில் ஒரு திருத்தத்தின் மூலம் அவ்வாறு மதம் மாற்றுவது சட்ட விரோதமானது என்கிற ஷரத்தையாவது சேர்ப்பதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும். இல்லையேல் சட்ட நிபுணர்களைக் கலந்து கொண்டு ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். இது மிக மிக அவசியமானது என்பதையும் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

கனம் அமைச்சர் அவர்கள் பேசும்போது சுதந்திரம் அடைந்த ஒரு நாட்டில் இளம் பிள்ளைகள் தெருத்தெருவாகப் பிச்சை எடுத்துக்கொண்டு அலையவிடுவது சரியல்ல என்று கூறினார்கள். அதிலும் பெண்கள் இந்த மாதிரியாக நடுத்தெருவில் பிச்சை எடுப்பது, தவறான செய்கையில் ஈடுபடுவது சரியாகாது. அதை இன்னமும் ஒரு நிமிஷம் கூட அனுமதிப்பது சரியாகாது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தப் பெண்களுக்கு தகுந்த பாதுகாப்பான ஸ்தாபனங்கள் தேவை. இப்போது இருக்கிற ஸ்தாபனங்களில் இடம் இல்லையென்ற காரணத்திற்காக இவர்களை சேர்த்துக்கொள்ள மறுப்பது சரியாகாது. இந்த ஸ்தாபனங்களுக்கு போதிய வசதிகளைச் செய்து கொடுத்தாவது இவர்களையும் அதில் சேர்ப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படியில்லாமல் பிள்ளை

5th September 1958] [Sri A. Vedarathnam]

களைத் தெருவில் அலையவிடுவது இந்த நாட்டுக்கே அவமானம். நாட்டு மக்களாகிய சுதந்திர மன்னர்களாகிய நம் எல்லோருக்குமே அவமானம் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் சமீபத்தில் இலங்கைக்குச் சென்றபோது பார்த்தேன். தெருவில் பிச்சை எடுக்கிற ஒரு குழந்தையைக்கூட அந்த நாட்டில் நான் பார்க்க வில்லை. நம்முடைய சேய் நாடு என்று அதைக் கூறுகிறோம். இன்னும் ஏனைய பல நாடுகளிலும் பிள்ளைகள் பிச்சை எடுப்பது இல்லையென்று சொல்கிறார்கள். அதுவும் நம் நாட்டில் பிள்ளைகள் பிச்சை எடுப்பது மாத்திரம் இல்லை. மதுவிலக்கு சட்டத்தை மீறுவதற்கு இந்தப் பிள்ளை களைப் பலர் துணையாகப் கொண்டு பணத்தைக் காசைக் காட்டி இந்தக் குழந்தைகளையே தவறான காரியங்கள் செய்யும்படியாகத் தூண்டி வரு வது மிகவும் அநீதியானது, என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன். இப்படிப்பட்ட நிலைமை நீடிக்காதவாறு குழந்தைகளைச் சீர் திருத்த தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தக் குற்றங் களைச் செய்வதற்குத் தூண்டுகிற பெரியர்வர்களைக் கண்டுபிடித்து தக்க தண்டனை அளிக்க சட்டத்தில் வசதி செய்ய வேண்டும் என்பதாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இன்னொன்று. உஷார் விடுதிகளில் இருக்கிற பெண்களைக் கொண்டுவந்து பள்ளிகளில் சேர்ப்பதனால் எவ்வளவு அபாயம் வருகிற தென்கிற விஷயத்தை விசாரணைக் கமிட்டியில் பலர் கூறியிருக்கிறார்கள். குழந்தைகளைத் திருத்துவதற்குப் பதிலாக குழந்தைகளுடைய உள்ளத்தில் கெட்ட எண்ணம் உண்டாகும்படியாக அவர்கள் செய்துவிடுகிறார்கள். அதன் காரணமாக அவர்களைத் தனியாக வைப்பது தான் மேல் என்று நான் கருதுகிறேன்.

நான் குறிப்பிட்ட எல்லா விஷயங்களையும், இதர அங்கத்தினர்கள் கூறியிள்ள யோசனைகளையும் கருத்தில் கொண்டு நல்லதொரு மசோதாவை கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவரவேண்டும். அங்கத்தினர்களுடைய யோசனைகள் எல்லாம் அந்த மசோதாவில் இடம் பெறவேண்டும் என் பதைச் சுட்டிக்காட்டி அங்கத்தினர்கள் எல்லோரும் ஏகமனதாக இந்த மசோதாவை ஆதரிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த கனம் சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு நான் விடைபெறுகிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Mr. Speaker, Sir, while welcoming this measure, I would like to make a few observations. I am very grateful to the Members of the Select Committee for having made many useful suggestions. I am sure, the Hon. Minister will try to implement those suggestions as much as possible.

I have already stated in my speach on the day this Bill was introduced that the juvenile courts that have been established are quite inadequate and many more courts should be established in the different parts of the districts and that the Government should see to it that these cases are disposed of as expeditiously as possible. There has been so much of delay in the disposal of these cases that the parties affected suffered very much.

With regard to juvenile smoking, I am one of those who honestly believe that stringent measures should be taken and deterrent punishments given to the offenders. Unless this is done I do not know where this habit will lead the boys to. I was surprised to note the remarks in the Select Committee report that

there might be some complications with regard to the enforcement of this rule. I feel there may not be any complications at all. I would request the Government to see in all earnestness that they take effective steps to put down juvenile smoking as far as possible. In cinema theatres notices are put up that there should be no smoking; still we find that smoking is on the increase. Even after the putting up of these notices, banning smoking, this has not decreased to any extent. So the Government must see to it that they put a stop to these things somehow or other.

With regard to enforcement of these offences, my submission is that the staff employed is quite inadequate, with the result that the enforcement has not been very effective in most cases. So I suggest that more Honorary Probationary Officers must be appointed with a view to enforcing some of the provisions of this Bill and I hope the Hon. Minister will pay some attention to it.

With regard to the provision of accommodation, I have already stated that there has not been quite sufficient accommodation, with the result there has been so much of suffering. The accommodation question also should be looked into very carefully and steps should be taken to minimise this difficulty.

With regard to women offenders, of course, responsible women officers should be empowered to accompany women offenders, as we have heard a number of cases where there had been malpractices due to the men officers being deputed. So far as women offenders are concerned, I am sure, the Government will somehow or other pay attention to this aspect of the matter and see that only women officers are deputed to accompany these offenders.

With regard to other provisions of the Bill, I wholly endorse many useful suggestions contained in the Select Committee's Report. With these words, I heartily endorse this measure.

* SRI T. T. DANIEL : Sir, while welcoming this Bill, I would like to point out some facts for the consideration of the Hon. Minister. Part VI-A is a new addition and it is added after Part VI of the principal Act. Section 36-A provides for punishment for cruelty to children, and in the proviso to that section, it is provided that if an offence is committed by a stranger in respect of a married young woman and if she is under 16 years, then her husband has got the right to compound that offence. I would submit that such a right should not be given to the husband, especially when the mother or the father has got no right to compound such an offence if the child or the young girl is not married. Why should the husband be given such a right? After all, married young women are the darlings of their father and mother. Therefore, I would submit that that right of the husband to compound the offence if it is committed by a stranger in respect of his wife, should not be given at all, and that proviso should be deleted. It cuts the very object of the Bill which provides for protection for child or young person.

5th September 1958] [Sri T. T. Daniel]

Then coming to section 36-C, it reads as if that a person can employ a child or young person for carrying or transporting liquor or dangerous durg, if such liquor or dangerous drug is not used for consumption. Sir, the object of the Bill seems to be that the child should not have anything to do with the carrying or transporting of any liquor or dangerous drug. If that be so, I do not understand why a distinction should be made in section 36-C. There may be cases where a child may be employed for carrying or transporting liquor or dangerous drug which may not be used for consumption. I would therefore, suggest that the provisions in section 36-C should be recast in such a way that the child on no ground should be employed for carrying or transporting liquor or dangerous drug, whether the consumption of such liquor or dangerous drug is an offence or not.

Then coming to section 36-D, I would say that that section has to be omitted. It appears to me that it will be a mischievous section, the existence of which may create trouble to innocent persons. It contemplates that any child or young person, if he is taken to a place where dangerous drug or intoxicating liquor is sold, then on that ground alone, the person who is in charge of the child can be punished. I do not understand why merely taking a child to a place without any intention of committing the offences enumerated in the Bill, should be considered an offence at all. If that child or young person is taken to the place where such liquor or dangerous drug is sold for the purpose of giving such liquor to the child or for the purpose of employing that child for carrying that intoxicated liquor or dangerous drug, then of course, there is the intention to commit the offence. It may appear that in certain cases, even the father may innocently take his child to the shop and such taking itself is considered to be an offence. A friend of the proprietor may come to his shop with his wife and children quite innocently just to have a talk with the proprietor and under that circumstance also, it appears that if this section is there, an offence is committed under this section. I would suggest that merely taking a child or young person to any place where intoxicating liquor or dangerous drug is sold, need not be made an offence. But if such taking is for the purpose of committing any one of the offences enumerated in the previous clauses of the Bill, then such taking can amount to committing an offence.

Then I come to sub-section (2) of section 36-I. It says—

'Whoever exposes a child or young person to the risk of seduction, sodomy, prostitution or other immoral condition, shall, on conviction, be punishable with imprisonment of either description . . .'

It is not, I think, very happily worded. It must definitely say that 'whoever having the actual charge of, or control over a child or young person' as is stated in section 36-A, should also be stated in this sub-section (2). Then alone such a person having the actual charge of or control over the child can be punished for

the offence that is committed under section 36. Otherwise, it would appear that any person can be booked. With regard to joint trial, I would say that whereas in the case of offences where joint trial is provided for under the provisions of the Criminal Procedure Code, such provisions should be followed for joint trial of a young person along with an adult in this case also. But in cases where there are no provisions for the trial of offences other than those contemplated under the Penal Code and other than those committed under this Bill, then there can be a separate trial for the commission of such offences, otherwise the provisions of the Criminal Procedure Code and the provisions of this Bill will conflict and the court will find it difficult to implement the provisions of this Bill.

With regard to the occurrence of the words 'on conviction' wherever they occur, I think that they are superfluous. After all there may be a sentence only if there is a conviction. The sentence pre-supposes the existence of a conviction. No useful purpose would be served by putting the words 'on conviction' in the Bill. I therefore suggest that the words 'on conviction' wherever they occur in this Bill shall be deleted so as to follow the fundamental principles of law.

MR. SPEAKER: Before we proceed, I have to make an announcement. The House will rise to-day at 1-30 p.m. I presume it will take half an hour for the clause by clause consideration and the third reading of the Bill. I presume also that the Hon. Minister will take about half-an-hour for reply. There are four more speakers. I think that hon. Members will remember these points. Sri Nataraja Odayar may now speak.

11-41 a.m.

SRI C. NATARAJA ODAYAR : கனம் தலைவர் அவர்களே, நம் சபை முன் வைக்கப்பட்டிருக்கும் சிறார் மசோதாவின் மீது என் கருத்துக்களை தெரிவிக்க விரும்புகிறேன். குழந்தைகளை கவனிக்க வேண்டியதை விட, குழந்தைகள் நன்றாக வளருவதற்கு அவசியமான குழந்தைகளின் தாயார்களை கவனிக்க வேண்டியது மிகவும் அவசியம். குழந்தையை சரிவர வளர்ப்பதற்கு விஞ்ஞான ரீதியான ஒரு வழியைக் காண நாம் முயற்சிக்கும்போது, குழந்தையின் தாயை சரிவர கவனிப்பது தான் அதற்கு விஞ்ஞான ரீதியான வழி என்று தோன்றுகிறது என்று சொல்வேன். தாய் சரியாக இருந்தால் தான் குழந்தை சரியாக இருக்க முடியும். ஆகவே குழந்தைகளின் வளர்ச்சி தாய்களின் நிலையைப் பொறுத்திருக்கிறது. குழந்தைகள் சரிவர வளரவில்லை என்றால், அதற்கு அடிப்படையான குறை எது என்று கண்டுபிடித்து அதை நீக்க வேண்டும். கர்ப்பத்தில் குழந்தையின் வளர்ச்சி கெட்டுவிட்டால், அதற்குப் பிறகு எவ்வளவு பாடுபட்டாலும், பிறந்த குழந்தை நன்றாக வளராது. குறைகளை அடிப்படையிலேயே நீக்கப் பார்க்கவேண்டும். குழந்தைகள் நன்றாக வளரவில்லை என்றால், தாய்கள் சரியாக கவனிக்கப்படாதது தான் அதற்கு அடிப்படையான குறை. குழந்தைகளை சரிவரப் பராமரிக்க முடியாமல் பெற்றோர்கள் தவிப்பதை எத்தனையோ இடங்களில் பார்க்கிறோம். இதனால் குழந்தைகள் கெடுகின்றன.

குழந்தைகள் நன்றாக வளரவேண்டுமென்றால், தாய்கள் சரிவர கவனிக்கப்பட வேண்டும். பிரசவ விடுதிகளில் கர்ப்பவதிகளை கவனிப்பவர்களில் பலர் பிள்ளை பெறாதவர்கள். பிள்ளை பெறாத அவர்கள் கர்ப்பவதிகளை சரிவர கவனிப்பதில்லை. அவர்களை சரிவர நடத்துவதில்லை. அவர்கள்

5th September 1958] [Sri C. Nataraja Odayar]

கர்ப்பவதிகளிடம் "நீ ஏன் பிள்ளை பெற வேண்டும்" என்று கேட்கிறார்கள். இதுபோன்று இன்னும் எத்தனையோ வருந்தத்தக்க கேள்விகளைக் கேட்கிறார்கள். "பெற்றவருக்குத் தான் தெரியும் குழந்தை அருமை" என்று சொல்லப்படுவது உண்டு. ஆகவே தான் பிள்ளை பெறாத ஆஸ்பத்திரி ஊழியர்கள் கர்ப்பவதிகளிடம் இவ்வாறு நடந்து கொள்கிறார்கள். ஆகவே பிள்ளை பெற்ற ஊழியர்கள் தாய்மார்களையும் கர்ப்பவதிகளையும் கவனிக்க வேண்டும்.

பையன் பிறந்தவுடன், பையனை சரிவர கவனிக்க வேண்டும். பையனை நன்றாக வளர்க்க வேண்டும். இதற்காக நாம் பல சட்ட திட்டங்களைக் கொண்டு வருகிறோம். அப்படிச் செய்யும்போது, நல்ல சட்ட திட்டங்களைக் கொண்டுவர வேண்டும். சினிமாப் பார்த்தால் குழந்தைகள் கெடுகின்றன என்று கனம் அமைச்சர் கருதுகிறார். எந்த சினிமாவைப் பார்த்தாலும் குழந்தைகள் கெடுகின்றன என்று சொல்ல முடியாது. நல்ல சினிமாக்களும் இருக்கின்றன, கெட்ட சினிமாக்களும் இருக்கின்றன. சினிமாத் தியேட்டர்களில் குழந்தைகளுக்கேற்ற நல்ல சினிமாக்கள் காட்டப்படுவதற்கு சர்க்கார் சட்டரீதியாக ஏற்பாடு செய்யலாம். ஒவ்வொரு தியேட்டரிலும் வாரத்திற்கு ஒரு முறையாவது குழந்தைகள் சினிமாப் படம் காட்ட வேண்டுமென்று தியேட்டர்களை சர்க்கார் வற்புறுத்திக் கேட்கலாம். குழந்தைகள் கெடாமல் இருக்கவேண்டுமானால் சில சினிமாப் படங்கள் தடை செய்யப்படவேண்டும். உதாரணமாக, புராணப்படமாகிய கிருஷ்ண லீலா சினிமாப் படத்தைப் பார்த்தால் குழந்தைகள் கெடும். கிருஷ்ண லீலா சினிமாப் படத்தை நாம் எத்தனையோ தரம் பார்த்திருக்கிறோம், ரசித்திருக்கிறோம். ஆனால் அதைப் பார்ப்பதால் குழந்தைகள் கெடுகின்றன. ஏனென்றால், கிருஷ்ண லீலா படத்தில் குழந்தை முதலில் செய்யும் காரியம் திருடுவது தான். அது முதலில் வெண்ணெ திருடுகிறது. அதைப் பார்க்கும் குழந்தைகள் திருட ஆரம்பிக்கின்றன. கிருஷ்ண லீலா படத்தில் குழந்தை வெண்ணெ திருடுவதுடன் மட்டுமின்றி, சேலையும் திருடுகிறது. பிறகு, சேலை திருடுவதுடன் நிற்காமல், பெண்ணையும் திருடுகிறது. இதைப் பார்க்கும் குழந்தைகள் எப்படி நல்ல பிள்ளைகளாக வளருவார்கள்? எனவே, கிருஷ்ண லீலா சினிமாப் படத்தைத் தடை செய்ய வேண்டும் என்று பத்திரிகைகள் எழுதினால், கோபம் கொள்வதில் பிரயோஜனம் இல்லை.

இந்த மசோதாவில், இளம் பெண்கள் தவறு செய்தால், அவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்று கண்டிருக்கிறது. அவர்களை தண்டனை அடையும் முறையில் அனாதை விடுதியில் இருக்க வேண்டியது. அவசியம் இல்லை என்று நான் கூறுவேன். பெண்கள் தவறு செய்தால் தண்டனை கிடையாது என்று விதி வகுக்கவேண்டும். குற்றம் புரிந்த பெண் ஒரு ஆணை மணந்துகொள்ள விருப்பப்பட்டால், அதை அனுமதிக்கலாம். அவ்வாறு செய்தால் நன்றாக இருக்கும். அப்படிச் செய்தால், அனாதை விடுதி என்ற விடுதி இருக்க வேண்டாம். பெண்கள் அன்பு விடுதி என்று ஒரு விடுதி இருக்கலாம். அங்குள்ள பெண்கள் தாங்கள் விரும்புபவர்களைக் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்று சட்டமியற்றலாம். அவ்வாறு செய்தால் நன்றாக இருக்கும்.

சரிவர கவனிக்கப்படாத குழந்தைகளை "அனாதைக் குழந்தைகள்" என்று குறிப்பிடுகிறோம். இவ்வாறு குறிப்பிடுவது, அவர்களைக் கேவலமாகப் பேசுவதாக இருக்கிறது. தாய் தந்தை இல்லாமல் குழந்தை இல்லை. தாயும் தந்தையும் இல்லாத குழந்தைகளே நாட்டில் இல்லை. அப்படியிருக்கும்போது யாரையும் "அனாதைக் குழந்தை" என்று குறிப்பிடக் கூடாது. சரிவர பராமரிக்கப்படாத குழந்தைகளை "வசதியற்ற குழந்தை" என்று சொல்லலாம். சரிவர கவனிக்கப்படாத, பராமரிக்கப்படாத தாயும் தந்தையும் தங்கள் குழந்தைகளை சரிவர கவனிக்க முடிவதில்லை. அந்தக் குழந்தைகள் வசதியற்ற குழந்தைகளாக இருக்கிறார்கள். வசதியில்லாத காரணத்தால் அவர்களை பெற்றோர்கள் விட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். தாயாலோ தந்தையாலோ கவனிக்கப்படாத குழந்தைகள் வசதியற்ற

குழந்தைகளாக இருக்கின்றன. அப்படிப்பட்ட குழந்தைகளை அனாதைக் குழந்தைகள் என்று சொல்வதைவிட வசதியற்ற குழந்தைகள் என்று சொல்வது தான் சரியானது.

வசதியற்ற குழந்தைகள் கிராமங்களில் தான் அதிகம் இருக்கின்றன. நகரங்களிலுள்ள குழந்தைகளுக்கு பல வசதிகள் இருக்கின்றன. உண்மையிலேயே, விஞ்ஞான ரீதியான வசதிகள் நகரங்களில்தான் இருக்கின்றன. தானாக ஓடக்கூடிய மோட்டார் கார்கள், ஏரோப்ளான்கள் முதலியனவை நகரங்களில்தான் இருக்கின்றன. கிராமங்களில் இவை இல்லை. குழந்தைகள் நலனுக்காக செலவிற்காக ஒதுக்கப்படும் 8 லட்ச ரூபாய் பெரும் பகுதி கிராமங்களில் செலவாவதில்லை ; அது நகரங்களில் தான் செலவாகிறது. நகரத்திலுள்ளவர்கள் பார்த்தும் கேட்டும் பல விஷயங்களைத்தெரிந்துகொள்கிறார்கள். ஆகவே நகரங்களிலுள்ளவர்கள் மிகுந்த கல்வி அறிவு படைத்தவர்களாக இருக்கிறார்கள். கிராமங்களில் வசதிகள் குறைவாக இருப்பதால், குழந்தைகள் நலனுக்கான செலவிற்காக ஒதுக்கப்படும் பணத்தில் பெரும் பகுதியை கிராமங்களில் செலவிடவேண்டும். குழந்தைகள் நலனுக்கான வசதிகளைச் செய்துகொடுக்கும் விஷயத்தில், கிராமங்களுக்கு சலுகை காட்டவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். குழந்தைகளுக்கேற்ற நல்ல சினிமாப் படங்களையும் தாய்மார்களுக்கேற்ற நல்ல சினிமாப் படங்களையும் எடுத்து அவைகளை கிராமங்களில் காட்டவேண்டும். இம்மாதிரி விஞ்ஞான ரீதியான வழிகளைக் கடைப்பிடித்தால், குழந்தைகள் நல்ல பிள்ளைகளாக வளருவார்கள் என்பதில் சந்தேகமில்லை. குழந்தைகள் சரிவர வளருவதற்கேற்ற வசதிகள் கிராமங்களில் குறைவாக இருப்பதால், குழந்தைகள் நலனுக்கான செலவிற்காக ஒதுக்கப்படும் பணத்தில் பெரும் பகுதியை கிராமங்களில் செலவிட வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

11-48 a.m. **SRI S. LAZAR** : கனம் தலைவர் அவர்களே, கனம் உள்விவகார அமைச்சர் கொண்டுவந்திருக்கும் இந்த மசோதாவில் நிறைய நல்ல அம்சங்கள் இருப்பதால், அவரையும் பாராட்டி, இந்த மசோதாவையும் ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன். இந்த மசோதாவில் 11-வது பிரிவு வரை உள்ள ஷரத்துக்கள், சட்ட விரோதமான குற்றங்களைப் புரிந்த சிறுவர்களும் இளைஞர்களும், அவர்கள் மீது தொடரப்பட்ட வழக்கு கோர்ட்டுகளில் நடக்கும் காலத்திலும், அதற்குப் பிறகு அவர்கள் தண்டனை அனுபவிக்கும் காலத்திலும், அவர்கள் தகுந்த முறையில் கவனிக்கப்படுவதற்கு அவர்கள் தகுந்த பாதுகாப்பிலும் மேற்பார்வையிலும் இருப்பதற்கு வகை செய்கின்றன ; இது மிகவும் வரவேற்கத்தக்கது. அதற்குப் பிறகு 12-வது பிரிவு முதல் கடைசி பிரிவு வரை இருக்கும் ஷரத்துகள், " தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகள் தண்டனை காலத்திலும் அதற்குப் பிறகும், நல்ல பிள்ளைகளாக வளர்வதற்குகந்த சூழ்நிலையில் இருந்தால் தான் அவர்களுடைய எதிர்காலம் நல்ல மாதிரியாக அமையும் " என்ற கண்ணோட்டத்துடன் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று தோன்றுகிறது ; இது மிகவும் வரவேற்கத்தக்கது.

குறிப்பாக முதல் பகுதியில் இருக்கக்கூடிய பிரிவுகளை பரிசீலனை செய்து பார்க்கும்போது இளைஞர்கள் அல்லது சிறுவர்கள் தண்டனைக்கு உள்ளாவதற்கு முன்னும் பின்னும் அவர்களுக்கு செய்யவேண்டிய வசதிகளைப் பற்றியும் அவர்களை நடத்தவேண்டிய முறைகளைப் பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதுபோன்ற பாதுகாப்பு, இதுபோன்ற நல்லதொரு சூழ்நிலையை சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்குக் மட்டும் கொடுத்தால் போதாது. அதுபோன்ற வசதிகள், சூழ்நிலை குற்றம் புரியக்கூடிய பெண்களுக்கும் செய்து கொடுக்கப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். முதல் பிரிவைப் படித்துப் பார்க்கும்போது அதில், ஏற்கனவே இருந்த சட்டத்திலே எந்தெந்த இடத்தில் " கமிட் " என்ற வார்த்தை இருந்ததோ அதை எடுத்து விட்டு " ப்ளேஸ் " என்ற வார்த்தையை திணித்திருக்கிறார்கள் செலக்ட் கமிட்டியார். இதை

5th September 1958] [Sri S. Lazar]

நாம் நன்கு கவனித்துப் பார்ப்போமேயானால் "கமிட்" என்ற ஆங்கிலப் பதத்தின் நேரடியான அர்த்தத்தை மட்டும் நாம் மனதில் வைத்துக் கொள்ளலாகாது. அதற்கு சட்ட ரீதியான அர்த்தம் இருக்கிறது. அதில் "லீகல் இம்ப்ளிகேஷன்" இருக்கிறது. ஒருவரை ஒரு குற்றத்திற்காக கோர்ட் முன் நிறுத்தி, கோர்ட் கொடுக்கக்கூடிய தண்டனை எந்த முறையில் இருந்தபோதிலும் கூட அதற்கு நாம் உபயோகப்படுத்தப்படவேண்டிய வார்த்தை "கமிட்" என்பதாகும், அதற்குப் பதில் சூழ்நிலை நல்ல முறையில் அமையவேண்டும், குற்றம் புரியாத இளைஞர்களையும் சிறுவர்களையும் வேறு காரணத்திற்காக கோர்ட்டிற்கு கொண்டுவரப்பட்டு அவர்களுக்கு தக்கதொரு சூழ்நிலை ஏற்படுத்திக் கொடுக்க அவர்களை ஒரு சிலரின் பாதுகாப்பில் வைக்கப்படும்போது அதற்கு "ப்ளேஸ்ட்" என்ற வார்த்தை இருப்பது பொருத்தமானதாகும். "டிக்ஷனரியை"யும், "லா லெக்ஸிகனையும்", எடுத்துப் பார்த்தால் இதன் அர்த்தம் புரியும். "கமிட்" என்ற வார்த்தையே மிகப் பொருத்தமான பதம். ஏற்கனவே சட்டத்தில் இருந்த அவ்வார்த்தையை உபயோகிக்கவேண்டியதை விட்டு விட்டு "ப்ளேஸ்ட்" என்ற வார்த்தையை புகுத்துவது சரியல்ல என்று அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர நான் விரும்புகிறேன். அரசாங்கம் ஏற்கனவே தயாரித்த மசோதாவில் "கமிட்" என்ற வார்த்தையை உபயோகித்திருக்கிறார்கள். ஆனால் செலக்ட் கமிட்டியார் அதை பரிசீலனை செய்து பார்த்து விட்டு அந்த வார்த்தையில் ஒரு தவறு பட்ட கருத்து, தாழ்த்தக் கூடிய முறையில், அதாவது "டிகிரேடிங்" காக அவ்வார்த்தை புகுத்தப்பட்டிருக்கிறது என்று அர்த்தம் கொண்டு அதை எடுத்து விட்டு "ப்ளேஸ்ட்" என்ற வார்த்தையை புகுத்தியிருக்கிறார்கள், என்பது அவர்களது ரிப்போர்ட்டிலிருந்து தெரிகிறது. இரண்டாவது தொகுப்புகளைப் பொறுத்த வரையில் அது சரியே. ஆகவே, முதல் தொகுப்பில் "ப்ளேஸ்ட்" என்ற வார்த்தையை அகற்றி விட்டு "கமிட்" என்ற வார்த்தையைப் புகுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக இரண்டாது தொகுப்பிலே ஒரு சில புதிய பிரிவுகளைப் புகுத்தியிருக்கிறார்கள். உதாரணமாக 36 (எ) என்ற பிரிவில் இருக்கக்கூடியதை பரிசீலனை செய்து பார்த்தால் சிறுவர்கள், இளைஞர்கள் இவர்களை யார் யார் பாதுகாப்பில் வைத்திருக்கிறார்களோ அவர்கள் நல்ல முறையில் நடக்காது தவறுதலான பாதையில் செல்ல முற்படுவார்களேயானால் அவர்களுக்கு தண்டனை கொடுக்க வேண்டிய முறையிலே அப்பிரிவு அமைந்திருக்கிறது. அதை நன்கு கவனித்துப் பார்ப்போமேயானால் இது ஏற்கனவே "இந்தியன் பீனல் கோட்" சட்டத்தில் தக்க முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒருவனது பாதுகாப்பில் இருக்கக் கூடிய இளைஞனோ அல்லது சிறுவனோ ஒரு தவறு செய்தால், ஒரு குற்றம் புரிவானேயானால் அவனும் அதற்கு தக்க முறையில் தண்டனை அடைய வேண்டுமென்ற முறையில் ஏற்கனவே இந்தியன் பீனல் கோடில் அமைந்திருப்பதால் இதை இங்கும் புகுத்த வேண்டிய அவசியமில்லை. அடுத்தபடியாக, இந்த இரண்டாவது தொகுப்பிலே பிச்சை எடுக்கும் பழக்கத்தை ஒழித்துக் கட்டும் முறையில் ஒரு பிரிவை 36 (பி) என்ற பகுதியில் தொகுத்திருப்பதானது மிகவும் பாராட்டத்தக்கது. இன்னும் 36-வது பிரிவிலே புதிய பிரிவுகள் சேர்க்கப்பட்டிருக்கிறது, செலக்ட் கமிட்டியாரால். 36 (பி), டி, ஈ, என்று "ஜெ" வரைக்கும் சேர்த்திருக்கிறார்கள். நான் இது பற்றி சொல்ல விரும்புவது, ஒரு நபர் குற்றம் புரிவதற்கு துணையாயிருந்து ஒரு குற்றம் நடக்குமேயானால் அவர் மேல் நடவடிக்கைகள் எடுப்பதற்கான பிரிவுகள், "அபெட்மென்ட்" என்ற பிரிவில் இந்தியன் பீனல் கோடில் ஏற்கனவே அமைந்திருக்கிறது. ஆகவே, அதற்கென இப்பொழுது சில பிரிவுகளை தனியாக புகுத்த முற்படுவார்களேயானால் இரண்டு சட்டங்களுக்கும் "கான்ப்ளிக்ட்" ஏற்படும். ஒவ்வொரு பிரிவையும் சரியாக படித்துப் பார்க்கும் போது இந்த பிரிவுகளின் அடிப்படையில் குற்றம் புரியாதவர்கள் கூட குற்றம் புரிந்ததாக ஆளாவதற்கு நேரிடும் என்ற அச்சம் ஏற்படுகிறது. ஏனெனில், இந்தப் பிரிவுகள் படி குற்றம் எந்தமுறையில் அமைந்த போதிலும், கள் குடிப்பது போன்ற குற்றங்கள் செய்தாலும் கூட அல்லது வேறு பல குற்றங்களில் ஈடுபடும்போது கூட அதற்கு உடன் இருக்கக்கூடிய, அதாவது துணை இருக்கக்

கக்கூடிய எந்த ஒரு "அடல்ட்"ம் அதற்கு பொறுப்பாளியாகிருன், என்ற முறையில் பிரிவுகள் அமைந்திருக்கின்றன. மன்னிக்கவும், நான் சொன்னதில் ஒரு தவறு ஏற்பட்டுவிட்டது. அந்தக் குற்றம் புரிபவர்கள் அல்ல. அக்காரியங்களைச் செய்வதற்கு உடன் இருக்கக்கூடிய துணை புரியக்கூடிய ஒவ்வொரு பெரிய மனிதனும் (அடல்ட்) சட்டப்படி குற்றத்திற்கு ஆளாவான் என்ற முறையில் இந்தப் பிரிவுகள் அமைந்திருப்பது பொருத்தமற்றதாக இருக்கிறது. ஆனுல் பொதுவாகப் பார்க்கும்போது இந்தச் சட்டத்தில் எதிர்கால இந்தியா எந்த முறையில் அமையவேண்டுமென்று மனதில் கொண்டு சிறுவர்கள், இளைஞர்கள் இவர்கள் நல்லமுறையில் வளர பாதுகாப்பு கொடுத்து அவர்கள் எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளாக வருவதற்கு வேண்டிய முறையில் இந்த சட்டம் அமைந்திருப்பது மிகவும் போற்றத்தக்கதாகும். இன்னெரு முக்கியமான பிரிவு இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. சிறுவர்களும், இளைஞர்களும் குற்றம் செய்து விட்டு கோர்ட்டார் அவர்களுக்கு தண்டனை விதித்த பின்பும் கூட அதைப்பற்றி பத்திரிகைகளிலோ அல்லது வேறு எந்த பிரசுரமோ இவற்றைப்பற்றி பிரசுரிக்கக்கூடாது என்ற முறையில் பிரிவு அமைந்திருப்பது மிகவும் பொருத்தமானதாகும். இது, இளைஞர்கள், சிறுவர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் இருக்கிறது. அதேபோன்று "ஸெக்ஷுவல் அபன்ஸஸ்" ஏற்படும் நேரத்திலும், அது பற்றி கோர்ட்டுகளில் விசாரணை நடக்கும்போதும் சரி அல்லது அதற்கான தண்டனை கொடுத்த பிறகும் சரி, அவைப்பற்றி பிரசுரிப்பது சரியல்ல. மக்களிடையே புதுப் புது தவறுதலான கருத்துக்களை, எண்ணங்களை தூண்டிவிடக்கூடிய முறையில் அவைகளைப்பற்றி பிரசுரிப்பதை தடை செய்யவேண்டும். அதற்கு வேண்டிய ஒரு சில ஏற்பாடுகளை இந்தச் சட்டத்தில் ஏற்படுத்த முடியாது என்ற நிலைமை இருந்தபோதிலும் அதற்கு வேண்டிய ஒரு சட்டம் கொண்டு வரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* **SRI A. GOVINDASAMY**: சட்ட மன்ற தலைவர் அவர்களே, பொதுவாக இந்த சட்டத்தை வரவேற்று பேசக்கூடிய நேரத்திலே நானும் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நாட்டிலே சுதந்திரம் ஏற்பட்டு **10, 11** ஆண்டுகள் ஆகியும் கூட பிச்சை எடுக்கின்ற நிலை பரவலாக இருக்கிற காரணத்தினுல்தான் குழந்தைகளை பிச்சை எடுக்க அனுப்ப நாட்டிலே ஒரு உணர்ச்சி, ஒரு எண்ணம் தோன்றி வருகிறது. பிச்சை எடுக்கும் தொழிலை ஒழிப்பதற்குவேண்டிய ஒரு திட்டத்தில் அரசாங்கம் கவனம் செலுத்துமேயானுல் குழந்தைகள் பிச்சை எடுக்கும் நிலை தாளுகவே ஒழியும். இச்சமயத்தில் நான் இங்கு ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். வட நாட்டிலே, நாங்கள் எல்லாம் சுற்றுப்பிரயாணம் செய்த நேரத்தில் பஞ்சாப் மாகாணத்தில் "லூதியானு" என்றயிடத்தில் ஒரு மில்லை பார்வையிட்டு வருகிற நேரத்தில் அந்த மில் முதலாளி எங்களைப்பார்த்துக் கேட்டார், "நீங்கள் இங்கு என்ன அதிசயத்தைப் பார்த்தீர்கள்" என்று. நாங்கள் இங்கு பெரிய மில்களைப் பார்த்தோம் என்று சொன்ன போது அவர் கேட்டார், உங்கள் ஊரில் இருப்பதைவிட இங்கு பெரிய மில்கள் இருக்கலாம். ஆனுல் உங்கள் ஊரில் அதிகமாக இருக்கும் ஒரு காரியம் இங்கு இருக்கிறதா; அதை நீங்கள் சொல்லுங்கள் என்று கேட்டார்,

அதற்கு பதில் கூற முடியாமல் நாங்கள் விழித்துக்கொண்டிருக்கின்ற நேரத்தில் அவரே சொன்னுர். இங்கே பிச்சைக்காரர்களை பார்த்தீர்களா என்று கேட்டார். பார்த்தோம் என்று நாங்கள் யாரும் சொல்லவில்லை. அவரே மேலும் சொன்னுர் அப்படியே நீங்கள் இங்கு எங்கேயாவது பார்த்திருப்பீர்களானுல் அவர்கள் உங்கள் நாட்டிலிருந்து தான் வந்திருப்பார்கள் என்று லூதியானுவிலுள்ள அந்த மில் முதலாளி சொன்னுர். இதையெல்லாம் அங்கு வந்திருந்த எஸ்டிமேட் கமிட்டியிலுள்ள எல்லா கட்சி அங்கத்தினர்களும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனுல் இங்கே பார்த்தால் பிச்சைக்காரர்களுடைய நிலைமை இவ்விதம் இருக்கிறது. இந்த சட்டத்தின்படி பிச்சை வாங்குவதற்காக ஆடினுலும் பாடினுலும் அல்லது அது போல் பாசாங்கு செய்வதாக இருந்தாலும் தண்டனை கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்காக "otherwise" என்று ஒரு வார்த்தை சேர்க்கப்பட்டிருக்கிறது

5th September 1958] [Sri A. Govindasamy]

இன்றைக்கு பஸ் ஸ்டாண்டுகளிலும், ரயில் நிலையங்களிலும் நரிக்குறவர்களுடைய குழந்தைகள் பாட்டு பாடுவதையும், நடனம் ஆடுவதையும் பார்க்கின்றோம். இம்மாதிரி வேறு வழியில்லாமல் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் பிச்சை எடுத்துக்கொண்டிருக்கிற இந்த நரிக்குறவர்களின் குழந்தைகளுக்கு இந்த சர்க்கார் இது வரை என்ன பராமரிப்பு கொடுத்திருக்கிறது ? இவர்களுக்கு எதிர்காலத்தில் என்ன பாதுகாப்பு இருக்கிறது ? அதை நாம் சிந்திக்கவேண்டும். அவர்களை வெளியில் திரிய விட்டு பிச்சை எடுக்க அனுமதித்து விட்டு, குழந்தைகளை மாத்திரம் தண்டிப்பதில் ஒருவிதமான பிரயோசனமும் இருக்க முடியாது. பிச்சை எடுக்கக்கூடாது என்கிற நோக்கம் நல்லதுதான். ஆனால் பிச்சை எடுக்கின்ற நிலைமை இருக்கிறவரையில், அல்லது அம்மாதிரிப்பட்ட நிலைமையை தடுத்து நிறுத்துகிற வரையிலும் என்னதான் சட்டம் போட்டாலும் நிலைமை மாறாது. ஆகவே பிச்சை எடுக்கின்ற நிலைமையை ஒழிப்பதற்கு அரசாங்கம் திட்டவட்டமான ஒரு நடவடிக்கையில் சர்க்கார் ஈடுபடவேண்டும். நமது சர்க்கார் இதுவரையிலும் அம்மாதிரி ஒரு நடவடிக்கையிலும் ஈடுபட்டதாக தெரியவில்லை. பிச்சைக்காரர்கள் மகாநாடு கூட்டினால் வேண்டுமானால் நாங்கள் வருகிறோம் என்கின்ற நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. அவ்விதம் ஒரு திட்டத்தை கொண்டு வந்து இந்த நிலைமையை மாற்றினால் தான் நம் சர்க்கார் க்ஷேமநல சர்க்கார் என்று பேசிக்கொள்ள முடியும். அந்த நிலைமையை கொண்டு வருவதற்கு அரசாங்கம் உடனடியாக ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக இந்த சட்டத்தில் செக்ஷன் 12-டி.டி.யில் **"any pretence of singing, playing, performing or otherwise."** என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது பிச்சை எடுப்பதற்காக பாட்டு பாடவோ அல்லது ஆடவோ செய்தாலும் தண்டனை கொடுக்கலாம் என்று இருக்கிறது. இதிலிருந்து பல நெருக்கடிகள் வந்து விடுமோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. இதை வைத்துக்கொண்டு தெருவில் சிறுவர்கள் ஆடிப்பாடி விளையாடிக்கொண்டிருந்தாலும் இதில் உட்படுத்தி விடுவார்களோ என்று பயப்படவேண்டியிருக்கிறது. ஆகவே **"playing"** என்றிருப்பதை மாற்றி **"Dancing"** என்று வைத்தால் சரியாக இருக்கும் என்று நம்புகிறேன். அடுத்தப்படியாக 36—ஜி—யில் "நான்கு வயதுக்கு மேற்பட்ட ஒரு பெண் குழந்தையை ஒரு விபசார விடுதியில் குடியிருக்க அல்லது அடிக்கடி அங்கே போய் வர எவரேனும் அனுமதித்தால் அல்லது சம்மதித்தால் இரண்டு ஆண்டுகள் தண்டனையும் அல்லது ஆயிரம் ரூபாய் தண்டனை அல்லது இரண்டும் சேர்த்தும் தண்டனை விதிக்கப்படலாம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான்கு வயது குழந்தைகள் விபசார விடுதியில் அவர்களுடைய தாய் தந்தையர்களுடைய அனுமதியில்லாமல் அங்கே இருப்பதற்கு வசதி கிடையாது. ஆகவே இந்த இடத்தில் 14 வயது என்றிருந்தால், வேண்டுமானால் அது சரியாக இருக்கும். 14 என்பதுதான் 4 என்று ஆகிவிட்டதா என்றும் தெரிய வில்லை. "நான்கு வயதிற்கு மேல்" என்றிருப்பதை குறிப்பாக இத்தனை வயது என்று நிர்ணயம் செய்யவேண்டும். நான்கு வயது குழந்தைகள் விபசார விடுதியில் இருப்பதனால் எந்த விதமான தீங்கும் ஏற்பட்டு விடாது. விபசாரத்தை தடுப்பதற்கு என்று தனியாக சட்டம் இருந்த போதிலும், விபசாரத்தில் ஈடுபடுகிற நான்கு வயது வந்த சிறுவர்களுக்கு தண்டனை கொடுக்கும் போது, அவர்களின் பெற்றோர்களை மாத்திரம் தண்டித்துவிட்டு, இதற்கு யார் உடந்தையாக இருக்கிறார்களோ அவர்களை தண்டிக்காமல் விட்டால் அது பிரயோசனம் இல்லை. ஆகவே இதற்கு யார் உடந்தையாக இருக்கிறார்களோ அவர்களையும் கண்டுபிடித்து தண்டிக்க வேண்டும். அடுத்தபடியாக 36—எச்—என்ற ஒரு பிரிவு இருக்கிறது. இந்த பிரிவை அறவே எடுத்துவிட வேண்டும். இப்போது சாதாரணமாக பெண் குழந்தை பிறந்தால் வெல்லமும் ஆண் குழந்தை பிறந்தால் சர்க்கரையும் கொடுக்கிறார்கள். இந்த நிலைமையில் இருக்கிறது. ஆகவே பத்து அல்லது பதினாறு வயதில் யாரும் தங்கள் குழந்தைகளை விபசாரத்திற்கு அனுப்ப மாட்டார்கள். எவ்வளவு தான் ஏழைகளாக இருந்தாலும் இதற்கு அனுமதிக்க மாட்டார்கள். அவ்விதம் நாட்டில் இருந்து கொண்டிருக்கிறது

என்றுல், அது வறுமையின் காரணமாகத்தான் இருக்கும். அந்த வறுமையை போக்குவதற்கு இந்த அரசாங்கம் இதுவரையில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள் என்பதை நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். ஆகவே இதில் பெற்றோர்கள் முச்சலிக்கா எழுதி கொடுக்க வேண்டும் என்றிருப்பதை வற்புறுத்தக்கூடாது. பெண்களைப்பற்றி சொல்லப்படும்பொழுது வயதை குறிப்பிட்டு நிர்ணயிக்க வேண்டும். அதைப் பற்றி இதில் தெளிவாக சொல்லவில்லை. கற்பழிக்கப்படுகிற விஷயத்தில் கற்பழிக்கப்பட்ட பெண்ணின் பெற்றோர்களை தண்டிக்க வேண்டும் என்றிருக்கிறது. இதிலும் சிறிது கவனம் செலுத்த வேண்டும். கற்பழிக்கப் படுவதற்கு யார் உடந்தையாக இருந்தார்களோ அவர்களை கண்டு பிடித்து தண்டிக்க வேண்டும். அதல்லாமல் நிரபராதிகளான பெற்றோர்களை தண்டிக்கக்கூடாது. பெற்றோர்கள் விவசாய தொழிலாளியாக இருக்கலாம், ஆலையில் வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளாக இருக்கலாம். அவர்கள் வேலைக்கு சென்றிருக்கும் சமயத்தில் தவறுதலாக அவர்களின் பெண்கள் ஆசை வார்த்தைக்கு அடிமையாகி தவறு செய்து விடுமானுல், அதற்காக பெண்ணின் பெற்றோர்களை தண்டிப்பது நியாயமல்ல. அதற்கு மாறுக சம்பந்தப்பட்ட பெண்ணை கற்பழித்தவன் யார் என்று பார்த்து அவனையும், அதற்கு உடந்தையாக இருந்தவர்களையும் கண்டு பிடித்து அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தான் நான் வலியுறுத்த விரும்புகிறேன். அடுத்ததாக மது, மது போன்ற இன்னும் தீங்கு விளைவிக்கக்கூடிய மருந்து விற்கப்படும் இடங்களுக்கு சிறுவர்களை பிரவேசிக்க அனுமதிக்கக்கூடாது, அனுமதித்தால் தண்டிக்கப்படுவார்கள் என்றிருக்கிறது. இந்த சட்டத்தைப் பார்க்கின்ற போது ஒரு அச்சம் ஏற்படுகிறது. இன்றைய தினம் பரவலாக எல்லா கிராமங்களிலும் கள்ளச் சாராயம் காய்ச்சப்பட்டு வருகிறது. இதை தடுத்து நிறுத்துவதற்கு இந்த ஆட்சியாளர்கள் என்னவெல்லாமோ முறைகளை எல்லாம் கையாண்டு வருகிருர்கள். ஆனுல் அவைகள் எல்லாம் போதுமான அளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறது என்று சொல்ல முடியாத நிலையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆங்காங்கு எல்லா கிராமபுறங்களிலும் வீடுகள் தோறும் கள்ளச்சாராயம் காய்ச்சப்படுகிறது. இதை தடுப்பதற்கு தீவிரமான நடவடிக்கை எடுக்கப்படவில்லையானுல் இன்னும் இவர்களை இதில் கூடுதலாக ஈடுபடுத்துவதாகவே இருக்கும். இதில் மதுவிலக்கு தீவிரப்படுத்துவதற்கு இந்த செக்ஷனில் ஒன்றையும் காணேம். அதற்கு இந்த செக்ஷனில் இடமேயில்லை. மதுவிலக்கு போதுமான அளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறது என்று சொல்ல முடியாது. இந்த கருத்தை அமைச்சர் அவர்கள் மறுக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன். தேர்தல் காலத்தில் சில கிராமங்களில் இரவு ஏழு, எட்டு மணிக்கு மேல் அங்கு போக முடியாத நிலை இருந்தது. போலீஸ்காரர்கள் கூட அங்கு போகவேண்டுமானுல் சிறிது அதை உபயோகப்படுத்திக்கொண்டுதான் போகவேண்டும். அதல்லாமல் போனுல் அவர்கள் உயிரோடு வீடு திரும்ப முடியும் என்று நிச்சயமாக சொல்ல முடியாது. அந்த அளவுக்கு மதுவிலக்கு தோற்றுப் போய் இருக்கிறது. மதுவிலக்கை தீவிரப்படுத்துவதற்கு இந்த செக்ஷனில் ஒன்றும் இல்லை. தீங்கு விளைகின்ற இடங்களுக்கு மாத்திரம் பிரவேசிக்க அனுமதிக்கக்கூடாது என்று சொல்லுவதில் மாத்திரம் பிரயோசனம் ஒன்றுமில்லை. ஆகவே மதுவிலக்கையும் இதோடு தீவிரமாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தப்படியாக, மதத்தின் பேராலும், கடவுளின் பேராலும் பல உற்சவங்கள் நடக்கிறது. கூத்தாண்டார் உற்சவம் என்று ஒரு உற்சவம் நடக்கிறது. அதில் ஆண்கள் பெண் வேடங்கள் போட்டுக்கொண்டு ஆடுவார்கள். இவ்விதம் கடவுளே பெண் வேஷத்தில் வந்ததாக மகா பாரதம் போன்ற கதைகளில் வருகிறது. இவைகள் எல்லாம் நல்லவையாக இருக்கலாம். ஆனுல் இப்போதும் அம்மாதிரி உற்சவ காலங்களில் வேஷம் போட்டுக்கொள்வது என்பது பெரிய தகராறை உண்டுபண்ணுவதாகயிருக்கிறது. இது இப்போதும் நடந்து கொண்டுவருகிறது. ஆகவே இம்மாதிரி உற்சவங்களை தடுத்து நிறுத்த வேண்டும். இம்மாதிரியான உற்சவங்களை நிறுத்திஞல் மக்களுக்கு

5th September 1958] [Sri A. Govindasamy]

ஏற்படுகிற காம உணர்ச்சியை தடுத்து நிறுத்த முடியும். (கனம் ஸ்ரீ எம். பக்தவத்சலம் : அவ்விதமென்றால் நாடகங்களிலும் ஆண்கள் பெண் வேஷம் போடுவதை நிறுத்த வேண்டும்.) நாடகத்தில் பெண் வேஷம் போடக் கூடாது என்று சொல்ல முடியாது. நாடகத்தில் ஆண்டவனின் பெயரை சொல்லிக்கொண்டு ஆண்கள் பெண் வேஷத்தை போடுவது கிடையாது. ஆண்டவனே மோகினியாக வந்தார் என்ற எண்ணத்தை மக்கள் கொண்டிருக்கிறார்கள் திராவிட முன்னேற்ற கழகத்தை சேர்ந்த நான் இதை சொல்லுகிறேன் என்ற காரணத்திற்காக இதை ஏற்றுக்கொள்ளாமல் இருக்க வேண்டாம். அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் இந்த சபையில் மறுக்கலாமே தவிர மனச்சாட்சியோடு சிந்தித்துப்பார்த்தால் நான் சொல்லுவது சரியாக விளங்கும் என்று நினைக்கிறேன். மேலும் ஒரு விஷயம். பெரியபாளையம் என்ற இடத்தில் ஒரு மாரியம்மன் கோவில் இருக்கிறது. அங்கு சில உற்சவ காலங்களில் பெண்கள் நிர்வாணத்தோடு வேப்பிலையை மாத்திரம் அணிந்து கொண்டு குழந்தைகளை எடுத்துக் கொண்டு போவார்கள். இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்த வேண்டும். திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்தவன் என்ற நிலையில் நான் சொல்லுவதை பார்க்காமல், அதிலிருக்கின்ற கருத்துக்களைப் பார்த்தால் இவையெல்லாம் சரி என்று அமைச்சர் அவர்களே ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அந்த இலாகாவையும் நமது அமைச்சர் அவர்களே நிர்வகிப்பதால் அதையும் கவனிப்பார் என்று நான் இதைச் சொல்கிறேன். அவைகள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆலயங்கள், மடாலயங்கள் இவைகள் பேரால் ஏராளமான சொத்து இருக்கிறது. ஏழை எளிய குழந்தைகளின் நலனுக்காக, அனாதைக் குழந்தைகளின் க்ஷேம நலனுக்குப் பயன்படுவதற்காக அந்த சொத்துக்களையெல்லாம் அரசாங்கம் கைப்பற்றியாகவேண்டும். அதை ஆண்டவன் சாப்பிடுவதாக கணக்கு எழுதி வைக்கிறார்கள். ஆனால் உண்மையில் யார் சாப்பிடுகிறார்கள் என்பது அமைச்சருக்கும் தெரியும். அப்பேர்ப்பட்ட சொத்துக்களையெல்லாம் அப்பேர்ப்பட்ட பொருள்களையெல்லாம் அமைச்சர் அவர்கள் கைப்பற்றி ஏழை எளிய குழந்தைகள், அனாதைக் குழந்தைகள் இவர்களுடைய பராமரிப்புக்காக வழங்கவேண்டும்.

(**Deputy Speaker in the Chair.**)

எனக்கு ஒரு சமயம் கனம் சௌந்திரம் அம்மையார் நடத்துகின்ற ஆசிரமத்திற்குப் போகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கே குழந்தைகளை நன்கு பராமரித்து வருகிறார்கள். சமூக முன்னேற்றத்தில் அம்மாதிரியான நிலையங்களுக்கு இன்னும் அதிகத் தொகை ஒதுக்கிக் கொடுக்கும் நிலை ஏற்பட்டால், அனாதைக் குழந்தைகள், ஏழை எளிய குழந்தைகள் நல்ல முறையில் வளர முடியும். அங்கே உள்ள ஒரு குழந்தையை "உன் ஊர் என்ன" என்று கேட்டபோது அந்தக் குழந்தை "காந்திக் கிராமம்" என்று சொல்லியது. செங்கற்பட்டு, தென்னார்காடு என்றெல்லாம் அறியும் தன்மையும், உணர்வும் வந்தும் கூட அந்தக் குழந்தைகள் தாங்கள் இருக்கும்படியான அந்த காந்திக் கிராமத்தையே தங்கள் ஊராகக் கொண்டிருந்தன. அங்கே மறுபடியும் "உன் பெற்றோர்கள் யார்?" என்று கேட்டபோது, அம்மையாரையே காட்டும் நிலையிருந்தது. அந்த அளவுக்கு குழந்தைகளை நன்கு வளர்க்கும் நிலை இருக்கிறது. அந்த அம்மையார் பேசும்போது எடுத்துச் சொன்ன கருத்தையும் கவனிக்க வேண்டும். அவர்கள் எத்தனையோ குழந்தைகளை வளர்க்கிறார்கள், அவர்களுக்குத்தான் இதிலுள்ள கஷ்ட நஷ்டங்கள் தெரியும். சிறு குழந்தைகளை, நிர்க்கதியாக விடப்பட்ட குழந்தைகளை, ஆற்றங்கரையில் வீசப்படும் குழந்தைகளை, குப்பைத் தொட்டியில் வீசப்படும் குழந்தைகளை, எல்லாவற்றையும் எடுத்து, அவைகளைக் காப்பாற்றி வளர்த்து நல்ல நிலைக்குக் கொண்டு வந்தால் அவர்கள் நாட்டுக்கு உதவியாக இருப்பார்கள் என்பதில் சந்தேகம் கிடையாது. அவர்களுடைய நலனை கவனிக்க ஒன்றிரண்டு ஸ்தாபனங்கள் இருந்தால் போதாது. சமூக சேவை உணர்ச்சி உள்ளவர்கள், ஆண்களாயிருந்தாலும், பெண்களா

யிருந்தாலும், யாராயிருந்தாலும், நல்ல முறையில் பணியாற்றினால், எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க அரசாங்கம் தயாராக இருக்க வேண்டும். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணமான, மூல காரணமான, பிச்சைக்காரர்கள் ஒழிப்புத் திட்டத்தில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். விபசார ஒழிப்புச் சட்டம் என்று தனியாக ஒரு சட்டம் இருக்கும்போது இதிலும் அதைக் குழப்ப வேண்டிய அவசியம் கிடையாது. இப்படிப்பட்ட சிக்கலான பிரச்னைகளையெல்லாம் நீக்கி, ஒரு உருவான சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

SRI N. K. PALANISAMI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கிட்டத் தட்ட 28 வருஷங்களுக்குப் பிறகு இந்தச் சட்டத்திற்கு சில திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். திருத்தங்கள் என்ன காரணத்திற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதற்கு அவர்கள் விளக்கம் கூறவில்லை. ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீஸன்ஸ் இந்த மசோதாவிற்குக் கிடையாது. இருந்த போதிலும் அவர்களுக்குக் கொடுக்கப்படும் டிரெயினிங் பீரியடை அதிகப் படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் 16 வருஷத்தை 18 வருஷமாகவும் 18 வயதை 21 வயதாகவும் அதிகப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் எனக்கு முன்பு பேசிய சௌந்திரம் அம்மையார் சொன்ன மாதிரி, 28 வருஷங்களுக்குப் பிறகு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அந்த மாறுதல் சரியான முறையில் செய்து சரியாக மசோதாவாகத் தயார் செய்திருந்தால் நல்லதாக இருக்கும்.

இன்றைய தினம் குற்றம் செய்யக்கூடிய இளைஞர்களையும், பெண்களையும் ஒரு இடத்தில் வைத்து, திருத்தி பின்னர் வாழ்வளிக்க வழி செய்யும் இந்தச் சட்டம் எந்த அளவுக்குப் பொது ஜனங்களுக்கு பிரயோசனமாக இருக்கிறது என்று தெரியவேண்டும். சில இடங்களில் பள்ளிகளை வைத்து அந்தப் பள்ளிகளில் சில காலம் வைத்து வெளியே விடுகிறார்கள். அப்படிக் காலம் முடிந்து போய் வெளியே வந்த பிறகு அவர்கள் நல்ல முறையில் வாழ்க்கை நடத்துகிறார்களா என்பது தெரியவில்லை. அம்மையார் அவர்கள் சொன்னது போல், இதற்கு அடிப்படைக் காரணம் வறுமை. சமுதாய ஏற்றத்தாழ்வு, வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் முதலியன இருக்கும்வரையில் இந்தக் குற்றங்கள் இருக்கத்தான் இருக்கும். சர்க்காரே கொடுக்கும் நிலையைப் பார்த்தால் இம்மாரல் டிராபிக்கில் கைது செய்யப்பட்டவர்களில் 100-க்கு 99 பேர்கள் ஏழைகள். இதிலிருந்து மேல்தட்டில் உள்ளவர்கள் ஒழுங்காக இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அது வேறு விஷயம். அதே மாதிரி 100-க்கு 40 பேர்கள் அனாதைச் சிறுவர்கள். 100-க்கு 30 பேர்கள் பிச்சை எடுத்து வருகிறார்கள். ஆக 100-க்கு 70, 75 பேர்கள் வறுமை காரணமாக, சிறுவர்கள், குற்றம் செய்யும் நிலைமை இருக்கிறது. மேல்நாடுகளில், முன்னேற்றமடைந்திருக்கும் நாடுகளில் பொது ஜன ஸ்தாபனங்களும், மற்ற ஸ்தாபனங்களும் முன் வந்து நடவடிக்கை எடுத்து குற்றம் செய்பவர்களை சமூக பகிஷ்காரம் செய்வதன் காரணமாக இம்மாதிரியான குற்றம் தடுக்கப்படுகிறது.

அடுத்தபடியாக ஸர்ட்டிபைட் ஸ்கூல்களை எடுத்துக்கொண்டால் நம் ராஜ்யத்திலே மூன்று பள்ளிகள் தான் இருக்கின்றன. அவற்றுள் பெண்களுக்கு ஒன்றே ஒன்று தான். அது மட்டுமல்ல. புரொபேஷனரி ஆபீஸர்களை எடுத்துக் கொண்டால் மொத்தம் 48 பேர்கள் தான் இருக்கிறார்கள். ஏற்கெனவே ராமச்சந்திரன் அவர்கள் சமர்ப்பித்த அறிக்கைப் பிரகாரம் இந்தப் பள்ளிகள் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏற்படுத்தப்படவேண்டுமென்று சொல்லி இருந்தும் கூட இன்னும் ஏற்படுத்தப்படவில்லை. ஷெல்டர்ஹோம் என்று ஒன்று இருக்கிறது. அது இப்போது மதுரையில் ஒன்று இருக்கிறது, திருநெல்வேலியில் ஒன்று இருக்கிறது. இன்னும் மூளைக்கோளாறினால் வரும் குழந்தைகளை எடுத்துக்கொண்டால் அவர்கள் நேராக பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படுகிறார்கள். இப்போது அவர்களுக்கு ஒரு டாக்டர் ஏற்படுத்தியிருப்பதாகச் சொன்னார்கள். எந்த அளவுக்கு இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதே சமயத்தில் பெண்களுக்குத் தனி

5th September 1958] [Sri N. K. Palanisami]

பள்ளிக்கூடம் இல்லை. அவர்கள் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்படுகிறார்கள். கூன், குருடு, செவிடு இவர்கள் அனாதையாக விடப்படுகிறார்கள். அவர்களுக்கு எந்தவித வசதியும் செய்து கொடுக்க சர்க்கார் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை.

இன்று ஜுவனைல் கோர்ட் என்று சொல்லும்படியான கோர்ட்டுகளில் இருக்கும் மாஜிஸ்டிரேட்டுகள் நல்ல முறையில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்களா என்பது சந்தேகம். ஒவ்வொரு குழந்தையும் இம்மாதிரியான நிலைமைக்கு ஏன் வந்தது என்று ஆராய்ந்து அவர்களுக்கு என்ன பாடம் சொல்லிக் கொடுக்கவேண்டுமோ அதைச் சொல்லிக்கொடுப்பது கிடையாது. அந்த ஜுவனைல் மாஜிஸ்டிரேட்டுகள் எந்த அளவுக்குப் படித்திருக்கிறார்கள், எந்த மாதிரி டிகிரி எடுத்திருக்கிறார்கள், எந்த அளவு திறமை பெற்றிருக்கிறார்கள் என்பதை கனம் மந்திரி அவர்கள் சொல்லவேண்டும். அந்த மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு வருவார். அவருக்கு ஒரு கிளார்க் இருப்பார். வந்ததும் என்ன கேஸ் என்று கேட்பார். கிளார்க் சொன்னதும், அதைத் தள்ளிப்போட்டு விடச் சொல்லுவார். இப்படி அனேக நாட்கள் கேஸ்களை விசாரிக்காமல் போய்விடுவார்கள். அது மட்டுமல்ல. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் ஸைகாலஜிட்ஸ் என்று சொல்லக்கூடியவர்களை வைக்க வேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஸெர்ட்டிபைட் ஸ்கூலிலும் வைக்கப்பட்டிருகிறதா என்பது நமக்குத் தெரியாது.

இன்னும் சட்டபிரகாரம் 30 வருஷம் வரையிலும் விஜிலன்ஸ் ஹோமுக்கு அனுப்பப்படுகிறார்கள். ஆனால் எட்டு வயது சிறுமியாக இருந்தாலும், பத்து வயது சிறுமியாக இருந்தாலும், ஏதாவது குற்றம் செய்தால் அவர்களை விஜிலன்ஸ் ஹோமுக்கு அனுப்பிவிடுகிறார்கள். அதனால் அவர்களும் கெட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அவர்களுக்குக் குறைந்த பட்ச வயது வைத்து, இம்மாதிரியான குற்றம் செய்பவர்களைத் தான் விஜிலன்ஸ் ஹோமுக்கு அனுப்புவது என்று வரையறுத்தால் நல்லது.

ஏற்கனவே மத்திய சர்க்கார் சட்டம் ஒன்று இருந்தது. அதன் பிரகாரம் ஓர் ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் இம்மாரல் டிராபிக் சட்டத்தின் கீழ் கைது செய்யலாம். கைது செய்து மாஜிஸ்டிரேட்டிடம் கொண்டு வந்து நிறுத்தலாம். ஆனால் இந்தச் சட்டப் பிரகாரம் ஒரு ஸுபரின்டெண்டெண்ட் ஆப் போலீஸ் தான் இம்மாரல் டிராபிக் ஆக்டின் கீழ் கைது செய்யலாம். அதற்கு மாஜிஸ்டிரேட்டிடம் பர்மிட் வாங்க வேண்டுமென்ற ஒரு முறை இருக்கிறது. ஆகவே சட்டத்தை அமல் நடத்தக்கூடியகாலையில் இன்னும் பலவிதமான கஷ்டங்கள் ஏற்படுமேயன்றி, இருக்கக்கூடிய கஷ்டத்தை தவிர்ப்பதாக இருக்க முடியாது. இப்பொழுது போலீசாருக்கு பல வேலைகள் இருக்கின்றன. இந்த மாதிரி வேலைகளையும் போலீசார் பார்க்கிறது என்றால், அது முடியாத காரியம். விபசார ஒழிப்பு சட்டத்தை சரியான முறையில் நடத்துவதற்கு கல்கத்தா, பம்பாயிலுள்ளது போல், " விஜிலன்ஸ் போலீசாரை " நியமிக்கும் முறையைக் கையாளலாம். அது மட்டுமல்ல. பெண்களைக் கொண்டு போவதற்கு, ஆண் போலீசாரை உபயோக்கப்படுத்தாமல் பெண் போலீசாரையே உபயோகப்படுத்தவேண்டும். மேலும் ஏதாவது ஒரு குழந்தை ஒரு குற்றம் செய்தால் அக்குழந்தையின் தாய்தகப்பன் உத்திரவாதம் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. இன்று நல்லவனாக இருக்கிறான். ஆனால் நாளையும் நல்ல நடத்தையுடன் இருப்பான் என்பதற்கு யார் உத்திரவாதம் கொடுக்க முடியும் ? இம்மாதிரிக் குழந்தைகளை யெல்லாம் சொந்தக்காரரிடமோ, தெரிந்தவர்களிடமோ அல்லது தாய் தகப்பனிடமோ விடவேண்டுமென்றிருக்கிறது. ஒரு " delinquent child" என்றால் யாருமே அதை எடுத்து வளர்க்க மறுக்கிறார்கள். ஒரு சமயம் பணம் கொடுக்காமல் வேலைக்கு வைத்துக்கொள்ளக் கூடிய முறையாகத்தான் இருக்கும். பெண்களையும் இம்மாதிரி எடுத்துக்கொள்ளச சொன்னால், குற்றங்களை அதிகப்படுத்துவதற்காக வழியைத் தேடுவதாகத்தான் இருக்கும்.

அடுத்தபடியாக, 36–எ பிரிவில் " **whoever ...... neglects** " என்று இருக்கிறது. " **neglects** " என்றால் அர்த்தமேயில்லை. இதை எப்படி சர்க்கார் ருஜுப்படுத்த முடியும் ? ருஜுப்படுத்த முடியாத முறையில் ஒரு ஷரத்தை இதிலே சேர்ப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது.

குழந்தைகளை வைத்துக்கொண்டு சிலர் பிச்சை எடுப்பது வாஸ்தவம். குழந்தை சம்பாதிக்கும் எட்டணாவில் நாலணாவைப் பிடுங்கி குடும்பம் நடத்துபவர்களும் இருக்கிறார்கள். இவர்களுக்கு 200 ரூபாய் அபராதம் விதிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் பணத்திற்கு எங்கே போவார்கள் ? பணம் இல்லாத காரணத்தினால் தானே பிச்சை எடுக்கிறார்கள். ஆகவே, அபராதத்திற்குப் பதிலாக, இம்மாதிரி குற்றங்களுக்கு உடந்தையாயிருப்பவர்களை தேச புனருத்தாரண வேலைகளில் கட்டாயமாக ஈடுபடச் செய்து உபயோகப்படுத்தினால் நல்ல முறையாக இருக்கும்.

36–எச் பிரிவின் படி " **If it appears to the court .... . with or without the knowledge of the parent or guardian** " என்று இருக்கிறது. தவறான முறையில் போய்விட்டவர்களை, மறுபடியும் தாய் தந்தையரிடமோ அல்லது போஷகரிடமோ கொண்டுபோய் ஒப்படைப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது ? இன்னும் அந்தக் குழந்தைகளின் தண்டனை காலம் முடிந்த பிறகு ஒரு புரபேஷனரி ஆபீசரின் கீழ் வைப்பதை எப்படி உசிதம் என்று சொல்ல முடியும் ? இதற்குப் பதிலாக ஒரு தனி **institution** ஏற்படுத்தி அதில் கொண்டுபோய் விட்டால் அவர்கள் வாழ்க்கையும் திருந்தும், அவர்களுக்கும் பிரயோசனமாக இருக்கும்.

ஆகவே, இவைகளையெல்லாம் கவனித்து சட்டம் திருத்தப்படவேண்டும். நான் சொல்லவேண்டிய எல்லாக் கருத்துக்களையும் இன்னும் சொல்லவில்லையாகையால், அந்தந்தப் பிரிவுகள் விவாதத்திற்கு வரும்பொழுது அவைகளை எடுத்துச் சொல்ல எனக்கு அனுமதியளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : Sri K. Anbazhagan may now speak. The hon. Member may finish his speech in 5 minutes.

Sri K. ANBAZHAGAN : அவைத்தலைவர் அவர்களே, இப்பொழுது கொண்டு வரப்பட்டுள்ள குழந்தைகள் குணநலப் பாதுகாப்பைக் கருதிய இந்த சட்டத்தை வரவேற்கிற முறையில் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இங்கே இயற்றப்பட்டுள்ள சட்டத்தின் பகுதிகளிலே வருகிற தனிப்பட்ட சிறுசிறு திருத்தங்களைப் பல நண்பர்கள் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். இத்தகைய ஒரு சட்டத்தைக் கொண்டுவருகிற இந்த சமயத்தில் குழந்தைகளின் சூழ்நிலையை ஆராய்வது மிகமிக அவசியம். சூழ்நிலையை ஒட்டித்தான் குழந்தைகள் தவறுகள் இழைக்கின்றார்கள் என்பதை நான் வற்புறுத்திக் கூறுவேன். முக்கியமாகக் குறிப்பிட விரும்புவது யென்னவென்றால், இன்றைய தினம் ஆட்சியிலே இருப்பவர்கள் சமதர்ம நிலையை நோக்கி சமுதாயத்தை அழைத்துச் செல்வது என்ற குறிக்கோள் கொண்டுள்ளதாகக் கூறிய போதிலும், அந்தச் சமதர்ம நிலை விரைவில் தோன்றாத காரணத்தினாலே, குழந்தைகளிலே குற்றவாளிகள் மிகுதியாக இருக்கிறார்கள் என்பதாகும்.

பன்னிரண்டு ஆண்டு காலம் நான் ஆசிரியராக இருந்த வாய்ப்பின் காரணமாக, மிகப் பெரிய செல்வர்கள் வீட்டுக் குழந்தைகள் தவறு செய்வதையும், மிக எளிய வறிய நிலையிலுள்ள குழந்தைகள் தவறு செய்யவேண்டிய நிலைக்கு ஆளானதையும் பலமுறை கண்டிருக்கிறேன். ஆனால் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த குழந்தைகள் மிகவும் குறைவாகவே குற்றங்கள் செய்கிறார்கள். எனவே, சூழ்நிலையை எண்ணிப்பார்க்கிற நேரத்தில், நடுத்தர சூழ்நிலையில் இந்த நாட்டின் சமுதாயம் உருவாகுமேயானால், அதாவது மிகுதியாக ஏழைகளும், மிகுதியாக செல்வர்களும்

5th September 1958] [Sri K. Anbazhagan]

இல்லாமலிருந்தால், குழந்தைகள் மிகுதியாக கெடமாட்டார்கள். மற்றவர்கள் கெட்டாலும், குழந்தைகள் கெட மாட்டார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த நாட்டில் குழந்தைகள் குற்றம் செய்வதற்கு சூழ்நிலையும் சமுதாயமும் காரணம் என்று அறிந்த பின்னரும், குழந்தைகளைத் திருத்துவதற்காக அமைக்கப்பட்டிருக்கிற பள்ளிகள் " குழந்தைகள் குற்றவாளி பள்ளிகள் " என்று பெயரிடப்பட்டிருப்பதற்குப் பதிலாக, " குழந்தைகள் நலப்பாதுகாப்பு பள்ளிகள் " என்று பெயர் பெறவேண்டும். குழந்தைகள் குற்றவாளிப் பள்ளிகளில் இருந்த காரணத்தினாலேயே எவ்வளவுதான் திருந்தி நல்லவர்களாய் வந்துவிட்டாலும், சமுதாயத்திலே என்றென்றைக்கும் மற்றவர்களால் குற்றவாளிகளாகக் கருதப்படுகிறார்கள். ஆகையால் புதிதாக ஒரு தாழ்ந்த ஒரு ஜாதி சமுதாயத்திலே தோன்றுகிறது. எனவே, " குழந்தைகள் நலப் பாதுகாப்புப் பள்ளிகள் " என்று பெயரிடுவது சிறப்பாக இருக்கும்.

மற்றொன்று. பெண்கள் குற்றப் பாதுகாப்பு விடுதியைக் குறித்து டாக்டர் சௌந்தரம் அம்மையார் அவர்கள் பேசிய நேரத்தில், அதற்கு நல்ல பெயர் ஒன்றைக் கேட்டார்கள். " விஜிலன்ஸ் ஹோம் " என்ற ஆங்கிலச் சொற்றொடருக்கு ஏற்றவகையில், தமிழில் " மீட்சி விடுதி " என்று பெயரிடலாம். மீட்சி என்பது எப்பொழுதோ தவறு இழைத்தாலும் பின்னர் தவறு இழைக்காமலிருக்கும் வகையில் செய்யும் நல்ல மாற்றத்தைக் குறிக்கும் பெயராகும். சமுதாயத்திலே இருக்கிற குழந்தைகள் தவறு செய்வது சூழ்நிலையின் காரணமாக என்பதை நான் தெரிவித்தேன். அதற்கு இரண்டு மூன்று முக்கிய காரணங்கள் உண்டு. ஒரு குழந்தை நல்ல மகிழ்ச்சியோடும் உற்சாகத்தோடும் வாழ்ந்து வந்தால் பெரும்பாலும் குற்றம் செய்வதில்லை. ஏழ்மையான நிலையிலிருந்தாலும் கூட, மகிழ்ச்சியும், உற்சாகமும் கிடைக்கும் வாய்ப்பு எப்படியாவது ஏற்பட்டால், தவறு இழைக்காமல் நல்ல முறையில் வாழ்கிறார்கள். அடிக்கடி வருந்துகிற நிலையிலும், வேதனைப்படுகின்ற நிலையிலும், உள்ளத்திலே குமுறல் ஏற்படுகின்ற நிலையிலும், ஏற்படுகின்ற குமுறலின் காரணமாக தவறு இழைக்க தூண்டப்படுகிறார்கள். குழந்தைகள் குற்றவாளிகள் ஆவதற்கு முன்னால் மனதிலே குறைபாடு ஏற்படுகிறது. அதற்கு முன்னால் உடல் நல வளர்ச்சியிலே குறைபாடு ஏற்படுகிறது. குற்றம் செய்த பெரும்பாலான குழந்தைகளைப் பார்க்கும் பொழுது, அவர்களுடைய உடல் நல வளர்ச்சியிலே இருக்கிற குறையை நான் பல தடவை உன்னித்துப் பார்த்திருக்கிறேன். ஒல்லியாக இருப்பதை மட்டுமே உடல் நலக்குறை என்று நான் கருதவில்லை. உடலிலே தக்க பலம் சேருவதற்குத் தேவையான உணவு சத்துக்கள் சரியானபடி கிடைக்கவேண்டும். அப்படிப்பட்ட உணவு கிடைக்காத காரணத்தினால், நரம்புத்தளர்ச்சி அதனாலே ஏற்படுகிற ரத்த ஓட்டக்குறைவு, குருதியின் தரக்குறைவு, மனச்சோர்வினால் ஏற்படுகிற குமுறல், ஆகிய இவற்றின் காரணமாகக் குற்றம் இழைப்பதற்கு அவர்கள் தயாராகுகிறார்கள். அவர்கள் உடல் நலப்பாதுகாப்பை சிறந்த முறையில் கவனிக்கவேண்டும். நல்ல சத்துள்ள உணவு அவர்களுக்கு அளிக்கப்படவேண்டியது முதல் கடமை.

இரண்டாவதாக, அவர்கள் தாங்கள் குற்றவாளிகள் என்பதை மறக்கும் 12-30
அளவு தாங்களும் சமுதாயத்திலே உள்ள பிற குழந்தைகளைப்போலவே p.m.
கருதப்படக்கூடிய வேண்டிய அளவு உற்சாகமான வாழ்வுக்கு வாய்ப்பு ஏற்படக்கூடிய அளவிற்கு, மிகுதியான விளையாட்டு, விரும்பக்கூடிய நிலையிலே மற்றவர்களுடன் கலந்து பழகக்கூடிய வாய்ப்பு, கடற்கரை போன்ற பொது இடங்களில் உலாவுதல், வெளி ஊர்களுக்குச் சென்று பல இடங்களைப் பார்வையிடுதல், முதலான இப்படிப்பட்ட வாய்ப்புகளை அவர்களுக்கு அளிக்கவேண்டும் நோயாளிகளுக்கு மருந்துக்குச் செலவு செய்வதைப்போல, இந்த மன நோயாளிகளான குழந்தைகளுக்குசற்று அதிகம் செலவு செய்தாவது இந்த மன நோயை மாற்றி அமைக்கவேண்டும். அப்படிப்பட்ட குழந்தைகள் வளரும் பள்ளிக்கூடங்களில் அவர்களி

டையே தராதர வேற்றுமை இருக்கிறது என்று எனக்கு முன்பு பேசிய நண்பர் பழனிசாமி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நல்ல மன நூல் ஆய்வாளரைவைத்து தரவேறுபாடுகள் செய்து குற்றம் செய்வதிலே மனம்படிந்துபடி இயல்பாகவே குற்றம் செய்பவர்கள், தவறி குற்றம் செய்பவர்கள் ஆகிய இரண்டு வகையார்களும் தனியாகப் பிரிக்கப் படவேண்டும். மனப்போக்குப்படி இயல்பாக குற்றம் செய்பவர்கள் தனியாக பிரிக்கப்பட்டு, மீண்டும் திருந்திய பின்னர், சற்று நல்ல மனப்போக்குள்ள திடீரென்று தவறு செய்தவர்களோடு சேர்த்துவைக்கப்பட்டலாம். **Habitual offenders** என்ற குறிக்கும் முறையிலே பழக்கத்தினால் குற்றம் செய்பவர்கள் சிலர். தவறி குற்றம் செய்பவர்கள் பலர். இரண்டு வகையினரும் ஒரே இடத்தில் அடைக்கப்படுகின்றார்கள். பழக்கமாகத் தவறு செய்கின்ற மனப்பான்மை திடீரென்று தவறு செய்பவர்களைத் தன் பக்கத்திலே இழுப்பதற்குக் காரணமாக இருக்கிறது. வழக்கமாகத் தவறு செய்பவர்களும், தவறி தவறு செய்பவர்களும் சேர்த்து வைக்கப்படாமல், அவர்கள் தனித்தனி நிலையில் வைக்கப்பட்டு இரண்டு வகையாரும் திருந்துகின்ற கட்டத்தில் ஒன்று சேர்க்கப்படலாமென்று நான் விரும்புகிறேன்.

மற்றென்று குற்றவாளிகள் பலதரப்பட்டவர்கள். சதாரணமான பீடி பிடித்தல் போன்ற குற்றம், பெற்றோர்கள் மறைவாக மது அருந்துவதால் அவர்களும் மது அருந்துகின்ற குற்றம், பெற்றோர்கள் தவறான ஒழுக்கம் உடையவர்கள் என்ற காரணத்தினால், அவர்கள் ஒழுக்கத்தை தாங்கள் மேற்கொள்ளாவிட்டாலும், சமுதாயத்தில் இவை சர்வ சாதாரணம் என்று கருதும் மனோ நிலை காரணமாகச் செய்யப்படும் குற்றம் ஆகிய மூன்றையும் கூர்ந்து பார்த்து, மேற்கூறியவாறு மிகச் சிறிய குற்றங்கள் புரியும் குழந்தைகள் தனி நிலையிலே, தனி முறையிலே வளர்க்கப்பட வேண்டும். பொதுவாக இவர்களுக்குப் பாட திட்டங்கள் அமைக்கும் நேரத்தில் இப்படிப்பட்ட தவறுகள் செய்கின்ற குழந்தைகளுக்கு மிகப் பெரிய தலைவர்கள் வழிகாட்டிகளுடைய வாழ்க்கை வரலாறுகள் ஏராள மாகப் போதிக்கப்படவேண்டும். பொதுவாகப் பள்ளிக்கூடங்களில் நல்ல பாடதிட்டங்கள் இருக்கின்றன என்று சொன்னாலும், பள்ளிக்கூட குழந்தைகளுக்குள்ள பாடதிட்டத்தில் உலக அறிவு முக்கிய மாகும். இப்படிப்பட்ட தவறிழைத்த குழந்தைகட்கு குற்றம் இழைத்த மனோநிலையில் மாற்றம் மிகவும் அவசியம். மனோ நிலையில் பக்குவம் ஏற்படுவதற்கு உலகத்தில் பிறந்த உத்தமர் பலரின் வாழ்க்கை வரலாறுகளை அவர்களுக்கு ஏராள மாக எடுத்துரைக்கவேண்டும். எனக்கு முன்பு பேசிய ஒரு சட்டமன்ற உறுப்பினர் புராணக்கதைகள், மதசம்பந்தமான கதைகள் சில சமயங்களில் தவறான கருத்துக்களை கொண்டிருப்பதை எடுத்துக் தெரிவிப்பதாக கூறினார். அம்மாதிரி தவறான கருத்துக்கள் உண்டாகும் என்று சந்தேகம் ஏற்படுமானால், அந்தப் புராணங்களை நீக்கிவிட்டு நல்லவை என்று கருதக் கூடியவற்றை மட்டும் சொல்லிக் கொடுக்கலாம். புராணக்கதைகளே கூடாது என்ற கருத்தை வலியுறுத்த நான் இதைச் சொல்லவில்லை. அந்த மனோ நிலையிலே உள்ள குழந்தைகள் எதைப் புரிந்துகொள்ளு வார்கள், எதைப் புரிந்துகொள்ளமாட்டார்கள் என்ற வேறுபாடு உணர்ந்து நல்ல நீதியை எடுத்துச் சொல்லக்கூடிய நூல்களை மட்டும் அவர்களுக்கு போதிக்கவேண்டும். அதிலும் சிறந்த தலைவர்களின் வாழ்க்கை குறிப்புகளை மிக அதிகமாகச் சொல்லித்தருவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தவேண்டும். தனி ஒரு பாடத் திட்டம் தேவை. சிறப்பு உணவு தேவை. சிறந்த நல் வாய்ப்பு தேவை. இவைகளெல்லாம் இருந்தால்தான் மனநோயால் விளையும் குற்றம் குறைந்து சிறந்த குடிமக்களாக அவர்கள் திகழமுடியும். இந்த பள்ளிகளின் பெயரை குழந்தை குண நலப் பாதுகாப்புப் பள்ளி என்று திருத்தி அமைக்கவேண்டுமென்ற பொதுக்கருத்தை தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பல கனம் அங்கத்தினர்கள் திருத்தப்பட்ட இந்த மசோதாவை மனப்பூர்வமாக வரவேற்று பேசினார்கள். அப்படி பேசும்பொழுது பல அரிய

5th September 1958] [Sri M. Bhaktavatsalam]

கருத்துக்களை தெரிவித்தார்கள். சில அடிப்படையான கருத்துக்களையும் வெளியிட்டார்கள். இந்த மசோதாவிலே அவர்கள் கண்ட குற்றங்களை யும் குறிப்பிட்டார்கள். குழந்தைகள் வளர்ச்சியில் இவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டு இந்த விவாதத்தில் பங்கு எடுத்துக்கொண்ட கனம் அங்கத்தினர்களுக்கெல்லாம் முதல் முதலாக என்னுடைய நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த சட்டம் பல ஆண்டுகளுக்குப் பிறகு திருத்த சட்டமாகக் கொண்டுவரப்படுவது பற்றி சொன்னார்கள். பல ஆண்டுகள் ஆயிற்று. ஆனால் இதுவரையிலே இந்தப் பிரச்னையில் கவனம் செலுத்தப்படாமல் இல்லை. குழந்தைகள் நம்முடைய அரிய செல்வம். அந்தக் குழந்தைகளை சரிவர பாதுகாப்பது நம்முடைய கடமையும், பொறுப்பும் நன்மையும் ஆகும் என்பதை நாம் எல்லோரும் உணர்கிறோம். அரசாங்கமும் இதில் கவனம் செலுத்திக் கொண்டு தான் வருகிறது. குழந்தைகள் தவறுதலாக நடந்துகொள்ளு கிறார்கள். அதற்குக் காரணம் இருக்கிற சூழ்நிலை என்பதையும் நாம் எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். சில குழந்தைகள் திக்கற்றவர்களாக இருக்கிறார்கள். வேறு சில குழந்தைகள் சூழ்நிலை காரணமாக சிற்சில குற்றங்களை, தவறுகளை, செய்கிறார்கள். குழந்தைகளை பராமரிப்பவர்கள் அவர்களுக்கேற்றவாறு தனியாக கவனம் செலுத்தவேண்டும் என்று ஒரு அறிய கருத்தும் தெரிவிக்கப்பட்டது. இதுபற்றி பொறுக்கு கமிட்டியிலும் நன்றாக கவனம் செலுத்தப்பட்டது. எல்லா குழந்தைகளும் ஒரே ஸ்தாபனத்தில் பராமரிக்கப்பட்டு வந்தன. ஆனால் இப்போதைய கருத்து திக்கற்ற குழந்தைகளை தனியாகவும் குற்றம் செய்து அதற்காக தண்டிக்கப்பட்ட குழந்தைகளை தனியாகவும் வைத்துபராமரிக்கவேண்டும். இவர்களுக்கு விசாரணை கூட தனித்தனியாக இருக்கவேண்டும் என்பது. இவைகளெல்லாம் பற்றி இப்பொழுது முடிவு செய்யப்பட்டிருக்கிறது, தனி கோர்ட்டுவைக்கவேண்டுமென்று கூட சிலர் யோசனை கூறினார்கள், வற்புறுத்தினார்கள். அவ்வாறெல்லாம் தனி கோர்ட்டு ஏற்படுத்துவது என்றால், அதற்கு இன்னும் அதிகமாக செலவு ஆகும், அதற்கு இப்பொழுது அவசியமில்லை என்பதினால், அந்த யோசனை ஒப்புக்கொள்ளப்பட வில்லை. கடைசியில் பேசிய கனம் அங்கத்தினர் குறிப்பிட்டதுபோல் குழந்தைகளின் மனோநிலை கவனிக்கப்படவேண்டும். இதை நன்றாக அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. ஒரு சிறந்த மனோநிலை ஆசிரியருடைய சேவையைக்கூட இன்று அரசாங்கம் பயன்படுத்திக்கொண்டு வருகிறது. இம்மாதிரி ஸ்தாபனங்களையெல்லாம் இந்த நிபுணர் பார்வையிட்டு, இந்த ஸ்தாபனங்களில் உள்ள மேற்பார்வையாளர்களுக்கு சில பயிற்சிகளையும் அளிக்கிறார். குற்றம் செய்கின்றவர்களைக்கூட, மனோநிலைக்கு ஏற்றவாறு, சூழ்நிலைக்கு ஏற்றவாறு, பிரித்துவைத்துக் கொள்ளுவது நலம் என்ற கருத்தை நான் வரவேற்கிறேன். அதை எவ்வளவு தூரம் அமுலுக்குக் கொண்டு வரமுடியுமோ, அந்த அளவுக்கு அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கம் கவனம் செலுத்தும். இன்று இந்தக் குழந்தைகளை பராமரிப்பதற்கு இடம் போதாது என்று சொன்னார்கள். அது உண்மை தான். நிதி நிலைமைக்கு ஏற்றவாறு எவ்வளவு தூரம் இதை கவனிக்கமுடியுமோ, அந்த அளவு அரசாங்கம் இதை கவனிக்கும். இதனுடைய அவசியத்தை அரசாங்கம் உணராமல் இல்லை. அரசாங்கம் நடத்தும் ஸ்தாபனங்களை எவ்வளவு தூரம் விரிவுபடுத்த முடியுமோ அவ்வளவுக்கு முயற்சி எடுத்துக்கொள்ளப்படுகிறது. தனிப்பட்டவர்களும், மற்றவர்களும் நடத்தும் ஸ்தாபனங்களுக்கும் எவ்வளவு தூரம் வசதிகளை பெருக்கக்கூடுமோ, ஆதரவு அளிக்கக்கூடுமோ, அந்த வகையிலும் கவனம் செலுத்தப்படுகிறது.

இந்த மசோதாவே போதாது என்ற கருத்து வெளியிடப்பட்டது, பொதுவான சில கருத்துக்களும் வெளியிடப்பட்டன. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சிறு வயதிலே புகை பிடிப்பது பற்றி இந்த மசோதாவில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னார்கள். இதுபற்றி பொறுக்குக் கமிட்டி விவாதித்தது. ஆனால் "ஜுவினைல் ஸ்மோகிங்" என்பது தனி விஷயம், அதுபற்றி தனியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமே தவிர, அதை இந்த மசோதாவில் புகுத்துவது சரியல்ல என்ன முடிவான

அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. குழந்தைகள் புகை பிடிப்பது தவறு என்பதைப் பற்றி இங்கே பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அதை எப்படி தவிர்ப்பது என்பதுதான் நாம் கவனிக்கவேண்டிய விஷயம். பெற்றோர்களே ருசித்து புகை பிடிப்பதால், அவர்கள் வீட்டு குழந்தைகளை எப்படி புகை பிடிக்காமல் தடுப்பது என்பது தான் பிரச்னை. தகப்பனார் பீடி குடிக்கும் பழக்கம் உள்ளவராக இருக்கிறார். சில இடங்களில் பெண்கள் கூட குடிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். அப்படியிருக்கும் பொழுது சட்டம் போட்டு குழந்தைகளை தடுப்பதுதான் சிரமம். பெற்றோர்கள் ருசித்து, அனுபவித்து குடிக்கும்பொழுது, தவறு என்று தெரிந்தாலும் குழந்தைகள் குடிப்பதை தவிர்க்க முடியவில்லை. இதற்காக நாம் அவசரப்பட்டு சட்டம் இயற்றிவிட்டால் மட்டும் போதாது. அதை நிறைவேற்றுவதில் எத்தனையோ கஷ்டங்கள் இருக்கின்றன. இதையெல்லாம் முக்கியமாக பெற்றோர்கள் கவனித்துக்கொள்ளவேண்டும். எவ்வளவுதான் சட்டம் செய்தாலும், எவ்வளவு ஸ்தாபனங்கள் ஏற்படுத்தினாலும், பெற்றோர்கள் தங்கள் பொறுப்பை, சொந்த நிலைமையை உணர்ந்து குழந்தைகள்மீது கண்காணிப்பு செலுத்தவில்லை என்றால், எந்தச் சட்டமும் போதுமான பலன் அளிக்காது.

எதிரே உட்கார்ந்திருக்கும் கனம் அங்கத்தினர்கள் பிச்சை எடுப்பதை பற்றி சொன்னார்கள். இது வருந்தத்தக்க நிலைமை தான். நான் வட நாட்டிலே அவ்வளவு கூர்ந்து கவனிக்கவில்லை. நம் எல்லோருக்கும் மிகுந்த வருத்தத்தை அளிக்கக்கூடியது, பிச்சைக்காரர்கள் நம்முடைய நாட்டிலிருந்து படையெடுத்து வட நாட்டிற்குப் போய் அங்கே ஸ்தாபனம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதுதான். இதுபற்றி நான் முன்பு ஒருமுறை குறிப்பிட்டிருக்கிறேன். அங்குள்ள பிச்சைக்காரர்கள் நல்ல முறையில் வாழ்க்கை நடத்துவதற்கு டில்லியில் ஒரு கூட்டுறவு சங்கம் ஸ்தாபித்துக்கொடுப்பதற்கு ஒருவர் ஏற்பாடு செய்தார். ஆனால் நம்முடைய நாட்டிலிருந்து அங்கு சென்று பிச்சை எடுப்பவர்கள் "உங்களுக்கு என் இந்தத் தொந்தரவு, எங்களை விட்டுவிடுங்கள், நாங்கள் எங்கள் தொழிலை நடத்திக்கொண்டு வருகிறோம், கூட்டுறவு சங்கம் எங்களுக்கு சரிப்பட்டு வராது" என்று சொல்லி விட்டார்கள். பிச்சை எடுப்பதற்காக அபராதம் போடுகிறார்கள். ஆனால், பிச்சையெடுத்தே சிலர் பணம் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பிச்சை எடுப்பது நல்ல பயன் அளிக்கக்கூடியதாக இருக்கிறது. அவர்களுக்கு வேறு தொழில் அவசியமில்லை என்று சொல்லுகிறார்கள். சிலர் இந்த பிச்சை எடுக்கும் தொழிலை விடுவதற்கு தயாராக இல்லை. இந்த நிலையை நாம் அகற்றத்தான்வேண்டும். பிச்சை எடுப்பதைத் தடுப்பதற்கு சட்டம் இருக்கிறது. சட்டம் அமுல் நடத்தப் படுகிறது. பிச்சைக்கார விடுதிகள் இருக்கின்றன. நகரசபைகளுக்கும் "ஆங்காங்கு **'Beggar Home'** ஏற்படுத்துங்கள், அதற்கு அரசாங்கம் வேண்டிய ஆதரவு அளிக்கும்" என்று சொல்லியிருக்கிறோம்.

12.40 a.m. இதற்கெல்லாம் பொதுஜன அபிப்பிராயம் திரட்டப்பட வேண்டும். பிச்சை எடுக்கும் நிலைமை மிக மோசமானதுதான் என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் பிச்சை எடுப்பது இல்லாமை காரணத்தினால் அல்ல. கனம் அங்கத்தினர்கள் பார்த்திருப்பார்கள், பிச்சை எடுக்க வில்லை என்றால் சிலருக்கு வேறு வேலை கிடையாது. வேறு வேலை இல்லாமல், பிச்சை எடுப்பதால் நல்ல வருமானம் வருகிறது. ஆகவேதான், "இவர்கள் இப்படி இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டும்—குழந்தைகளை பிச்சை எடுப்பதற்கு உபயோகப்படுத்த, பயன்படுத்த பார்க்கிறார்களே அதைத் தடுக்க வேண்டும். குழந்தைகளை அதற்குப் பயன்படுத்தக்கூடாது. அதற்கு நாம் இடங்கொடுக்கக்கூடாது" எனவேதான் இங்கே சிலவற்றை குற்றமாக, மசோதாவில் குறிக்கப்பட்டிறுக்கிறது.

மற்றொன்று, போதைப் பொருள்கள், லாகிரி வஸ்துக்கள் இவைகளை கையாளுபவர்கள் குழந்தைகளைக் கொண்டு காரியங்களைச் செய்யக் கூடாது. அது அவர்களைக் கெடுத்துவிடும். பெற்றோர்கள் அல்லது அதில் ஈடுபட்டுள்ளவர்கள் பக்கத்திலேயே இருப்பதால் இவர்களுக்கும், நாமும்

5th September 1958] [Sri M. Bhaktavatsalam]

குடிக்கலாம் என்ற எண்ணம் வரும். இவ் விஷயங்களில் பெற்றோர்கள் மிக கவனமாக இருக்க வேண்டும். தெரிந்தோ, தெரியாமலோ, சட்டம் விளங்கியோ, விளங்காமலோ திருட்டுத் தனமாகவோ, வெளிப்படையாகவோ குழந்தைகளை ஈடுபடுத்தினால் அது ஒரு தனிக் குற்றம். தண்டனைக்கு உள்ளாவார்கள். இதைப்பற்றியதுதான் இந்தப் பிரிவு. பிரிவின் நோக்கம் அதுதான்.

வேறொன்று பெண்களைப்பற்றியது. கள்ளக் கடத்தல் பற்றியது. இதைப்பற்றி பல அங்கத்தினர்கள் விரிவாகச் சொன்னார்கள். கனம் அங்கத்தினர் ஸ்ரீ சட்டநாதக் கரையாளர்கூட குறிப்பிட்டார்கள். இதற்கெல்லாம் பெண்களை காலாகாலத்தில் கல்யாணம் பண்ணிக் கொடுத்து விடுவதுதான் சரியான பரிகாரம், பாதுகாப்பு. சட்ட பூர்வமாக வயது கல்யாணம் செய்வது நல்லது என்கிற எண்ணம் பரவி வருகிறது. நாம் பிறப்பு குறைய வேண்டும் என்று ஆவல் கொண்டு வருகிறோம். பிறப்பைக் குறைக்க கொஞ்சம் வயது அதிகமான பிறகு கல்யாணம் செய்வது நல்லது. வயது கடந்து கல்யாணம் செய்ய வேண்டும் என்கிறபோது, 20 அல்லது 25 வயதுக்கு மேல் கல்யாணம் செய்வதானால், அதுவரை அந்தப் பெண்களைக் காப்பாற்றுவது பெற்றோர்களுக்குப் பெரிய பொறுப்பு. வசதி இருப்பவர்களுக்கே பெரிய பொறுப்பு ; இல்லாதவர்களுக்கு மிகக் கடுமையான பொறுப்பு அது. ஆகவே வசதிக் குறைவாக இருப்பவர்கள், தங்கள் கஷ்டத்தைப் பயன் படுத்தப் பார்க்கிறார்கள். இதற்குக் கடுமையான ஒரு சட்டம், ஒரு நிபந்தனை தேவைப்படுகிறது. அதைதான் இந்த 36-எச் என்ற பிரிவு செய்கிறது. நான் சொல்லுவேன், இதையெல்லாம் செய்யும் அதிகாரம் அரசாங்க அதிகாரியிடம் அல்ல, ஆனால் கோர்ட்டுக்கு கொடுக்கப்படுகிறது. இம்மாதிரி தவறுகள், கோர்ட்டுக்குத் தெரிந்தால், நடவடிக்கை எடுப்பார்கள். இதில் ஆட்சேபிக்க இடம் இல்லை, அவசியமும் இல்லை. இந்தப் பிரிவு அவசியமானது, அடிப்படையானது. ஆகவே இதை எடுத்துவிட வேண்டுமென்பதை ஒப்புக்கொள்ள முடியாது.

அதேமாதிரி, பல கனம் அங்கத்தினர்கள் அபிப்பிராயங்களை சொன்னார்கள். பத்திரிகைகளைப்பற்றியும், ஸினிமாக்களைப்பற்றியும் சொன்னார்கள். கதைகளைப்பற்றிச் சொன்னார்கள். புராணங்களைப்பற்றிச் சொன்னார்கள். புராணக் கதைகளைப்பற்றிச் சொன்னார்கள். நாடகங்களைப்பற்றி, புராண நாடகங்கள், சமூக நாடகங்கள் இவற்றைப்பற்றிச் சொன்னார்கள். பல்வேறு கருத்துக்களைச் சொல்லி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுப்படையாகச் சொல்லுவதில் பயன் இல்லை. எல்லாவற்றையும் அடியோடு அடைக்க முடியாது. எழுத்துப் பூட்டுப் போட முடியாது. பேச்சுப் பூட்டு போட முடியாது. பத்திரிகைகளில் ஆபாசமாக எழுதுகிறார்கள் என்றால், அதைப் படிக்க பத்திரிகை ரசிகர்கள் இருக்கிறார்கள். இதற்கெல்லாம் சட்டம் போட முடியாது. பத்திரிகையில் " பருவப் பெண் " என்று கொட்டை எழுத்தில் போட்டால், அது சிலர் கண்ணைக் கவருகிறது. விலை கொடுத்து வாங்குகிறார்கள். படிக்கிறார்கள். இதற்கெல்லாம் சட்டம் செய்ய முடியாது. இதை யெல்லாம் தடுக்க பொதுஜன அபிப்பிராயம் திரட்டப்பட வேண்டும்.

மற்றொரு திருத்தத்தை கனம் கரையாளர் அவர்கள் சொன்னார்கள், " மசோதாவில், பேர், ஊர் மட்டும் போடக்கூடாது என்று இருக்கிறது, அது போதாது. அடியோடு போடக்கூடாது " என்று சொன்னார்கள். மற்ற அங்கத்தினர்களும் அந்தக் கருத்தைத் தெரிவித்தார்கள். அது வெகுவாக பத்திரிகை சுதந்திரத்தில் தலையிடுவதாகும். அதன்மீது ஆட்சேபங்கள் ஏற்படும். அத்தகைய நிலைமையை ஏற்படுத்த முடியாது. (ஸ்ரீ கே. அன்பழகன் : ' decent language) உபயோகித்தல் எனலாம். Decent language உபயோகிக்க வேண்டும் என்று போடலாம் என்கிறார்கள். ஆனால் இப்பொழுதும், obscene -ஆக இருந்தால், கோர்ட்டு நடவடிக்கை எடுக்கலாம். எடுக்கிறார்கள். ஒரு சொல் அல்லது குறிப்பு ஆபாசம் என்று யார் சொல்லுவது என்ற பிரச்சினை ஏற்படுகிறது. அதற்கு

கோர்ட் இருக்கிறது. அதற்காகவெல்லாம்தான் குழந்தைகளைப்பற்றி எழுதும்போது பேர், ஊர் போடக் கூடாது என்று போட்டிருக்கிறோம். அதற்குமேல் சட்டத்தை இன்னும் கடுமையாக ஆக்குவது சரியல்ல.

திக்கற்றவர்கள், அப்படிப்பட்ட குழந்தைகளைப் பராமரிக்கும் விஷயத்தில் தேவஸ்தானங்கள், மடங்கள் உதவி செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு ஆட்சேபம் ஒன்றும் இல்லை. ஏற்கனவே சிறிது அவர்களும் செய்து வருகிறார்கள். ஆனால் அதை இன்னும் அதிக அக்கறையோடு செய்ய வேண்டும் என்றால், அந்தந்தப் பிராந்தியத்தில் உள்ளவர்கள் அதிக அக்கரை கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொண்டால் அந்தப் பணி சீரிய முறையில் நடைபெறும்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ வேதரத்தினம் பிள்ளை சொன்னார்கள். மத மாற்றத்திற்கு குழந்தைகள் உட்படுகிறார்கள், அதைத் தடுக்க வேண்டும் என்று. அது தவிர்க்கப்பட வேண்டியதுதான். ஆனால், இப்பொழுதும், குழந்தை பிராயத்தில் செய்யப்படும் எந்தத் தவறும், கட்டாயத்தால் செய்யப்பட்டது என்று நடவடிக்கை எடுக்கலாம். அதற்குத் தனிச் சட்டம் தேவையில்லை. மேலும் இந்த விஷயங்களில் அந்தந்த மதப் பற்றுள்ளவர்கள், சமயப் பற்றுள்ளவர்கள் சேர்ந்து, அதற்கென்று ஸ்தாபனம் வைக்கலாம். அப்படியிருந்தால், ஒரு சமயத்தில் பற்றுள்ள குழந்தைகளை மத மாற்றத்திலிருந்து தவிர்க்க முடியும். சிலருக்கு அக்கரை இருக்கிறது. மற்றவர்களுக்கு அவ்வளவு சிரத்தை இருப்பதில்லை. எல்லோரும் குழந்தைகளை சீராக வளர்க்க முன்வர வேண்டும் என்பதுதான் நம் ஆவல்.

ஜூவனைல் கோர்ட்டுகள் அதிகமாக இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். பல இடங்களில் இல்லை என்றும் சொன்னார்கள். அந்த விஷயத்தைக் கவனித்து வருகிறோம்.

கனம் அங்கத்தினர் லாஸர் "**commit**" என்பதை "**placed**" என்று மாற்றியிருப்பது சரியன்று, ஏன் அப்படிப் போட்டார்கள் என்று கேட்டார்கள். லெக்ஸிகனில் இல்லை என்று எடுத்துக்காட்டினார்கள். நாம் ஒரு ஸாவரின் லெஜிஸ்லேடிவ் பாடி. "கமிட்" என்ற ஒரு புதுப் பதத்தை ஏன் நாம் பிரயோகிக்கக்கூடாது. நாலுபேர் பிரயோகித்தால் அது தானாக நாளாவட்டத்தில், லெக்ஸிகனில் வருகிறது, என்ஸைக்ளோபேடியாவில் வருகிறது. ஆகவே அதைப்பற்றி யெல்லாம் கவலைப்பட வேண்டாம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

12-வது பிரிவில் "**otherwise**" என்ற வார்த்தையை எடுத்துவிட வேண்டும் என்று சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். அது நல்லது என்று நான் கருதுகிறேன். இதைக் கவனித்துக்குறிப்பிட்ட அங்கத்தினர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

இந்தக் குழந்தைகளை அனுப்பும் நிலையம் ஜெயிலாகக் கருதப்படக் கூடாது. இது முக்கியமான, அடிப்படையான கருத்து. சில ஆண்டுகளாகவே ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து இது. அதன் பேரிலேயே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அவைகளையெல்லாம் பரிசீலனை செய்து, இன்னும் இந்தக் குழந்தைகள் பராமரிப்பில் எதையெல்லாம் கவனிக்க முடியுமோ, அவைகளை யெல்லாம் கவனித்து சர்க்கார் செய்வார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

12–30 p.m 'ப்ளேயிங்' என்று இருப்பதைப்பற்றி, அதாவது குழந்தைகள் விளையாடுவதைப்பற்றி, குறிப்பிட்டார்கள். டான்சிங் இல்லாமல் ப்ளேயிங் இருக்கலாம். வெறும் டான்சிங்கும் இருக்கலாம். அது அபிநயம் ஆகாது. க்ளாஸ் 12-ல் சொல்லியிருக்கிறபடி ப்ளேயிங் இருக்க வேண்டும். ப்ளேயிங் என்றால் எல்லாம் சேர்ந்து இருக்கிறது. ஆகையால் கனம் அங்கத்தினர்களுக்கு அதைப்பற்றி கவலை வேண்டியதில்லை.

SRI K. ANBAZHAGAN : அவைத் தலைவர் அவர்களே, ஆன் பாயிண்ட் ஆப் ஆர்டர். சட்ட மன்றத்தில் பத்திரிகையை படித்துக்கொண் டிருக்கலாமா ?

DEPUTY SPEAKER : I did not notice it.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பல அங்கத்தினர்கள் பல விதிகளைப்பற்றி குறிப்பிட்டார்கள். கனம் டேனியல் அவர்கள் சில பிரிவுகளைப்பற்றி தன்னுடைய ஆட்சேபனையைத் தெரிவித்தார். அவை களைப்பற்றியும் நான் முன்பே தெரிவித்து விட்டேன். அவைகளைப்பற்றி இன்னும் ஆட்சேபிப்பதற்கு இடம் இல்லை. இந்தப் பிரிவுகள் அவசியம் வேண்டியிருக்கும் என்று கருதித்தான் அவைகள் எல்லாம் போடப் பட்டிருக்கின்றன. மற்றப்படி கனம் அங்கத்தினர்கள் இந்த மசோதாவுக்கு சாதாரணமாக ஆதரவு தந்து பல யோசனைகளைத் தெரிவித்ததற்கு நான் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொண்டு இந்த மசோதாவை கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : I shall put the motion to vote now. The question is—

"That the Madras Children (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 10 of 1958), as amended by the Joint Select Committee be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 11 were put and carried.

Clause 12.

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

"In the proposed new clause (*dd*) of section 29 (1) of the principal Act, *omit* the words 'or otherwise'."

The amendment was duly seconded.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I accept the amendment.

DEPUTY SPEAKER : The question is—

"In the proposed new clause (*dd*) of section 29 (1) of the principal Act, *omit* the words 'or otherwise'."

The amendment was put and carried.

Clause 12, as amended, was put and carried.

Clauses 13 to 16 were put and carried.

Clause 17.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I move—

"In the proposed new section 35-B, *for* the words 'after discharge or release, under the supervision of a probation officer', *substitute* the words 'after discharge or release, under the supervision of a probation officer or in an after-care organization."

DEPUTY SPEAKER : The question is—

"In the proposed new section 35-B, *for* the words 'after discharge or release, under the supervision of a probation officer', *substitute* the words 'after discharge or release, under the supervision of a probation officer or in an after-care organization."

The amendment was put and carried.

Clause 17, as amended, was put and carried.

Clause 18 was put and carried.

Clause 19.

SRI K. SATTANATHA KARAYALAR : Sir, I move—

"*Delete* the proposed new section 36-H."

SRI M. JAGANNATHAN : Sir, I second it.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தத் திருத்தத்தை நான் ஏற்றுக்கொள்வதற்கு இல்லை. இதற்குக் காரணம் நான் முன்பே விளக்கி இருக்கிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த திருத்தத்தைக் கொடுத்ததற்கு ஒரே ஒரு காரணம்தான் உண்டு. அதாவது கோர்ட்டு விசாரிக்க வேண்டாம் என்று சொல்ல நான் முன் வரவில்லை. பதினாறு வயதுக்குட்பட்ட பெண் தவறுதலாக நடந்து கொண்டால் அல்லது அவள் தவறுதலாக நடந்து கொள்வதற்கு யாராவது உடந்தையாக இருந்தால் அல்லது அவளைப்பற்றி சந்தேகப்பட்டால் அவளைக் கோர்ட்டுக்கு இழுப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளலாம். அதற்கு வேண்டிய மனுவையும் செய்து கொள்ளலாம். பெற்றோர்களுக்குத் தெரியாமலோ அல்லது தெரிந்தோ கோர்ட்டுக்கு மனுச் செய்து கொண்டு இழுக்கலாம். யாராவது கோர்ட்டுக்கு மனுச் செய்து கொள்ளலாம் என்று இருக்கிறது. இதை வேண்டாதவர்கள் தவறுதலாக பயன்படுத்திக்கொள்வார்கள். அதாவது "**Misuse**" என்று சொல்லுவார்களே அப்படி பயன்படுத்திக்கொள்ளலாம். அதனால் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் போய்விடுகிறது. பக்கத்தில் இருப்பவர்கள் ஏதாவது விரோதத்தினால் அப்படி மனுச் செய்து கொள்ளலாம். ஏதாவது பெண்களுடைய பெற்றோர்கள் அந்த பெண்ணை கவனிக்காமல் இருந்தால் அப்படி கோர்ட்டுக்கு இழுப்பதற்கு வழி இருக்கிறது. அதற்கு சந்தர்ப்பம் இருப்பதால் அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்பதற்காகத்தான் நான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். சில பெண்கள் பெற்றோர்களுடைய பாதுகாப்பில் இல்லாமல் இருக்கலாம். அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கும் முறையில் இந்தத் திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி இந்த திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

SRI N. K. PALANISAMI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சிறுவர்களுக்கு ஏதாவது கெடுதல் செய்தால் ஏற்கெனவே அவர்கள் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு க்ரிமினல் ப்ரொஸீஜர் கோடில் விதி இருக்கிறது. அதைப் போலவே இதிலும் "இல் ட்ரீட்" என்று இருக்கிறது. யாராவது வேண்டுமென்றாலும் வேண்டாமென்றாலும் மற்றொருவர் பேரில் குற்றம் சாட்டலாம்.

" . . . a child or young person wilfully assaults, ill-treats, neglects, abandons or exposes him or causes or procures him to be assaulted, ill-treated, neglected, abandoned, or exposed or neglects.

5th September 1958] [Sri N. K. Palanisami]

in a manner likely to cause unnecessary mental or physical suffering . . .'' என்று இருக்கிறது. ஆகவே கனம் அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன், இவைகளை எப்படி "ப்ரூவ்" பண்ணுகிறது என்று. "நெக்லெக்ட்" என்று சொல்வதை எப்படி "ப்ரூவ்" பண்ணுவது? "ப்ரூவ்" பண்ணுவதற்கு வழி இல்லாமல் இருந்தால் என்ன செய்வது ?

SRI A. GOVINDASAMY : அது கிளாஸ் 36-எச். இது அல்ல.

(உடனே கனம் பழனிசாமி உட்கார்ந்து விட்டார்.)

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல் யாராவது 'கம்ப்ளெயிண்ட்' கொடுத்தால்தான், ப்ரைமா பாசி கேஸ் இருந்தால்தான் அதை கோர்ட் எடுத்துக்கொள்ளும். கேஸ் இருக்கிறது என்று கோர்ட் கருதினால்தான் அதற்கு மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். கம்ப்ளெயிண்ட் கொடுத்தவுடனேயே கோர்ட்டுக்கு வர வேண்டும் என்பது இல்லை. அதனால் இந்த திருத்தம் அவசியம் என்று நான் கருதவில்லை. சில சமயங்களில் குழந்தைகளை பெற்றோர்கள் கவனிக்காமல் இருக்கலாம். அந்த சூழ் நிலையில் பெற்றோர்கள் இருந்தால் அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் பிரிவு சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த விதியை அப்படியே ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

*SRI K. ANBAZHAGAN : துணைத் தலைவர் அவர்களே யார் குற்றம் சாட்டினாலும் அவர் கோர்ட்டின் முன் கொண்டு வரப்பட வேண்டும் என்று இருப்பதை விட, சட்டசபை உறுப்பினர்களோ, கவுன்சிலர்களோ அல்லது அப்படிப்பட்ட தகுதியுடையவர்கள் குற்றம் சாட்டுவதன் பேரில் அந்தக் குற்றச்சாட்டை கோர்ட் விசாரிப்பதற்கென்று ஒரு தகுதி நிர்ணயிக்கப்படுவது நல்லதல்லவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி, மேற்கொண்டு விதிகள் அமைக்கும்போது இது கவனிக்கப்படும். ஆனால் தகுதியை நிர்ணயிப்பது தான் சிரமம். அதுவும் சட்டசபை அங்கத்தினர்கள் மீது இந்தப் பாரத்தைப் போடக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து.

SRI A. GOVINDASAMY : தவறான அல்லது உண்மைக்கு மாறான கேஸை கோர்ட்டுக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள் என்று தெரிந்தால் அப்படி விண்ணப்பித்துக் கொண்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விதி இருந்தால்தான் தவறான கேஸ்கள் கோர்ட்டுக்கு கொண்டு வரப்படாமலிருக்கக்கூடிய பாதுகாப்பு இருக்கும். அதையாவது மந்திரி அவர்கள் சேர்த்துக்கொள்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது இந்தச் சட்டத்திலே நான் சேர்த்துக்கொள்வதற்கில்லை. இதைப்பற்றி விதிகளிலே என்ன என்ன பாதுகாப்பு அளிக்கப்படவேண்டுமோ அதை அளிக்க முடியும்.

DEPUTY SPEAKER : The question is—

"*Delete* the proposed new section 36-H."

The amendment was put and lost.

Clause 19 was put and carried.

Clauses 20, 21 and 22 were put and carried.

Clause 23.

DEPUTY SPEAKER : The motion is—

"That clause 23 do stand part of the Bill."

SRI K. SATTANATHA KARALAYAR : Mr. Deputy Speaker, Sir, I move the amendment standing in my name, namely—

"In the proposed new section 39-D, in sub-section (1) the words 'disclose the name, address or school or any other particulars calculated to lead to the identification of the child or young person nor shall any picture of any such child or young person' and the provisos to the above sub-section be omitted."

SRI M. JAGANNATHAN : I second the amendment, Sir.

DEPUTY SPEAKER : Amendment moved—

"In the proposed new section 39-D, in sub-section (1), the words 'disclose the name, address or school or any other particulars calculated to lead to the identification of the child or young person nor shall any picture of any such child or young person' and the provisos to the above sub-section be omitted."

SRI K SATTANATHA KARAYALAR : உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தத்தை ஒப்புக்கொண்டால் பத்திரிகைகளுடைய சுதந்திரத்திற்குப் பங்கம் விளையும் என்று மந்திரி அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், பத்திரிகை தர்மம் என்பதே இல்லாத சில பத்திரிகைகளும் நாட்டிலே இருக்கத்தான் செய்கின்றன. இது தொத்து வியாதி மாதிரி ஒரு பத்திரிகையிலிருந்து அடுத்த பத்திரிகைக்குப் பரவுகிறது. இதை அவசியம் தடுத்துத்தான் ஆகவேண்டும். அதுபோன்று இளம் குற்றவாளிகளைப்பற்றி செய்திகளையும் இளம் குற்றவாளிகள் வழக்கு சம்பந்தமாக கோர்ட்டிலே வரும் செய்திகளையும் அவர்கள் பிரசுரிக்காமலிருப்பது நாட்டுக்கும் நன்மை பயக்கும் இளம் குற்றவாளிகளைக் குற்றம் செய்ய வேண்டுமென்று தூண்டாமலும் இருக்கும். அந்த அடிப்படையிலே இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு மிகப் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

*SRI K. ANBAZHAGAN : துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகைகளிலே வருகிற செய்திகளை இளம் குழந்தைகள் படிக்கின்ற காரணத்தினாலே, அது போன்ற தவறுகளைத் திரும்பச் செய்வதற்கு அந்தச் செய்திகள் தூண்டுகோலாக இருக்கின்றன. மிகப் பெரியவர்கள் தவறு செய்கின்ற போது, அதுபற்றிய செய்திகளைக் குழந்தைகள் படித்தால் அது பெரியவர்கள் செய்கிற காரியம் என்று விதிவிலக்காகவாவது கருத -இடம் இருக்கிறது. ஆனால், அவர்களைப் போன்ற சிறுவர்கள், சிறுமியர்கள் செய்து விடுகிற தவறு சம்பந்தமான செய்திகளைப் பத்திரிகையில் படிக்கும் போது, முதலிலே மற்றவர்கள் எதிரிலே குற்றம் என்று எண்ணிப் பேசினாலும், தனித்திருக்கும் போது அந்த எண்ணம் உள்ளத்தின் ஆழத்திலே வேலை செய்து கொண்டிருந்து கடைசியாக அத்தகைய குற்றங்களைச் செய்வதற்கு அதுவே தூண்டுகோலாகிறது. எனவே, சில பத்திரிகைகளே இளம் குற்றவாளிகளின் எண்ணிக்கையைப் பெருக்கக் காரணமாகி விடுகின்றன. எனவே இளம் குற்றவாளிகளின் எண்ணிக்கையை மிகுதிப் படுத்தக்கூடாது என்ற நோக்கத்தோடு அப்படிப்பட்ட செய்திகளைப் பத்திரிகைகள் வெளியிடக்கூடாது என்ற கருத்தை உண்மையாகவே இந்த

5th September 1958] [Sri K. Anbazhagan]

அரசாங்கம் மேற்கொள்ளுமானால், அது பத்திரிகைகளுடைய ஜனநாயக உரிமையைப் பறிப்பதாகாது, மக்களுடைய ஜனநாயக உரிமையைப் பாதுகாப்பதாகும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்தத் திருத்தப் பிரேரணையை ஆதரித்த கனம் அங்கத்தினருடைய கவலையை நான் பாராட்டுகிறேன். இருந்தாலும், அடியோடு ஒரு செய்தியைப் போடக்கூடாது என்று சட்டம் செய்வது பத்திரிகைச் சுதந்திரத்திற்கு உகந்தது அல்ல என்றுதான் நான் கருதுகிறேன் " பெயர் போடாமல் போட்டால் " என்று இதிலே ஒரு நிபந்தனை இருக்கிறது. பெயர் போடாமல் வெளியிட்டால் அவ்வளவு தூரம் மனதைக் கெடுக்காது. ஆனால், பரிபூரணமாகப் போடாமலிருந்தால் நலம்தான் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், பத்திரிகைகளுடைய கண்ணோட்டத்தோடு பார்த்தால், தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு செய்தியை அடியோடு போடக்கூடாது என்று சொல்வது அவ்வளவு ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல.

SRI K. ANBAZHAGAN : கனம் அமைச்சர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். குழந்தைகள் குற்றங்கள் சம்பந்தப்பட்ட வரையில், வெளியார் அறியாதவாறு " இன் காமிரா " என்ற முறையில் தனியாக விசாரணை செய்வதற்கான பாதுகாப்பு அளிக்க அமைச்சர் அவர்கள் வழி செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி விதிகள் போடும் போது கவனிக்கலாம்.

DEPUTY SPEAKER : The question is—

" In the proposed new section 39-D, in sub-section (1), the words ' disclose the name, address or school or any other particulars calculated to lead to the identification of the child or young person nor shall any picture of any such child or young person ' and the provisos to the above sub-section be omitted."

The amendment was put and lost.

Clause 23 was put and carried.

Clauses 24 and 25 and the Schedule were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Deputy Speaker, I move—

" That the Madras Children (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 10 of 1958), as amended be passed."

DEPUTY SPEAKER : The question is—

" That the Madras Children (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 10 of 1958), as amended be passed."

The motion was put and carried and the Bill as amended was passed.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 9 a.m. on Monday, the 8th September 1958.

The House then adjourned.

VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules, orders and notifications.

112. *Notification issued with G.O. Ms. No.* 2204, *Home, dated 4th August* 1958, *amending Appendix I of the Madras Children Rules*, 1940. [*Laid on the table of the House under section* 44 (3) *of the Madras Children Act*, 1920, *Madras Act IV of* 1920.]

113. *Notification issued with G.O. Ms. No.* 1458, *Home, dated 31st May* 1958, *amending certain Rules of the Madras Cinemas (Regulation) Rules*, 1957, *published with the Home Department Notification S.R.O. No. A*-701 *of* 1957, *dated 30th January* 1957. [*Laid on the table of the House under section* 10 (3) *of the Madras Cinemas (Regulation) Act*, 1955 (*Madras Act IX of* 1955).]

B. Reports and other papers.

31. *Statement III showing action taken by Government on Assurances, promises and undertakings given during the First Second and Third Sessions*, 1957–58, *of the Madras Legislative Assembly.*

APPENDIX I.

[Vide answer to short notice question No. 1 asked by Sri P. G. Karuthiruman at the meeting of the Legislative Assembly held on 5th September 1958, page 218 supra.]

Statement of events relating to the strike in " The Hindu ", Madras.

On the 29th of July 1958, the Management of " The Hindu " office dismissed one Sri Balasundaram, lino-operator, who is also the Vice-President of the Hindu Office and National Press Employees' Union. The case of the management was that Sri Balasundaram refused to obey orders relating to change of shift. The case of the workers was that the change of shift was illegal being contrary to the Industrial Disputes Act and that the dismissal was an act of victimisation for trade union activities.

About 460 workers of " The Hindu " struck work at 9 p.m. on the 30th July as a protest against this dismissal, which they alleged was a case of victimisation for trade union activities.

30th July 1958.—On the night of July 30th, the strikers assembled in groups in front of " The Hindu " Office with the object of preventing the loyal workers from going in for work. Information about this was given to the police at about 9-30 p.m. and a party of police rushed to the scene. At about 11-15 p.m. the strikers obstructed a van belonging to " The Hindu " Office bringing in loyal workers, beat up the driver, caused minor damage to the vehicle and indulged in stone-throwing. They also threw brickbats and stones on the police party on duty causing injuries to the policemen. As the strikers behaved in an unruly manner, a lathi charge was ordered and eight persons were rounded up. A case under sections 147, 332 and 323, Indian Penal Code was registered by the Police. Three policemen sustained simple injuries as a result of the stone-throwing and six strikers sustained simple injuries as a result of the lathi charge. They were treated in the General Hospital.

31st July 1958.—On the afternoon of 31st July, the strikers picketed in front of " The Hindu " Office in a peaceful manner. A police party was present at the spot to prevent untoward incidents. No incidents were reported.

1st August 1958.—At the request of the management, sufficient bundobust was provided, throughout the period of the strike, for the distribution of papers at Vani Mahal and Luz Corner, the two main distributing centres. In addition, bandobust was also provided at the Distributing Agent's house at Mylapore. Peaceful picketing continued. Slogans were shouted, but no employee was prevented from going to work nor was any one threatened. No cases of assault were reported in the night. The despatch of

parcels from the office was carried on as usual. The members of the Simpson Group Company Employees' Union also joined the strikers shouting slogans.

2nd August 1958.—Peaceful picketing continued. The usual police bandobust was provided. A complaint was made by Sri Gurunathan, Sport Editor of "The Hindu" that he was assaulted in a lane adjoining "The Hindu" office. He could not identify any of his assailants, though he stated that they were employees of the "Hindu" on strike. A case under sections 341 and 323, Indian Penal Code has been registered and is under investigation. No other complaints were lodged with the police.

3rd August 1958.—Peaceful picketing continued. The strikers were joined by the workers of Simpson & Co., The Mail, Express Newspapers and Oldhams Battery, and members belonging to the T.N.C.C. Labour Union. Adequate police precautions were taken. Attempts by strikers to prevent vehicles entering or leaving the office were prevented by the police. The Managing Editor, Sri K. Srinivasan asked for police escort to leave the office. The escort was provided by the Assistant Commissioner of Police, Central Range, who was present at the spot. No incidents were reported.

4th August 1958.—There was an increase in the number of demonstrators who were joined by workers from the Simpson Group Companies, as it was a holiday for them. Adequate police precautions were taken.

Vehicles entering and leaving office were given necessary facilities. Attempts to mob two cars carrying the Editor and Manager were averted by the prompt intervention of the police.

Sri Parthasarathy, Assistant Editor, preferred a complaint at 3-30 p.m. at Triplicane Police Station that he was prevented by the crowd from entering the "Hindu" office at about 1-25 p.m. It is not clear why he did not seek the help of the police who were on duty at "The Hindu" office area.

Sri K. Narasimhan, Assistant Editor, complained that he was prevented by the strikers from entering the office at about 1-30 p.m. Enquiries were made by the police, but the miscreants could not be traced.

At about 6 p.m. four lorries loaded with copies of newspaper bound for the railway stations, started leaving the office premises. Three of them left without any interference. When the fourth lorry was leaving the premises at about 6-50 p.m. the crowd suddenly set upon the driver and occupants, assaulted them and caused damage to the lorry. The police on duty intervened promptly and prevented further damage. The driver and the occupants who sustained minor injuries were immediately sent to the hospital in a police ambulance. A case has been registered under sections 342 and 323, Indian Penal Code and is under investigation. Three accused persons have been arrested.

5th September 1958]

At about mid-night on that day a message was received by Government from Sri K. Srinivasan, Managing Editor, that he felt unsafe to leave the office without police bundobust. Under instructions from the Government, the Commissioner of Police accompanied by the Deputy Commissioner of Police (Law and Order) immediately proceeded to the "Hindu" Office. On reaching there, they learnt from the Inspector on duty that though an assurance of sufficient bandobust and escort was given to Sri Srinivasan by the Inspector, Sri Srinivasan was unwilling to leave the premises unless the Commissioner of Police was personally present. Sri Srinivasan informed the Commissioner of Police that he had requested the presence of the Commissioner of Police not for the purpose of escorting him home, but for giving an assurance to loyal workers. Sri Srinivasan told the Commissioner of Police that the morale of the loyal workers was breaking down and requested him to address the workers and to encourage them to continue to work. The Commissioner of Police declined to do so, stating that it was no part of his functions to address loyal labourers to continue to work. Sri Srinivasan then decided to suspend the publication of the paper and left the office.

5th August 1958.—At the request of the management police escort was provided for the transport of 38 employees at about 9-30 a.m. In regard to the remaining employees numbering about 200, the management wanted them to be transported in police vehicles as they had no vehicles at their disposal. Arrangements were made to secure the required number of vehicles and by about 3 p.m. all the workers were able to leave the office.

It would be seen from the above account that the Government had provided every possible protection and bandobust to "The Hindu" and that the complaint of lack of Police protection is totally unsustainable.

APPENDIX II.

[Vide answer to starred question No. 75-I asked by Sri A. Vedarathnam at the meeting of the Legislative Assembly held on 5th September 1958, page 243 supra.]

STATEMENT SHOWING THE NUMBER OF ARTIFICIAL INSEMINATION CENTRES THAT EXIST IN THE STATE.

Artificial Insemination Centres under the All-India Key Village Scheme.

1 Hosur Cattle Farm (Salem district).

2 Kangayam (Coimbatore district).

3 Vellakoil (Coimbatore district).

[5th September 1958

Artificial Insemination Centres under the All-India Key Village Scheme—cont.

4 Cinchona (Coimbatore district).
5 Malayandipatinam (Coimbatore district).
6 Mulanur (Coimbatore district).
7 Sankarandampalayam (Coimbatore district).
8 Chikkanapuram (Coimbatore district).
9 Sivagiri (Coimbatore district).
10 Pettaikalipalayam (Coimbatore district).
11 Sultanpet (Coimbatore district).
12 Pongalur (Coimbatore district).
13 Neikarapatti (Madurai district).
14 Idayakottai (Madurai district).
15 Thoppampatti (Madurai district).
16 Kallimandyam (Madurai district).
17 Ayakudi (Madurai district).
18 Chidambaram (South Arcot district).
19 Poonamallee (Chingleput district).
20 Kilacheri (Chingleput district).
21 Kancheepuram (Chingleput district).
22 Chinnadharapuram (Tiruchirappalli district).
23 Tennilai (Tiruchirappalli district).
24 Nagercoil (Kanyakumari district).

Artificial Insemination Centres in urban areas.

1 Madras.
2 Chingleput (Chingleput district).
3 Vellore (North Arcot district).
4 Cuddalore (South Arcot district).
5 Salem (Salem district).
6 Tiruchirappalli (Tiruchirappalli district).
7 Tanjore (Tanjore district).
8 Coimbatore (Coimbatore district).
9 Erode (Coimbatore district).
10 Madurai (Madurai district).
11 Virudhunagar (Ramanathapuram district).
12 Tirunelveli (Tirunelveli district).

5th September 1958]

Artificial Insemination Centres started under Community Development/National Extension Service Programme.

1 Tirukalikundram (Chingleput district).
2 Pinnalur (South Arcot district).
3 Krishnagiri (Salem district).
4 Kumbakonam (Tanjore district).
5 Mayuram (Tanjore district).
6 Malayampalayam (Coimbatore district).
7 Kavandapady (Coimbatore district).
8 Bungalawpudur (Coimbatore district).
9 Vadipatty (Madurai district).
10 Dharmathupatti (Madurai district).
11 Cheranmahadevi (Tirunelveli district).

Artificial Insemination Centre started under Cross-Breeding Scheme.

1 Ootacamund (Nilgiris district).

STATEMENT SHOWING THE PLACES WHERE THE ARTIFICIAL INSEMINATION CENTRES ARE TO BE STARTED SHORTLY DURING THE CURRENT YEAR UNDER DIFFERENT SCHEMES.

Artificial Insemination Centres under the All-India Key Village Scheme.

1 Palayam (Madurai district).
2 Vedasandur (Madurai district).
3 Vadugapatti (Coimbatore district).
4 Muthur (Coimbatore district).

Artificial Insemination Centres in urban areas.

1 Kodaikanal (Madurai district).
2 Tiruppur (Coimbatore district).
3 Pollachi (Coimbatore district).

Artificial Insemination Centres under Community Development/National Extension Service Programme.

1 Panruti (South Arcot district).
2 Mallavadi (North Arcot district).

[5th September 1958

APPENDIX III.

[Vide answer to starred question No. 75-C asked by Sri P. G. Manickam at the meeting of the Legislative Assembly held on 5th September 1958, page 245 supra.]

Statement showing the amounts allotted to the districts for grant of loans under the Intensive Manuring Scheme during 1958–59 for paddy and sugarcane.

Name of the district. (1)	Amount allotted. (2)
	RS. IN LAKHS.
PADDY.	
Chingleput	5·00
Coimbatore	1·30
Kanyakumari	1·10
Madurai	5·30
North Arcot	0·10
Ramanathapuram	0·25
Salem	0·50
South Arcot	3·00
Tanjore	16·00
Tiruchirappalli	4·20
Tirunelveli	3·25
Total	40·00
SUGARCANE.	
Coimbatore	3·50
Madurai	2·00
North Arcot	1·00
Salem	1·50
South Arcot	2·00
Tanjore	1·00
Tiruchirappalli	3·00
Total	14·00

NOTE.—An amount of Rs. 6 lakhs is kept as reserve for additional allotments to needy districts during the course of the year.

Appendix IV.

[*Vide* answer to starred question No. 75-E asked by Sri P. G. Manickam at the meeting of the Legislative Assembly held on 5th September 1958 page 246 *supra*.]

(*a*) A statement showing the names of districts and the acreage covered in each district by the Japanese method of Paddy cultivation separately for the years 1957–58 and 1958–59 is given below :—

JAPANESE METHOD OF PADDY CULTIVATION.

Acreage covered during 1957–58 (*April* 1957 *to March* 1958).

District and jurisdiction of District Agricultural officers. (1)	*Paddy.* (2) ACS.	*Cholam.* (3) ACS.	*Cumbu.* (4) ACS.	*Ragi.* (5) ACS.	*Other millets.* (6) ACS.	*Cotton.* (7) ACS.
Tanjore district—						
Tanjore	179,872·00	..	16·00	77·00	..	..
Mayuram	86,678·00	..	..	..	..	..
Pattukottai	261,409·00	..	..	..	..	..
Kumbakonam	60,996·77	..	..	..	..	..
Coimbatorore district—						
Coimbatore (North)	45,443·00	49,785·00	37,200·00	35,339·00	..	..
Coimbatore (South)	12,059·85	28,658·25	3,018·00	15,016·37	..	..
Tiruchirappalli district—						
Tiruchirappalli (South)	47,430·00	4,223·00	1,131·00	2,238·00	26,481·00	..
Do. (North)	30,919·25	4,488·50	2,947·00	898·00	2,216·00	..
North Arcot district—						
Vellore (South)	5,698·03	184·40	..	85·00	..	..
Do. (North)	7,662·75	..	..	..	..	..
Ramanathapuram district—						
Ramanathapuram (West)	10,670·10	1,046·00	2,073·00	602·28	352·00	940·00
Do. (East)	6,433·39	234·16	1,381·20	696·75	342·35	..
Salem district—						
Salem	14,127·40	29,900·15	4,622·80	9,725·72	7,832·00	..
Krishnagiri	19,177·00	2,509·50	..	103,500·70	..	..
Tirunelveli district—						
Tirunelveli (South)	63,234·86	..	..	..	1,593·85	..
Do. (North)	32,938·00	7,945·00	1,982·00	1,031·75	100·00	..
South Arcot	167,866·10	6,036·00	5,689·25	7,766·30	9,095·25	..
Chingleput	75,708·46	12,000·00	..	1,658·00	..	..
Nilgiris	1,128·00	..	..	..	..	..
Kanyakumari	13,557·86	..	..	..	..	..
Madurai	24,137·00	14,053·00	2,134·00	1,535·00	..	..
Total ..	**1,167,147·00**	**1,61,062·00**	**62,194·00**	**180,169·00**	**48,012·00**	**940·00**

Acreage covered during 1958–59 (April and May 1958).

District and jurisdiction of District Agricultural Officers. (1)	*Paddy.* (2)	*Cholam.* (3)	*Cumbu.* (4)	*Ragi.* (5)	*Other Millets.* (6)	*Cotton.* (7)
	ACS.	ACS.	ACS.	ACS.	ACS.	ACS.
Tanjore district—						
Tanjore	..	..	..	..	..	..
Kumbakonam	..	..	..	..	..	..
Mayuram	..	..	..	..	..	..
Pattukottai	..	..	..	..	..	..
Coimbatore district—						
Coimbatore (North)	2,096.47	2,837·00	4,030·85	1,500·20	1,103·25	..
Do. (South)	621·45	10,853·00	1,554·00	1,964·00	268·00	..
Tiruchirappalli district—						
Tiruchirappalli (North)	194·00	270·00	6·00	102·00	9·00	..
Do. (South)	113·50	28·50	16·00	..	2·50	..
North Arcot district—						
Vellore (South)	210·15	..	..	..	149·65	..
Do. (North)	471·95	..	..	..	..	..
Ramanathapuram district—						
Ramanathapuram (West)	250·20	433·00	1,317·10	391·10	..	..
Do. (East)	683·50	..	..	38·36	..	..
Salem district—						
Salem	1,206·95	3,046·05	2,795·75	599·75	..	..
Krishnagiri	1,055·00	635·00	3,170·00	1,360·00	1,180·00	..
Tirunelveli district—						
Tirunelveli (South)	3,499·57		..	..	323·64	..
Do. (North)	1,408·00	3,147·37	..	..	..	..
South Arcot	2,390·25	14·00	406·75	365·00	59·00	..
Chingleput	5,395·00	105·00	..	840·00	205·00	..
Ootacamund	8 00	..	..	2·00	..	..
Kanyakumari	3,586·00	..	..	..	..	..
Madurai	219·50	679·00	193·00	161·00	..	..
Total for the State ..	23,409·00	22,048·00	13,489·00	7,323·00	3,300	..

NOTE—The figures in respect of Kanyakumari alone are for April 1958. The report for May 1958 is still awaited.

(*b*) The District Agricultural Officers and the Agricultural Demonstrators in the non-development areas and the Extension Officers for Agriculture in the Development areas are doing effective propaganda on the Japanese method of cultivation and on its economic gains. Demonstration plots are also run by the Department to show the cultivators the technique of this method. Film shows are organized by the Madras Information Service to bring home to the ryots the advantages of adopting such improved methods of cultivation.